

பிரதமரின் பிறந்தநாள்

# கல்கி

KALKI 21-11-82 ரூ 120

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேலை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.
காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.




**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுசில டிட்டர்ஜெண்ட பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்

<u>அதிக</u>
வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-RIN.35-2012 TM

**போலி டாக்டருக்கு உடந்தை :**
**ஹவுஸ் சர்ஜன்கள் இருவர் சஸ்பெண்ட்**

சென்னை, நவ. 6
சென்னை கல்லூரி மாணவர் ஒருவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சில ஹவுஸ் சர்ஜன்களோடு வார்டுக்குள் செல்வதும் தானும் ஒரு ஹவுஸ் சர்ஜனைப் போல் நடந்துகொள்வதுமாக இருந்தார் என்று சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வருக்குப் புகார் கொடுக்கப்பட்டது. அவர் அப்புகாரை போலீஸ் விசாரணைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதனிடையில் அந்த மாணவருக்கு உடந்தையாக இருந்ததாக இரண்டு ஹவுஸ் சர்ஜன்களையும் தற்காலிக வேலை நீக்கம் செய்திருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

(-தினமணி)

**....இது செய்தி**

இந்தச் செய்தியைப் படித்தவுடன் வியப்புத்தான் ஏற்பட்டது. வெளியிலிருந்து வரும் ஒரு இளைஞன் பொது மருத்துவமனைக்குள் நுழைந்து ஹவுஸ் சர்ஜனைப் போல் நடித்து நோயாளிகளுக்கு மருத்துவம் செய்ய முடியுமா? இவரை நம்பி நர்ஸ்களும் எப்படி ஊசியோ, மருந்தோ கொடுத்தார்கள்?

அது சரி. இந்த இளைஞர் ஏன் இப்படிச் செய்தார்? நண்பர்களுக்குள் வேடிக்கையாக, ''பாரேன். நான் ஜி. எச்.சுக்குள்ள போயி ஒரு டாக்டர் மாதிரி வெற்றிகரமாக நடிச்சு எல்லாரையும் நம்ப வைக்கிறேன்'' என்று கட்டை விரலை உயர்த்தினரா?

இது எப்படிச் சாத்தியம்? முதலில் இதைப் பற்றி மருத்துவக் கல்லூரியில் கேட்டபோது அவர்கள் சார்பில் கூறப்பட்ட வாதம்:

''அவர் மற்ற ஹவுஸ் சர்ஜன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு இதுபோலச் செய்திருக்கிறார். விசாரித்ததற்கு நான் சமூக சேவையில் ஆர்வம் உள்ளவன். அதனால் இப்படிச் சமூக சேவை செய்தேன் என்றார்!''.

நோயாளிகளின் உயிருடன் விளையாடுவதா சமூக சேவை? பிறகு அந்த இளைஞனுடைய வீட்டைத் தேடிப் போனபோது கிடைத்த தகவல்கள்:

ப்ார்த்திபன் எனும் அந்த இளைஞர் சென்னையில் உள்ள குருநானக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவர். இசையிலும், ஆர்வம் உடையவராம்.

''நல்ல குடும்பத்தில் பிறந்தவன், காலேஜ் மாகஸீன்மூலமே ஸ்பெஷலாகக் குறிப்பிடும் அளவுக்கு நல்ல பெயர் வாங்கியவன். இப்படி ஒரு பொறுப்பற்ற காரியத்தைச் செய்வானா? நீங்களே சொல்லுங்கள்'' என்று முணுமுணுக்கிறார்கள் அவருடைய வீட்டார்.

''பேப்பரில் இந்த நியூஸைப் பார்த்த எங்கள் சொந்தக்காரர்கள் அத்தனை பேரும் போன், நேரில் என்று விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அநியாயமாக ஒன்றும் தெரியாத எங்கள் பையனின் பெயரை இப்படிக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி வைத்திருக்கிறார்கள்.

''அவன் ரொம்ப 'ரிசர்வ்' டைப். அதிர்ந்து பேசத் தெரியாதவன்.

''அதனால் எங்களுடைய துயரத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு அவனைத் தேற்றினோம்.''

இவர்கள் மேலும் கூறியவை.


பார்த்திபன் டிரம் நன்றாகவாசிப்பவராம். அதனால் தம்முடைய கல்லூரியிலேயே பல பரிசுகள் வாங்கியிருப்பதோடு, அனைத்துக் கல்லூரிப் போட்டிகளிலும், விழாக்களிலும் கலந்து கொள்வாராம். அப்படி அறிமுக மானவர்கள்தான் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இருவரும். அவர்களுடைய அறைக்குப் போவது, சேர்ந்து சாப்பிடுவது, சினிமாவுக்குப் போவது என்று இருப்பார்கள்.

சென்னையில் உள்ளTamilnadu youth Association எனும் இளைஞர் சங்கத்தின் தலைவராக அந்த மருத்துவக் கல்லூரி மாணவர் இருக்கிறாராம். அவரை வரப்போகும் தேர்தலில் எப்படியாவது முறியடித்து விட வேண்டும் என்று நினைத்த எதிர் அணியினர் இப்படி வீண் பழி சுமத்திப் பேரைக் கெடுத்துவிட்டார்கள் என்கிறார்கள்.

'பொது மருத்துவ மனையில் மருந்துகளைத் திருடி விற்றார்' என்றுகூட கம்ப்ளெய்ன்ட் இருக்கிறதாம்.

இதைப் பற்றி ஒரு வழக்கறிஞரிடம் விசாரித்தபோது அவர் கூறினார்: ''இப்படி ஒரு பையன் செய்கிறான் என்றால் அதற்கு என்ன மோடிவ்? அவன் ஹவுஸ் சர்ஜனாக நடித்தான் என்பதற்கு என்ன சாட்சி? மருந்துகளைத் திருடி விற்றான் என்றால் எங்கே விற்றான்? அப்படி ஏதாவது போலி டாக்டராக நடித்து ஊசிபோட்டு வைத்தானா? அதை இவர்கள் கைப்பற்றினார்களா? இந்தக் குற்றச்சாட்டு நிரூபணமாவது இவை யெல்லாவற்றையும் பொறுத்தே அமையும்.''

-திருபா



# மருத்துவக் கல்லூரியினுள் நடந்தது என்ன?

# கலைஞரும் எம்.ஜி.ஆரும் சந்தித்தபோது...



✱ கலைஞர் - எம்.ஜி.ஆர். சந்திப்பு (படம்: [illegible])



✱ அருண்ஷோரி

○ டி. ஆர். கோபாலகிருஷ்ணன், கரூர்

? மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் தகராறு ஏற்பட்டதற்கு தீவிரவாதிகள்தான் காரணம் என்று பொருள்படும் வகையில் சுஜாதா எழுதுவதை எப்படி கல்கி பிரசுரிக்கிறது, புரியவில்லையே?

! உங்களுக்குக் கதையே புரியவில்லை! ஒரு வேளை கதையைப் படிக்காமலே ''யாரோ'' எழுதச் சொன்னதன் பேரில் எழுதுகிறீர்களோ என்னவோ! சுஜாதாவின் கதைக்கும் மண்டைக்காடு சம்பவங்களுக்கும் சம்பந்தமில்லை. அயல்நாட்டிலிருந்து திரும்பும் கனகசபை மனைவியைக் காணாமல் தேடுகிறான். ஊரில் பல வதந்திகள் பரவி அதன் விளைவாக ஒரு mass hysteria உருவாகி மதப் பூசல்களுக்கும் கலவரங்களுக்கும் வித்தாகி விடுகிறது. ஒரு தனி மனிதனின் பிரச்னை எப்படி சமுதாயப் பிரச்னைக்கே சில சமயம் அடிகோலி விடுகிறது; இதில் ஒரு பாவமும் அறியாத சிலர் எப்படி பலியாகிறார்கள் என்பதை மிக அற்புதமாக எழுதி வருகிறார் கதாசிரியர். சுஜாதாவின் மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்று 'விடிவதற்குள் வா'. முடிவதற்கு முன்பாகவே அதன் சிறப்பு உணர்ந்து மலையாளப் பத்திரிகை ஒன்று மொழி பெயர்த்துத் தொடர் கதையாகப் பிரசுரித்து வருகிறது!

○ ஆர். ஜெயலக்ஷ்மி, நெப்பத்தூர்

? சமீபத்தில் உங்களுக்குப் பிடித்த இசை எது?

! Flight to Venus என்ற தலைப்பில் அமைந்த மேற்கத்திய இசைத்தட்டு. விண்வெளிப் பயணத்தின்போது எழக்கூடிய ஒலிகளையே

✱ ''வெள்ளிப் பயணம்''



இசையாக்கிய Boney-M-ன் அற்புத சாதனையை வெகுவாக ரசித்தேன்.

○ இளஞ்சேரன், கோபி

? மத்திய அரசு நோட்டு அடிப்பதால் மத்திய அரசு ஊழியர்களுக்குப் பணம் தருகிறது என்று நம் முதல்வர் கூறியது பற்றி?

! இரண்டுக்கும் நேரடித் தொடர்பு இல்லை எனினும் முதல்வர் எம். ஜி. ஆர். கூறியதில் அடிப்படை நியாயம் உண்டு. அதிகரித்துக்கொண்டே போகும் அரசுச் செலவினங்களை மத்திய அரசினால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது தெளிவு. பட்ஜெட்டில் துண்டு விழும் என எதிர்பார்க்கப்படும் தொகைக்கும் அதிகமாகவே துண்டு விழுவதும் இதற்காக துணை பட்ஜெட் சமர்ப்பித்து நாடாளு மன்ற ஒப்புதல்பெறுவதும் வழக்கமாகி விட்டன. துண்டு விழும் தொகைகளை யெல்லாம் நாஸிக் அச்சக்கூடம்தான் சமாளிக்கிறது. அதன் மூலம் விலைவாசிகளை உயர்த்தி நம்மை அவதிக்குள்ளாக்குகிறது.

○ அ. இருபாகரன், செம்பியம்

? கலைஞரும் எம். ஜி. ஆரும் சந்தித்துக்கொள்ளும்போது பரபரப்பை ஏற்படுத்துகிறார்கள். மறுநாள் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்கிறார்களே! ஏன்?

! சந்திக்கும்போது சிரித்துப் பேசுவது பண்பாடு. பிரிந்த பின் தாக்குவது அரசியல். சந்திப்பிலே கண்ட சிரிப்பைச் சில பத்திரிகைகள் பரபரப்புச் செய்தியாக்குவது வியாபாரம்.

○ அ. கல்குல் ஜமால், திருமங்கலக்குடி

? பிரதமர் இந்திராவும் எக்ஸ்பிரஸ் கோயங்காவும் சேர்ந்து விடுவார்கள் போல் தோன்றுகிறதே?

! அருண்ஷோரி விலகிவிட்டதால் மட்டும் இப்படி முடிவு கட்டுவதற்கில்லை. அருண்ஷோரி கோயங்காவிடமிருந்து மாறுபட்டுக் கருத்துத் தெரிவிக்கலாம். தவறில்லை. ஸ்தாபனத்துக்குள்ளேயே கருத்துச் சுதந்திரத்தை கோயங்கா மதிக்கிறார் என்றுதான் அர்த்தம். கோயங்கா சில சமயமும் அருந்ஷோரிசிலசமயமும் வளைந்துகொடுக்கலாம். ஆனால் காரியாலயத்துக்குள் நடந்த வாக்கு வாதங்களை வெளியே பலர் அறிய அருண்ஷோரி பரப்ப வேண்டிய அவசியமென்ன? இங்குதான் இருவரிடையேயும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்க வேண்டும். அருண்ஷோரி விலகினாலும் எக்ஸ்பிரஸ் என்றும்போல் அச்சமற்ற ஜனநாயகப் பணியாற்றுமென நம்புவோம்.

○ இரணியல்லே, தூத்துக்குடி

? முதல்வர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு மக்கள் சக்தியைத் திரட்டி வேலை நிறுத்தங்களுக்கு எதிராகப் போராடுவேன் என்று ஒரு முதல்வர் சொல்லலாமா?

! பேஷாகச் சொல்லலாம். அது அவரது கொள்கைப் பிடிப்பைக் காட்டுகிறது: தன்னம்பிக்கையை உணர்த்துகிறது: நியாய உள்ளத்தையும் தெரிவிக்கிறது. ஆனால் சில. இளங்கோ தரப்பினரைச் சந்திக்கவே மாட்டேன் என்று முதல்வர் பிடிவாதம் செய்வது சரியில்லை. சந்திப்பு நற்பயன் தரும். இப்போது நாளைக்கு இரண்டுமணி நேரம் அரசுக் காரியாலயங்களில் மீட்டிங்கில் வீணாவது நிற்கும்.

○ ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்

? பாகிஸ்தான் அதிபர் ஜியாவின் டில்லி விஜயத்தின் பின்னணி என்ன?

! 'டில்லியுடன்சமாதானம் செய்து கொண்டால் அமெரிக்கா பாகிஸ்தானுக்குத் தரும் ஆயுதங்கள் ஆப்கானிஸ்தானத்துக்கு எதிராகத்தான் என்று உறுதிப்படும்: மேலும் அமெரிக்க உதவி கிடைக்கும்' என்பது அவர் உள் நோக்கமாக இருக்கலாம். எனவே, டில்லி, பாகிஸ்தானுடன் நட்புறவுக்குப் பாடுபடும்போதே ருஷ்யாவிடம் உள்ள நல்லுறவை ஆப்கன் பிரச்னைக்குத் தீர்வு காணவும் வன்மையாகப் பயன்படுத்த வேண்டும்.

○ ஜி. குமரேசன், பாண்டமங்கலம்.

? ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்குக் காரணம் வாசகர்களா? எழுத்தாளர்களா? பத்திரிகையில் வேலை செய்யும் தொழிலாளர்களா? உதவி ஆசிரியர்களா? பத்திரிகை உரிமையாளரா? ஏஜண்டுகளா? விளம்பரதாரர்களா?

! ஒரு செடியின் வளர்ச்சிக்குக் காரணம் வித்தா, நீரா, மண்ணா, வேரா, முளையா, தண்டா, இலையா?

○ மோ.க. இரத்தினசாமி, மோகனூர் (சேலம்) ★


? எனக்குக் கோபம் 'சட்'டென்று வந்துவிடுகிறது. சாந்தம் அப்படி விரைவாக வருவதில்லை. ஒரு வழி சொல்லுங்கள்!

! சவாசனம் தெரியுமா? ஓரிரு நிமிஷம் மல்லாக்கத் தரையில் படுத்து உடம்பைத் தளர்த்துங்கள். கண்களை மூடி ஓம்சாந்தி என்று திரும்பத் திரும்ப மனசுக்குள் கூறியவாறே நரம்புகளை, தசைகளை, மனத்தை, மூளையை, இதயம் போன்ற அனைத்து உறுப்புக்களை அமைதிப்படுத்துங்கள். வேறு பல யோகாசனங்களையும் பயிலலாம். பலன் உண்டு.


★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
மோ. க. இரத்தினசாமி
1, புதுத் தெரு, மோகனூர்-637015
சேலம் (மா.வ.)

# நீங்கள் கேட்டவை

# இளம் வயதின
# ஷர்ட்



உங்கள் விமல் சில்லறை
வியாபாரியிடம் கேட்டு
வாங்குங்கள்:
விமல் அவுட்டோர்ஸ், அவென்யு,
சூப்பர்மேன், எஜுகேட்டர்,
ஸ்ப்போர்ட்டி, மேன்டரீனு,
ஸோஃப்ரீனு.



Mudra/RTI/671 TAM.

# ருக்கான விமல்



இளம் வயதினருக்கென கண்ணைக்
கவரும் பல்வேறு விதமான
ஷர்ட்டிங்குகள். பிரிண்டுகள்,
ப்ளெய்ன்கள், கட்டங்கள், கோடுகள்,
பேனல்கள் அவைகளில் 1600க்கு மேல்.


VIMAL®
A RELIANCE PRODUCT

## உயர் ரக
## ஷர்ட்டிங்குகள்

இந்தியாவின் மிக நவீன டெக்ஸ்டைல்
தொழிற்சாலையிலிருந்து



# பிரதமரின் பிறந்தநாள்



✱ வி. பாலு



✱ டாக்டர் நம்பி

நவம்பர் 19 நமது பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்ததினம். வயது 65 முடிகிறது. பிறந்தநாள் வாழ்த்துக்களை அவருக்கு தெரிவித்துக் கொள்வோம்.

காந்தி நேருவுக்குப் பிறகு பலராலும் பெரிதும் விமர்சிக்கப்படுகின்ற தலைவர் இந்திரா காந்தி. இதோ நம்மிடையே இருக்கும் சிலரின் அபிப்பிராயங்கள்.

**டாக்டர் எஸ். நம்பி**

இந்திரா காந்தி திறமை மிக்கவர், துணிச்சலாக எந்த முடிவையும் எடுக்கக்கூடியவர். அரசியல் நெளிவு சுளிவுகளைத் தெரிந்த ராஜதந்திரி என்ற கருத்தில் யாருக்குமே சந்தேகம் இருக்க முடியாது. இந்திராவின் அயல் நாட்டுக் கொள்கை பாராட்டத் தக்கது. இன்று சர்வதேச அரங்கில் பெரிதும் பேசப்படும் பெண்மணி மட்டுமல்ல; ரொம்ப பாப்புலர் ஆனவரும் கூட! அமெரிக்கா பக்கமோ ரஷ்யா பக்கமோ சாயாது நேருவின் நடுநிலைக்கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற சிறந்த தலைவி! இந்த நாட்டுக்கு இந்திராவை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? எதிர்க் கட்சிகள் பிரகாசமாக இல்லை. மனோதத்துவ ரீதியாக ஒரு விளக்கம்: இந்திராவிடம் நாம்தான் இந்த நாட்டை ஆளவேண்டும் என்ற எண்ணம் நிறைய இருக்கிறது. அவரது நடவடிக்கைகள் பரம்பரை ஆட்சி முறைக்கு அடிக்கோலுகிறதோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. ராஜீவ் காந்தியின் அரசியல் பிரவேசம் ஓர் அதிர்ச்சி! திறமை இல்லாத ராஜீவ் அரசியலில் திணிக்கப்படுவது வரவேற்கத் தக்கதல்ல!

**தெய்வநாதன்**

நோபுள் சலூன் உரிமையாளர்

அந்த அம்மா இந்திராவின் ஆட்சி ரொம்ப நல்லா இருக்கு. அந்த அம்மா மட்டும் இல்லாட்டா வெளி நாட்டுக்காரங்க நம்ம மேலே படையெடுத்துடுவாங்க! சஞ்சய் காந்தி போனதுக்கு அப்புறம் அந்த அம்மா அசந்துபோனாலும் கூட மனத்திலே தளர்ச்சி இல்லை! அணுகுண்டு வெடிச்சது அந்த அம்மாதான். நாம் வல்லரசு ஆயிட்டோம், நம்மிட்ட எந்த வெளி நாடும் வால் ஆட்ட முடியாது! இந்திரா காந்திட்டதான் நிறைய திறமை இருக்கு. அதனாலதான் அந்த அம்மாவக் கண்டதும் எல்லாரும் அடங்கிப் போறாங்க.

**வி. பாலு**

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்

நாற்காலி இடைத்த
நாலாவது நிமிடத்திலேயே
புத்திர வாஞ்சை கொள்ளும்
புதிய தலைவர்கள்—

அதில் இந்திரா காந்தி அம்மையார் முதலானவர் என்று சொல்லலாம்! வேறு எந்தத் தலைவரும் வளருவது அவருக்குப் பிடிக்காது. 'சோ' சொன்னது போல கைதூக்குபவர்கள் தான் அவருக்குத் தேவை. தலை தூக்குபவர்கள் அவருக்குத் தேவையில்லை!

வடக்கு — தெற்கு இந்த உணர்வு இந்திராவுக்கு ரொம்ப அதிகம். இந்திராவின் ஆட்சியில் தொழில் வளம் என்ன கண்டு

✱ காசிம்



✱ தெய்வநாதன்



✱ கங்கா ராமமூர்த்தி



இருக்கிறது தென் இந்தியா? யோசித்துப் பாருங்கள்! இப்பக்கூடப் பெரியகுளம்தேர் தலுக்குப் பிறகு கலர் பிலிம் தொழிற்சாலை ஊட்டியில் தொடங்கப்பட வேண்டியது உ. பி.க்குப் போயிருக்கிறது. பழி வாங்குகிற உணர்வு அவர் ரத்தத்தோடு ஊறியது.

'எந்த நாட்டில்தான் ஊழல் இல்லை?' — இப்படிக் கேட்டார் இந்திரா. நகர்வாலா மாருதி ஊழல்கள் ஊர் அறிந்தவை. மக்கள் மறந்து இருக்கலாம்! இந்த நாட்டின் பெரிய தலைவலி மக்களின் மறதிதான்.

**காசிம்**

ஜஸ்ஹவுஸ் ரிக்ஷாக்காரர்

டெல்லியில அவுங்க ஏதோ மந்திரியாஇருக் காங்கன்னு நினைக்கிறேன். நேருவோட மகன்னு எனக்குத் தெரியும். இரண்டு மூணு தடவை மெட்ராஸ் வந்தபோது பாத்து இருக்கேன். எமர்ஜன்ஸி காலத்தில எத்தனை கேடிகளை, கொள்ளை லாபக்காரர்களை அந்த அம்மா பிடிச்சுப் போட்டாங்க. ஏழைகள்னு அந்தம்மாக்கு உசிருங்க! இருபது அம்சத் திட்டம் என்னு நல்ல திட்டம்! அந்த அம்மா மேல அபாண்டம் சொன்னு அழுகிப் போயிடுவாங்க.

**கங்கா ராமமூர்த்தி**

குடும்பத் தலைவி

வீட்டை நிர்வகிக்கவே கஷ்டப்படும் காலத் தில் ஒரு பெண்மணி நாட்டை — அதுவும் பல கலாசாரங்களை— மத, இன பேதங்களைக் கொண்ட உலகின் பெரிய குடியரசு நாட்டை நிர்வகிப்பது ரொம்பக் கஷ்டம்! அதைத் திறம்படச் செய்கின்ற இந்திரா அம்மையார் பாராட்டத் தக்கவர்.

திட்டங்களைப் போடுவதில் கெட்டிக்காரர். காகித அளவிலே அழகாயிருப்பது காரிய அளவிலே எவ்விதமெல்லாம் உருமாறிச் செயல்படுகிறது? இருபது அம்சத் திட்டம் நடுத்தர மற்றும் ஏழை மக்களுக்கு எவ் வளவோ உபயோகரமானது! வறுமையைப் போக்க வேண்டும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இரண்டும் இந்திராவின் கோஷங்கள்.

சிப்பாய் பொம்மைகளை விருப்பம் போல் நகர்த்தி விரும்பியபடி விளையாடும் சாயல் அரசியலிலும் தெரியும்போது மனத்துக்கு ரொம்பக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அதே நேரத்தில் எல்லா நாட்டுடனும் நட் புறவு பாராட்டி நேருவைப் போல ஒரு அரெஸ்டிங் பர்ஸனாலிட்டியாக இருப்பது அவருக்கு ஒரு பிளஸ் பாயிண்ட்.

பேட்டி: கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்

புகைப்படங்கள்: பால்ராஜ்

மேலட்டை வண்ணப்படம்: யோகா



## பகடை பனிரெண்டு

பகடை 1 கமலஹாஸன், படம் முழுக்கக் கராத்தே சண்டைபோட்டே நேரத்தைக் கழிக்கிறார்.

பகடை 2: கடத்தல்காரர்களின் ரகசிய 'மைக்ரோ பிலிம்' கமல் கையில் கிடைத்து விடுகிறது. அதை அவர்கள் திருப்பிக் கேட்க, கமல் தர மறுக்கக் கடைசிவரை போராட்டந்தான். போலீசாரிடம் அதை ஒப்படைத்தால் கதை வளராது என்கிற பயமோ?

பகடை 3: ஆரம்பக் காட்சிகளில் கமலின் தாயாராக வருகிறார் 'சிவந்தமண்' காஞ் சனா. ஐயோ பாவம் நார்!

பகடை 4: ஸ்ரீப்ரியாவைப் பொறுத்தவரை இது இ. மு. காலத்துப் படம். அதாவது இளைப்பதற்கு முன்பு எடுத்த படம். நடிப் பில் அலட்டல் இல்லை.

பகடை 5: வில்லன் சுதர்சன். ஜ்ஜ"க்காவைப் பிடித்தால் போதுமா? கமலைப் பிடிக்க வக்கில்லையே! வெறும் பூச்சாண்டி.

பகடை 6: சிரிக்க வைக்க வேண்டிய மகேந் திரனைச் சிக்கலில் மாட்டி விடுகிறார்கள். ஆகையால் சிரிப்பு பூஜ்யம்.

பகடை 7: கதை அபர்ணு நாயுடு. தூய வன் வசனங்கள் 'சப்'.

பகடை 8: சத்யப்பிரியா, மேஜர், அலம், ஐ. எஸ். ஆர்., மலேஷியா பொன்னையா (கராத்தே மாஸ்டர்), லீலா அத்தனை பேரும் பகடையை உருட்டியிருக்கிறார்கள்


பகடை 9: லக்ஷ்மண் கோரே காமிரா- வுக்கு ஒரு சபாஷ்.


பகடை 10: சண்டைப் பயிற்சியாளர் கிருபா சங்கரின் ஜாலங்கள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

பகடை 11: சக்கரவர்த்தி இசையில் பி. லீலா கூட பாடியிருக்கிறார்.

பகடை 12: உருட்டல், மிரட்டல், சண்டை கமல் இந்த நான்கையும் ரசிப்பவர்களுக்கு ஓ.கே!

-திரைஞானி


அமெரிக்கா
ரஷ்யா


வாலைச் சுருட்டி வெச்சுக்குவேன்...பாரு!
அகாலி தளம்
டமார்
மெஜாரிட்டி சமூகம்
பட்

கல்கி

1982 நவம்பர் 21
துந்துபி கார்த்திகை 5
மலர் : 41 இதழ் : 17



# பிறந்தநாள் பரிசு!

பிரதமருக்குப் பிறந்த நாள். மனப்பூர்வமாக வாழ்த்துவது தவிர நம்மால் அவருக்கு என்ன பிரமாத பரிசு அளித்துவிட முடியும்? ஆனால் பிரதமர் மனம் வைத்தால் தமது பிறந்த நாளையொட்டி நமக்குப் பல விலை மதிக்க முடியாத பரிசுகளை வழங்கலாம்!

பரிசு 1: சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் வறுமை ஒழிப்பை வெறும் கோஷமளவில் வைத்திருக்கும் ஜனநாயக சோஷலிசக் கொள்கையைக் கைவிடலாம். இதில் ஜனநாயக சுதந்திரமும் இல்லை, சோஷலிஸ செயல்முறையும் இல்லை என உணர்ந்து இந்த இரண்டும் கெட்டான் கொள்கையைத் தூக்கி எறியலாம்.

பரிசு 2: ஒரு கோடி செலவில் யானைகளை ஆசிய விளையாட்டுக்களில் பங்கு பெறத் தில்லிக்கு அனுப்பியுள்ளார் கேரள முதல்வர். இது போன்ற உற்பத்திக்கு உதவாத அரசுச் செலவினங்களுக்கு மத்தியிலும், மாநிலங்களிலும் முற்றுப்புள்ளி வைத்து, பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தி, விலைவாசிகளை ஸ்திரப்படுத்தலாம்.

பரிசு 3: வரிகளைக் குறைத்து, லாபத்தைப் புதிய தொழிலகங்களில் முதலீடு செய்வோருக்கு ஊக்கமளித்து, வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்க வழி வகுக்கலாம். இதன் மூலம் கறுப்புப் பணப் பொருளாதாரமும் ஒழியும்.

பரிசு 4: தொழில், வியாபாரம் போன்ற அனைத்திலும் அரசு தலையிடாமல், தொழில் — வியாபார — விவசாய அபிவிருத்திக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளை மட்டும் (மின் உற்பத்தி , நீர்ப்பாசனம், சாலைகள் போன்றவை) கவனிக்கட்டும். அரசின் முதல் கடமை ஆட்சி நடத்துவதுதான்.

பரிசு 5: கிராமப்புறங்களின் வளம் பெருகுமாறு விவசாயத் தொடர்புள்ள தொழில்களுக்கு முக்கியத்துவம் தரலாம். நம்மிடம் உள்ள வளங்களில் சிறப்பானது மக்கள்சக்தியே என்பதை உணர்ந்து அதனைத் திறம்படப் பயன்படுத்தவும் அதன் மூலம் இயற்கை வளங்களை உபயோகித்துக் கொள்ளவும் திட்டமிடலாம்.

பரிசு 6: சிறுவர்களையும் இளைஞர்களையும் புத்தகப் புழுக்களாக்கும் இன்றையக் கல்வி முறையை மாற்றி அமைத்து அவர்களைத் தொழில் தெரிந்தவர்களாகவும் சரீர உழைப்பின் உயர்வை உணர்ந்தவர்களாகவும் உருவாக்கலாம்.

பரிசு 7: பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக்கி, ஏழைகள் வாழ்க்கைத் தரத்தில் உயர முடியாமல் தடுக்கும் பர்மிட் லைசென்ஸ் முறையை ஒழித்துக்கட்டி, அதன் மூலம் லஞ்ச ஊழலையும் விடைபெறச் செய்யலாம்.

பரிசு 8: எதற்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்கும் மனப்பான்மையை மக்களிடம் புகுத்தாமல் சுய முயற்சியால் அவர்கள் மேம்பட வழிவகுக்கலாம்.

பரிசு 9: சுதந்திரமான பத்திரிகைகளே ஜனநாயகத்தின் முதுகெலும்பு என்பதை உணர்ந்து பத்திரிகைக் கட்டுப்பாடு சட்டங்களை மாநில அரசுகள் வாபஸ் பெறச் செய்யலாம்.

பரிசு 10: இங்கும் அயல் நாடுகளிலும் உள்ள நமது நல்லறிஞர்களின் ஆற்றல்களெல்லாம் தாய்நாட்டின் மேன்மைக்குப் பயன்பட ஆவன செய்யலாம்.

இந்தப் பரிசுகளைப் பிரதமர் நமக்குத் தந்தால் பதிலுக்கு ''நன்றி''. என்ற ஒப்பற்ற பரிசை நெகிழ்ச்சியோடு நாம் மட்டுமல்ல, எதிர்கால சந்ததியினரும் அவருக்கு அளிப்பார்கள்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்


# கோத்ரெஜ் ஸ்டோர்வெல்

## ஒரு விலை கூடிய அலமாரி சிக்கனமானதாக எவ்வாறு அமைகிறது!

நேர்த்தியான அமைப்பும், நீடித்த உழைப்பாற்றலும் பெற்று விளங்கிட, இப்போது கீறல் விழாத மேம்பட்ட மெருகு.

**நீடித்த உழைப்பாற்றல்:** கோத்ரெஜிடம் மட்டுமே உள்ள காற்றற்ற, தானே இயங்கும் மின்சார வண்ணப் பூச்சு முறை காரணமாக, ஸ்டோர்வெல் அனைத்தும் மேன்மையான மெருகுடன் துலங்குகிறது. அப்பழுக்கற்ற தாமான எஃகினால் தயாராவதால், துருப் பிடிக்காது என்ற உறுதியான நம்பிக்கை கிடைக்கிறது. ஸ்டோர்வெல் பல தலைமுறைகளுக்கு நீடித்து உழைக்கிறது.

**அதிகப்படியான பாதுகாப்பு:** கதவிலும் லாக்கரிலும் தகர்க்க முடியாத கோத்ரெஜ் பூட்டு. மறைவான கீல்கள், இறுக மூடிக் கொள்ளும் மும்முனைப் பூட்டுமுறை அமைப்பு, கோத்ரெஜ் மட்டுமே அளிக்கும் நூதன சிறப்பு.



கிடைக்கும் இந்த நன்மைகளால்: நீடித்த உழைப்பாற்றல், அதிகப்படியான பாதுகாப்பு, தேர்ந்தெடுக்கக் கூடுதல் வாய்ப்பு.

**தேர்ந்தெடுக்க கூடுதல் வாய்ப்பு:** சிதையாத, குறையற்ற ஆளுயரப் பிரதிபிம்பம் தெரிய முழு நீள (1,37 cm) வெளி நாட்டு 'ப்ளேட்' கண்ணாடி. அட்ஜஸ்ட் செய்யக் கூடிய ஷெல்ப்புகள் ஹட பார் துணி தொங்கவிடும் ராட், விருப்பத்திற்கேற்றபடி பல வகை இணைப்புகளுடன் கிடைக்கிறது. மூன்று வண்ணங்கள்— ஆலிவ்க்ரீன், ஸ்பெஷல் க்ரே, டீ (TA) க்ரே.

**எளிதில் கிடைக்கும் வசதி:** நாடெங்கிலும் உள்ள 400க்கும் அதிகமான விற்பனையாளர்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.


**கோத்ரெஜ்** மேம்பட்ட தொழில் நுட்பம் மற்றும் மதிப்பு.

ULKA-GS-1-82 TAM

CD TVS







பாரதி நூற்றாண்டு போட்டி

# டி.வி.எஸ் - 50 மொபெட்

## பரிசுத்திட்டம்

இதற்கென வந்து குவிந்துள்ள தபால்கள் ஏராளம். பரிசீலனை நடக்கிறது. இதற்கிடையில் வைரமுத்துவும் எம். ஏ. சுசீலாவும் இரு பாடல்களில் அடிக்கோடிட்டுத் தந்த பத்திகளையும் அதற்கு அவர்கள் கூறும் காரணங்களையும் காண்போம். தொடர்ந்து வரும் இதழ்களில் 'பகீரதன், கே. ராமமூர்த்தி, சரோஜினி வரதப்பன் ஆகியோரின் கட்டுரைகள் பிரசுரமாகும்.

## வழிகாட்டும் வரிகள்

**ப**ண்டிதத் தமிழாய் முடங்கிக் கிடந்த தாய் மொழியின் நாடி நரம்புகளில், புதிய குருதியோட்டத்தைப் பாய்ச்சிப் பல துறைகளிலும் பயன்படும் வண்ணம் உற்சாக வீச்சும், உத்வேகமும் நல்கியவன் பாரதிக் கவிஞன். அதனாலேதான், தாய்மொழி என்று சொன்ன அளவிலேயே உணர்ச்சிவசப்பட்டு நடுநிலை பிறழ்ந்துவிடாது, அறிவின் பயனாய் விளைந்த புறநோக்குப் பார்வை (objectivity) யுடன் மொழியை அணுகுவதும், விமரிசனம் செய்வதும் பாரதிக்குச் சாத்தியமாகிறது. இனிமையுடையது தமிழ், புலமை வளமுடையது தமிழ் — இவை 'உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை' என முதல் இரு பத்திகளில் ஒப்புக்கொள்ளும் கவிஞன், இத்துணைச் சிறப்பிருந்தும் ஊமையராய்ச் செவிடர்களாய்ப் பாமரராய் விலங்குகளாய்ப்பெயரளவில் தமிழரென வாழும் இழிநிலைக்கான காரணத்தை இப்பகுதியில் ஆராய்வதுடன் அந்நிலையை மாற்றுவதற்கான தீர்வையும் கூற முற்படுகிறான்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்<br>
  தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்;<br>
இறவாத புகழுடைய புது நூல்கள்<br>
  தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;<br>
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்<br>
  சொல்வதிலோர் மகிமையில்லை;<br>
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்<br>
  அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

பழம் பெருமை பேசித் திரிவதில் தமிழன் கொண்ட நாட்டத்தை, அவனது அழிவுக்கு இடப்பட்ட கால்கோளாய்க் காட்டிக் கண்டிக்கும் பாரதி, புதுப் புதுக் கலைகளில் தமிழ் நூலாக்கங்கள் தழைப்பதும், பிறமொழி நூற் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலுள்ளதாய் மொழியைக் கூர்தீட்டிச் சாணை பிடிப்பதுமே உலக அரங்கில் தமிழின் பெருமையை நிலை பெறச் செய்யுமெனக் கூறிச் சிக்கலுக்கான வழி திறப்பையும் வழங்குகிறான்.

'மெல்லத் தமிழினிச் சாகுமெ'னும் வசை அழிய வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழித்தல் வேண்டும்'! அந்தக் கனவு நனவாக நடைமுறைப்பட வழிகாட்டும் இவ் வரிகளே பாடலின் இலக்கிய மகுடமாயிலங்கும் மணிவாசகங்களாகும்.

**-எம். ஏ. சுசீலா**

## ஏக்கக் கோபுரத்தின் கூரிய கலசம்

**க**விதை என்பது ஒரு மொத்த விஷயம். ஒரு பெண்ணின் குறிப்பிட்ட அங்கம் மட்டும் சரியாய் இருக்கிறது என்று அளவெடுத்துச் சொல்வது மாதிரி அல்ல அது.

ஓர் சரமான கவிதையின் ஒவ்வோர் எழுத்தும் ஒரு பூதான்.

மனவண்டு அந்த ஒவ்வொரு பூவின்மீதும் உட்கார்ந்து போகிறது.

அதில் எதில் அது அதிக நேரம் உட்கார்ந்து போகிறதோ, அதில்தான் வண்டுக்குப் பிடித்த வாசனை இருக்கிறது என்று அர்த்தம்.

பாரதியின் இந்தக் கவிதை, நாயகன்—நாயகி பாவத்தின் நளினம் கொண்டது.

இந்தப் பாட்டுக்குள் இருப்பது பாதி விரகம்; முழுசான ஏக்கம்.

இந்த முழுசான ஏக்கத்தின் முத்தாய்ப்புத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது.

''கண்ணன் முக மறந்துபோனால் —இந்தக்
கண்களிருந்து பயனுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய் — இனி
வாழும் வகை யென்னடி தோழி?''

இந்த வரிகள் கட்டி முடிக்கப்பட்ட கோபுரத்துக்குக் கலசமாகி விடுகின்றன.

கலசம் என்பது, கோபுரம் என்னும் ஓர் அகலமான வாக்கியத்தின் கூரிய முற்றுப் புள்ளி.

இந்தப் பாட்டின் முன்னடிகளால் ஓர் ஏக்கக் கோபுரத்தை எழுப்பி அந்த உணர்ச்சியைக் கூர்மைப்படுத்திவிடும் கலசமாக, கடைசி வரிகளைச் செதுக்கியிருக்கிறார் பாரதி.

முன்னடிகளில் கண்ணனைக் காணமுடியாதவள் தன் துயரத்தை இயற்கையின் மேல் ஏற்றி விடுகிறாள்.

கடைசி வரிகளிலோ அந்தத் துயரத்தைத் தன் கண்களின் மேலேயே ஏற்றிவிடுகிறாள்.

பார்வையின் பயனே அவனைப் பார்ப்பது தான் என்கிறாள்.

படம் இருந்தாலாவது ஒரு அரைத் துயரம் தீரும். அதுவுமில்லை.

''இனி வாழும் வகையென்னடி தோழி'' என்று அவள் கடைசிக் கேள்வி கேட்கும் போது அவள் அனுபவித்த அத்தனை துயரமும் நம் இதயத்தில் வந்து இறங்கி விடுகிறது!

அந்தக் கடைசி வரிகள் எனக்கு இரத்தக் கையெழுத்தாய்த் தெரிகின்றன.

அந்த வரிகள் எப்போதும் பிடிக்கும் எனக்கு.

**-வைரமுத்து**



# அருள் வாக்கு.

கஜானாவை எப்படியாவது ரொப்பிக் கொண்டு விடுவதில்' அந்தக் கால ராஜாக்கள் குறியாக இருக்கவே இல்லை. இதற்கு நிரூபணமாக காளிதாசன் சாகுந்தலத்தில் ஒரு ஸீன் எழுதியிருக்கிறான்.

கடல் வாணிபம் செய்கிற ஒருவன் கப்பல் உடைந்து முழுகிப் போய்விட்டதாயும் அவனுக்கு ஸந்ததி இல்லாததால் அவனுடைய சொத்து பூராவும் கஜானாவைச்சேர்ந்துவிடுவதாயும் துஷ்யந்தனுக்கு நிதி மந்திரி ஒரு 'நோட்' அனுப்புகிறார். உடனே துஷ்யந்தன் அத்தனை செல்வத்தையும் ஆர்ஜிதம் செய்து கொண்டு விடலாமென்று பறக்காமல், 'பெரிய வியாபாரி என்றால் பல கல்யாணங்கள் பண்ணிக் கொண்டிருப்பானே! அப்படி இருந்தால் அவனுடைய பெண்டாட்டிகளில் எவளாவது கர்ப்பமாகி இருக்கிறாளா என்று விசாரிக்க வேண்டும்' என்கிறான். அவன் நினைத்தது போலவே செத்துப் போன வியாபாரியின் ஒரு ஸம்ஸாரம் கர்ப்பவதியா யிருக்கிறாளென்று தெரிகிறது. ''அப்படியானால் சொத்து கஜானாவைச் சேராது; கர்ப்பத்திலிருக்கிற குழந்தையைத்தான் சேரும்'' என்று துஷ்யந்தன் தீர்ப்புப் பண்ணுகிறான்.

பொருளாசை இல்லாத தர்ம நியாயத்தோடு ராஜாக்களின் ஆழ்ந்த மனுஷ்யாபிமானத்தைக் காட்டுவதாகவும், அப்போதும் கூட தர்மத்தை மீறாமலிருக்கிற பண்பைப் பிரதிபலிப்பதாகவும் அப்போது துஷ்யந்தன் ஒரு காரியம் பண்ணுகிறான். பதியை இழந்தவர்கள் புத்ரனில்லாதவர்கள், யாவருக்கும் ராஜாவே ஆதரவாயிருக்க வேண்டும் என்று நினைத்து ஒரு பிரகடனம் பண்ணுகிறான். அதிலே ''எந்த பந்து காலமானவருக்கும் அந்த பந்துவாக நானே இருப்பேன்'' என்கிறான். பதியை இழந்தவர்களிடம் இப்படிச் சொல்வது அசம்பாவிதம் என்பதால் உடனேயே, ''தர்மத்துக்கு மாறாக இல்லாத உறவு முறைகளில் மாத்திரமே'' என்று ஒரு கண்டிஷன் சேர்க்கிறான். சாணக்கியனும் இக்கால welfare stateன்லட்சணங்களாகச்சொல்லப் படும் அநாதைகளின் ரக்ஷணையை ராஜாவின் கடமையாகச் சொல்லியிருக்கிறார். ஏழைகள், கர்ப்பிணிகள், அநாதைகள், வயஸானவர்கள், வியாதியஸ்தர்கள் ஆகியவர்களை ராஜாங்கம் ரக்ஷித்தாகவேண்டுமென்கிறார்.

**-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்**



வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்...
பற்சிதைவை எதிர்த்திடுவீர்
Colgate DENTAL CREAM
Colgate
STOPS
கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா, சிறப்புடன் செயல்பட்டு நீங்கள் பல்துலக்கும் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம் அளிக்கின்றது. பற்களுக்கு ஆரோக்கியமும் உறுதியும் தருகிறது.
எப்படி என்றால்...
உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர் நாற்றத்தையும் பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.
கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச்சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றிவிடுகிறது.
பயன்: தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கு எதிராகப் பாதுகாப்பு, உறுதிமிக்க ஆரோக்கியமான பற்கள்.
ஆகவே, சாப்பிட்டு முடிந்தவுடனேயே மறக்காமல் கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து பிரஷ் செய்யுங்கள்.
கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது!

## 17

ரத்தினம் கனகசபையைத் தனியாக அழைத்து ''நான் சொல்றதைக் கேளு. இப்ப உன் பெண்டாட்டி விஷயத்தைப் போட்டுக் குழப்பாதே-அந்த விசயம் எப்பவோ மலை யேறிருச்சு. காலாவதி ஆயிருச்சு. ஊர்ல கலகம் வேற திசையில திரும்பிருச்சு. உன் பொண்டாட்டியை நாங்க மறந்து ரொம்ப நாளாயிருச்சு. பத்துப் பேர் செத்திருக்காங்களே நம்ம பக்கத்தில அதுக்குப் பழி வாங்க வேண்டாம்?''

''அவுங்க பக்கத்திலேயும் நான் செத்துப் போயிருக்காங்க ரத்தினம்.''

''எல்லாம் பொய்யி. டுப்பு. கீழே கிடந்தவன் பேரெல்லாம் கிறிஸ்டியன் பேராச் சொல்லியிருக்காங்க. அரசாங்கத்துக்கிட்ட பணம் வாங்கறதுக்கு. நான் பாத்தனே. நம்ம பாலகிருஷ்ணன் பயலே 'பாய் ராஜா'ங்கறான்.''

''உறவுக்காரங்க அடையாளம் கண்டு சொல்ல மாட்டாங்களா ரத்தினம்?''

''உறவுக்காரங்களா யார் கேக்கறாங்க?



# விடிவதற்குள் வா!

சுஜாதா



அவங்க அவங்க துப்பாக்கிக்குப் பயந்துக் கிட்டுப் பொத்திக்கிட்டு அடுக்களைக்குள்ள ஒளிஞ்சிக்கிட்டு இருக்காங்க. வெளியே வந்தாத்தானே?''

''இப்ப என்ன ஆகும்?''

''என்ன ஆகும்? இன்னும் கொலை விழும். அவ்வளவுதான். நீ தனியா எங்கேயும் போயிராதே. நம்ம கூட்டத்தோடியே இரு. அருவா வச்சிருக்கியா? ஒரு அருவா எடுத்துச் சொருகிக்க. இத பாரு. யாராவது கிட்ட வந்து கலாட்டாச் செஞ்சா சத்தம் போடாம வெட்டிரு.''

கனகசபை எச்சில் விழுங்கிக் கொண்டான். ''உண்ணி போயிட்டான் அண்ணே!''

''பாத்தியா? போலீஸ்காரங்க சின்னப் பையனைக் குறி பார்த்துச் சுட்டிருக்காங்க. இது என்ன நியாயம்? பாவம் அந்தப் பொண்ணு தேவகி அதைப் போய் விசாரிக்கணும். வயசான அப்பாவோ யாரோ வீட்டிலே இருக்காப்பலியா?''

''இப்ப ஒருத்தரும் இல்லே.''

''நான் எப்ப வேதாரண்யம் போறது?''

''உன்னால இப்ப ஊரை விட்டு வெளியே எங்கயும் போக முடியாது. கம்முனு இட. எல்லாம் அடங்கிப் பிற்பாடு பெறப்படலாம். அது எங்க திரியுதோ அந்தப் பொண்ணு. ஆசை ஆசை ஆசை! ஒரு மாதிரிப்பா அந்தப் பொண்ணு! நகையை ரெட்டிப்பாக்க சாமியாரைப் போய்க் கெஞ்சி!.... என்ன ஒண்ணும் நல்லால்லே.''

''அப்ப கிரிஜா உயிரோட இருக்கான்னு நம்பறீங்க இல்லே?''

''இத பாரு'' என்று அருகில் வந்து குரலைத் தழைத்து ''எனக்கு அப்பவே தெரியும். உங்கட்டச் சொல்ல வேணும்னு இருந்தேன். அவளுக்கு ஒண்ணும் ஆகலே! சர்ச்கல வெட்டிப் போட்ட கதையில நம்பிக்கை இல்லே தான்! ஆறு ஊர்க்காரங்க மொத்தமும் நம் புறதை நாம எதுத்துக்க முடியுமா? சொல்லு! அப்புறம் நாம எப்படி வெளியே தலை காட்டறது?''

ரத்தினத்தின் விநோதமான தர்க்கம் புரியாமல் கனகசபை ரோடோரமாக நடந்து தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். பக்கத்து வீடு திறந்து கிடந்தது. ஆளரவம் இல்லே. எட்டிப் பார்த்தான். ''தேவகி! தேவகி!'' பதில் இல்லே.

உள்ளே சென்றான். கூடத்தில் ஒரு பானை உருண்டு கிடந்தது. வெயில் லேசான ஊசிகளாகக் கூரை இடுக்கில் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க ''தேவகி தேவகி'' என்று சமையலறையை எட்டிப் பார்த்தான். இல்லே. புறக்கடைப் பக்கம் சென்றான். தேவகி கிணற்று விளிம்பில் நின்று கொண்டிருந்தாள். அதிர்ச்சியுற்று அப்படியே ஆவேசமாகப் பாய்ந்து அவள் இடுப்பைப் பிடித்து இழுத்து வீழ்த்தினான்.

''ஏ முட்டாள்! அறிவு கெட்டவளே! என்ன காரியம் செய்ய இருந்தே!''

''எனிக்கி இலோகத்தில் ஆரும் இல்லே. உண்ணி மாத்ரமாயிருன்னு எனிக்கு ஒரு கூட்டு! அவனும் போயி. இனி ஞான் எந்தின ஜீவிக்குன்னது? உண்ணி உண்ணி'' என்று கரைந்தாள்.

''அதுக்காக நீ செத்துப் போயிர்றதாலே அவன் திரும்பி வருவானா?''

''அவ்ட சென்னா எனிக்கு உண்ணினெ காணா?''

''எவ்ட?''

''சொர்க்கத்தினு!''

''சொர்க்கம் எல்லாம் கிடையாது பைத்தியமே.''

''எனிக்கு ஆரும் இல்ல, எனிக்கு ஆரும் இல்ல.''

''நான் இருக்கேன் தேவகி! நான் இருக்கேன்! பயப்படாதே!''

அவளை எடுத்துத் தன்பால் வைத்துக் கொண்டான். அவள் அவன் மார்பில்

சாய்ந்து அழுதாள். ''எனிக்குக் கூட்டா யிட்டு இரிக்குமோ?''

''இருக்கேன் தேவகி!''

அவன் மேல் அழுந்தியதில் அவள் மார் பக்ஙகள் தெரிந்தன. முகத்தின் மேல் தன் முகத்தைத் தேய்த்தான். அவள் மூக்கில் முத்தமிட்டான். ''என் கண்ணில்லே. உன்னை நான் கைவிட மாட்டேன். சத்தியம்.''

''எனிக்க பேடி ஆவுணு!''

''பயப்படாதே.எதுக்குப்பயப்படணும்?''

''உண்ணி என்டொப்ப ஒன்னிச்சு களிச்சு வளர்ந்ததா! என்ட ஒக்கத்திருந்தாணு அவன் வளுதாயது. ஒற்றைக்கு இருக்கும் போழ் அவன் என்னெ விளிக்குன்ன மாதிரி தோணும். 'சேச்சி என்ட கூடவா! என்ட கூடவா!' அவனெ ஆஸ்பத்திரியில எங்ஙிட யாணு கிடத்தியிருக்குன்னு?''

''மார்ச்சுவரியில.''

''குளிருலே?''

''இல்லே. குளிராது. இத பார் தேவகி. இப்போது அவன்மேல் அவள் குழந்தை போல ஒட்டிக் கொள்ளக் கனகசபைக்குத் தன் மனத்தில் எழும் எண்ணங்கள் தப்பு, தன் கைகள் பண்ணும் காரியங்கள் தப்பு என்று ஒரு குரல் எச்சரித்தது. அவள் அவன் செய்வதை யெல்லாம் கவனிப்பவளாகவே தெரியவில்லை. அவளை மெல்ல அழுத்தி அழைத்து உள்ளே கொண்டு வந்தான். வாயிற் கதவைத் தாளிட்டான். அவள் நெஞ்சைத் தடவிக் கொடுத்தான். ''தேவகி பேசாமப் படுத்துத் தூங்கிப் போயிரு. நான் ராத்திரி படுத்துக்கட்டுமா துணைக்கு?''

''சரி.''

''உனக்குப் பயமில்லாமல் இருக்கிற துக்கு உன்னை நான் அணைச்சுக்கிட்டே படுத்துக்கிறேன். சரியா?''

''சரி.''

''ஏதாவது சாப்பிட்டியா?''

''இல்லே. எனிக்கு ஒன்னும் வேண்டா. சேச்சிக்கு எந்து பற்றி?''

''அவளைப் பத்தி எதும் தகவல் தெரியலே'' என்றான்.

இப்போது அவள் சற்றுத் துக்கம் குறைந் தவள் போலத் தோன்றினாள். அவன் கையை இயல்பாக விலக்கினாள். தன் உடைகளைச் சரி செய்து கொண்டு ''ஞான் உறங்கட்டே?'' என்றாள்.

''சரி தூங்கு''

அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டு 'உண்ணி உண்ணி' என்று மறுபடி ஒரு பாட்டம் அழ ஆரம்பித்தாள்.

''பாத்தியா இப்படி அழுதா உன்னை நான் ரொம்பக் கோவிச்சுக்குவேன். உன் கூடப்பேசமாட்டேன்.நான் போயிடுவேன்''

''ஸார் எங்கும் போவருது.''

''அப்படின்னா அழாமப் பேசாம படுத்துத் தூங்கு.''

இன்னமும் விசித்துக் கொண்டேதான் இருந்தாள். கனகசபைக்கு வேதாரண்யம் மறந்திருந்தது.

**போ**லீஸ் படையினர் திரளாகக் குழுமி யிருந்தனர். ஒலிபெருக்கி 'பாரத நாடு பாரத நாடு' என்று பாடியதைப் பாதியில் நிறுத்திக் கொஞ்சம் சீழ்க்கை கேட்டது. 'அலோ மைக் டெஸ்டிங் மைக் டெஸ்டிங்' என்ற ஒரு குரல் கேட்டது. அப்புறம் கொஞ்சம் அடக்கமாகக் குரல்கள் கேட்டன.

''பாடுங்க நடராசு.''

கனகசபை சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந் திருந்தான். சன்னல் வழியாகத் தேவகி தூங் கிக்கொண்டிருந்தது தெரிந்தது. அரிக்கன் விளக்கு.

'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் நாம் எல்லோரும் இந்திய மக்கள்' என்று ஒருவர் சற்று அபசுரமாகப் பாடிக் கொண்டிருக்க, ஒருவர் குறுக்கிட்டு, ''பெரு மதிப்புக்குரிய மணற்காட்டு மக்களே! இன் றைய தினம் நடக்க இருக்கும் சர்வ கட்சி, சர்வ சமயக் கூட்டத்திற்கு நம் மதிப்புக் குரிய முதலமைச்சர் வரவிருந்தார். அவ ருக்குத் தவிர்க்க முடியாத அலுவல்கள் சென் னையில் இருந்ததால் நமது மாண்புமிகு...''

கனகசபை தன்னை மிகவும் நொந்துகொண் டான். நிகழ்ந்ததில் ஏதோ ஒரு விதியின் விளையாட்டு இருப்பதாகத் தான் கொண் டாலும் தன்மேல் கோபமாக வந்தது. சந் தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு...

''அமைச்சர் அவர்கள் உடனே செல்ல இருப்பதால் அவர் முதலில் பேசுவார்!..''

''சேச்சி இல்லே? சத்யமாயிட்டு மரிச்சு போயதாணு?''

''அப்படித்தான் தேவகி சொல்லிக் கிறாங்க.''

போலீஸ் சுட்டதால் இறந்து போனவர் களுக்கு இந்த அரசு தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கும். தற்போது மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் பலத்த காயமடைந்தவர் களில் யாராவது மரணமடைந்தால் அவரது குடும்பத்துக்கும் இந்த உதவித் தொகை கிடைக்கும்.''

''நிங்ஙளெ ஞான் என்ட கூடப் பிறந்த சேட்டனைப் போல் கருதுகையாணு?''

''இல்லே. தேவகி. உனக்கும் எனக்கும் அந்த உறவு இல்லே!''

''அய்யோ அங்ஙனெ ஒன்னும் தொடாம் பாடில்லா.''

''தேவகி உனக்குத் தேவையானது ஆறு தல்..உன்னைக் காப்பாற்ற ஒரு ஆண் துணை.''

''உங்கள் புகார் இந்த அரசுக்குத் தெரி யும். இம்மாவட்டப் போலீஸ் அதிகாரிகள் சிலர் இட மாற்றம் செய்யப்படுவார்கள்....

''தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள 144 தடை உத்தரவு மேலும் கடுமையாக அம லாக்கப்படும்.''

உடம்புடன் உடம்பு படிந்து ஊடாடி முகத்தை முகத்தால் தொட்டு...

''வருப்புக் கலவரங்கள் மூளுவதற்கான பின்னணி, அது சம்பந்தப்பட்ட பிரச்னைகள் மற்றும் அவைகளுக்குத் தீர்வு காணுவது எப்படி ஆகியவை பற்றி முதல்வர் உங்கள் தலைவருடன் விவாதிக்க இருக்கிறார்.''

''விளக்கு வேண்டாம்.''

''சரி.''

(தொடரும்

# இதோ! ஒரு புதிய இருமல் நிவாரணி ஒரு பெரிய வித்தியாசத்துடன்...


# காஃப்ரெம்-5

## மூலிகைகளாலான இருமல் நிவாரணி

## சக்தி வாய்ந்தது மட்டுமல்ல தீய பின் விளைவுகள் இல்லாததும் கூட.


இருமல் ஏற்படுவது இயற்கையே. ஆனால் அளவுக்கு அதிகமாக இருமுவது நல்லதல்ல. இருமலைக் கட்டுப்படுத்த, நிச்சயமாக நிவாரணம் அளிக்கும் ஓர் இருமல் மருந்து தேவை. ஆனால் அதே சமயம் அதனால் தூக்கம், வாய்-தொண்டை உலர்வது, வாந்தி முதலிய தீய பின் விளைவுகள் எதுவும் ஏற்படவும் கூடாது.

**காஃப்ரெம்-5 மூலிகைகளாலான இருமல் நிவாரணி.**



காஃப்ரெம்-5 இயற்கை தரும் மூலிகைகள் அடங்கியது. எனவே தூய்மையானது; மென்மையானது. தீய பின் விளைவுகள் ஏதும் இல்லாதது. அதே சமயம் அதிக சக்தி வாய்ந்தது. நிச்சய நிவாரணம் அளிப்பது. ஐந்து மூலிகைகள் இதில் உள்ளன: ஆடாதோடை, கிருஷ்ண துளசி, மர மஞ்சள், மஞ்சள் மற்றும் அதிமதுரம் இருமலைக் கட்டுப்படுத்தி நிவாரணம் அளிப்பதில் இவற்றின் திறன் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

**காஃப்ரெம்-5 செயல்திறன்— இருமலை நன்கு கட்டுப் படுத்துகிறது.**




காஃப்ரெம்-5 விரைவாகவும் இதமாகவும் செயல்பட்டு தொண்டையில் புண்ணையும் எரிச்சலையும் தணிக்கிறது; சுவாசப் பாதையை விரிவாக்கி, அடைப்புகளை நீக்கி எளிதாக சுவாசிக்க உதவுகிறது.

**காஃப்ரெம்-5 வித்தியாசமானது.**

காஃப்ரெம்-5 முற்றிலும் வேறுபட்டது. ஏனென்றால் இது முழுமையாக மூலிகைகளாலேயே ஆனது. இதில் ஆல்கஹாலோ, தூக்கம்-மயக்கம் உண்டாக்கும் பொருள்களோ இல்லை. எனவே இது மிகவும் பாதுகாப்பானது. தீய பின் விளைவுகள் எதுவும் இதனால் ஏற்படாது.

**காஃப்ரெம்-5 அனைவருக்கும் ஏற்றது.**

காஃப்ரெம் 5 முழுமையாக மூலிகைகளால் தயாரிக்கப் பட்டிருப்பதால் இது குடும்பத்தில் அனைவருக்கும் ஏற்றது. மிகவும் பாதுகாப்பானது. சிறு குழந்தைகளுக்கும் கூடக் கொடுக்கலாம். இதன் இனிமையான சுவையை அவர்கள் மிகவும் விரும்புவார்கள்.



**காஃப்ரெம்-5 சிறந்த பொருள்களுக்குப் பெயர் பெற்ற டிடிகே குருப் வழங்குவது.**

தேர்ந்தெடுத்த மூலிகைகளாலான இணையற்ற தயாரிப்பு.




# காஃப்ரெம்-5

## சக்தி வாய்ந்தது. பாதுகாப்பானது. இயற்கையானது.

தற்போது தமிழ்நாட்டில் மட்டுமே கிடைக்கும்.

ஒரு ttk தயாரிப்பு

HTM-TTK-1060



# கள்வனின் காதலி

### அத்தியாயம் 9

## வெயிலும் மழையும்

சென்ற அத்தியாயங்களில் கூறிய சம்பவங்கள் நடந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

அபிராமி இப்போது இன்னும் ஒரு நாலு விரற்கடை உயரமாகியிருக்கிறாள். அத்துடன், நெற்றியிலே ஒரு வடு — வண்டி குடைசாய்ந்த ஞாபகார்த்தமாக — இலேசாய்த் தெரிகின்றது. மற்றபடி, அதே குழந்தை முகம்தான்! கண்களில் அதே குறுகுறுப்புத்தான்.

திருப்பரங்கோவில் கிராமத்து வீதி ஒன்றில், ஒரு பழைய ஓட்டு வீட்டின் கொல்லைப்புறத்துக் கிணற்றங்கரையில் அவளை இப்போது நாம் பார்க்கிறோம். கிணற்றைச் சுற்றி ஒரு வரிசை கமுகு மரங்களும் அவற்றுக்கப்பால் சில தென்னை மரங்களும் வளர்ந்து அந்த



இடத்தைக் குளிர்ச்சியாகச் செய்து கொண்டிருக்கின்றன. சூரிய கிரணம் ஒவ்வொன்று அங்கங்கே எட்டிப் பார்க்கின்றது. சில நாரத்தை மரங்களும் இருக்கின்றன. செழித்து வளர்ந்த ஒரு பம்பளிமாஸ் மரத்தில் பெரிய பெரிய பம்பளிமாஸ் பழங்கள் தொங்குகின்றன. கிணற்றில் ஏற்றம் போட்டு இருக்கிறது. கிணற்றின் கைப்பிடிச் சுவரிலே அபிராமி உட்கார்ந்திருக்கிறாள். அவளுடைய வாய் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருப்பதையும், தலை அசைவதையும் பார்த்தால், ஏதோ பாட்டு 'கவனம்' செய்யும் முயற்சியில் இருக்கிறாள் என்று ஊகிக்கலாம்.

கமுக மரத்தில் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கும் குயில் ஒன்று விட்டு விட்டுப் பாடுகிறது. இடையிடையே அபிராமி நிமிர்ந்து பார்க்கிறாள். குயில் இருக்கும் இடம் தெரியவில்லை.

'சடசடசட'வென்ற சப்தத்துடன் திடீரென்று பெரும் தூற்றல்கள் விழுகின்றன. ''அடடா! முற்றத்தில் அப்பளம் காய்கிறதே!'' என்று கூவிக்கொண்டு அபிராமி எழுந்து உள்ளே ஓடுகிறாள். முற்றத்தில் உலர்த்தியிருந்த அப்பளங்களை அவசரம் அவசரமாக எடுத்துக் கொண்டு போய்க் கூடத்தில் இருந்த கிராமபோன் பெட்டிக்கு அருகில் வைக்கிறாள். எல்லா அப்பளங்களையும் எடுத்து வைத்தாளோ இல்லையோ, உடனே தூற்றல் நின்று பளீரென்று வெயில் காய்கிறது. அபிராமி தனக்குள் சிரித்துக் கொண்டு ''அட நாசமாய்ப் போகிற வெயிலே'' என்று உரத்து வைகிறாள்.

• • •

அப்போது, ''அது யார் நாசமாய்ப் போகிற பயல்!'' என்று சொல்லிக் கொண்டே முத்தையன் உள்ளே வந்தான். அபிராமி அவனைப் பார்த்து மறுபடியும் சிரித்துவிட்டு, ''பயல் இல்லை அண்ணா! வெயில்! — வெயிலை வைதேன்!'' என்று கூறினாள். அவனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்க் கூடத்தில் கிராமபோனுக்குப் பக்கத்தில் கிடந்த பலகையில் உட்கார வைத்து, ''அண்ணா! இந்தப் பாட்டைக் கேளு!'' என்று சொல்லிப் பாடத் தொடங்கினாள்.

அவள் பாடி முடித்ததும் முத்தையன் 'அடாடா! நேற்றுத்தானே பிலஹரி 'பிளேட்' வாங்கி வந்தேன். அதற்குள்ளே அந்த மெட்டை அவ்வளவு நன்றாய்ப் படம் பிடித்தது போல் பாடுகிறாயே! 'கவனம்' கூடத்தான் எவ்வளவு நன்றாக இருக்கிறது. நம்முடைய வீட்டுக் கொல்லை இவ்வளவு அழகாயிருப்பது எனக்கு இதுவரையில் தெரியாது. நான் சொல்கிறேன், கேள், அபிராமி! ஒரு நாளைக்கு நான் நாடகத்தில் சேர்ந்துவிடப் போகிறேன். அப்போது நீயே எனக்கு எல்லாப் பாட்டுக்களும் இட்டுக்கட்டித் தரலாம்'' என்றான்.

அபிராமி வெட்கத்துடன் முகத்தைக் கையினால் மறைத்துக் கொண்டு ''போ அண்ணா!'' என்றாள்.

''என்னைப் 'போ' 'போ' என்று சொல்லிக் கொண்டிருந்தாயோ, ஒரு நாளைக்கு நான் போயே போய்விடுவேன், அப்புறம் திரும்பி வரவே மாட்டேன்'' என்றான் முத்தையன்.

என்ன ஆச்சரியம்! அபிராமியின் கண் முனைகளில் அந்த நீர்த்துளிகள் அதற்குள் எங்கிருந்துதான் வந்தனவோ?

• • •

அமரர் கல்கி

மேலாடையினால் அவள் கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''ஆமாம்! என்னால் உனக்குக் கஷ்டம்தான். நான் ஒருத்தி இல்லாவிட்டால்...'' என்பதற்குள் முத்தையன், ''சரி சரி; பல்லவி பாடியதே போதும் அநுபல்லவி, சரணம் எல்லாம் இப்போதுவேண்டாம்.'' என்று கூறிவிட்டு எழுந்தான்.

பிறகு, ''வேலை தலைக்கு மேல் கிடக்கிறது. சீக்கிரம் போக வேண்டும். சமையல் ஆகிவிட்டதா? அல்லது பாட்டு இட்டுக் கட்டிக் கொண்டே உட்கார்ந்திருந்து விட்டாயா?'' என்று கேட்டான்.

''இலை போட்டுத் தயாராய் வைத்திருக்கிறேன்'' என்றாள் அபிராமி.

முத்தையன் சமையல் அறைக்குச் சென்று இலையில் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினான்.

''நிஜமாகவே என்னை விட்டு விட்டுப் போய்விடுவாயா அண்ணா!'' என்று அபிராமி கேட்டாள்.

முத்தையன் சிரித்தான். ஆனால் அந்தச் சிரிப்பிலே சந்தோஷம் இல்லை. இருதயத்தைப் பாதிக்கும் துக்கம் இருந்தது.

''அபிராமி! உன்னை விட்டு விட்டுப் போகிறவனாயிருந்தால் இரண்டு வருஷத்துக்கு முன்பே போயிருப்பேன்'' என்றான்.

• • •

கொஞ்ச நேரம் கழித்து அபிராமி சொன்னாள்: ''ஒரு சமாசாரம் அண்ணா! அந்தக் கார்வார் பிள்ளையை இங்கே அழைத்துக் கொண்டு வராதே! அவன் மூஞ்சியைக்கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. நீ அந்தண்டை இந்தண்டை போகும் சமயம் அவன் என்னைப் பார்த்து வெறிக்க வெறிக்க முழிக்கிறான்....''

முத்தையன் நிமிர்ந்து பார்த்து ''என்ன சொல்கிறாய்? நிஜமாகவா'' என்று கேட்டான்.

''ஆமாம்; நேற்றைக்கு நீ இல்லாத போது, அவன் இங்கே வந்து கதவை இடித்தான். நான் ஜன்னல் வழியாகப் பார்த்து, 'அண்ணன் இல்லை' என்றேன். 'அண்ணன் இல்லாவிட்டால் கதவைத் திறக்கக் கூடாதா?' என்று சொல்லி விட்டுப் போனான். அவனுடைய நடவடிக்கை ஒன்றும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.''

அபிராமியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த முத்தையன் திடீரென்று கலகலவென்று சிரிக்கத் தொடங்கினான். அபிராமியின் கண்கள் மறுபடியும் ''இதோ ஜலத்தைப் பெருக்கிவிடுவோம்'' என்று எச்சரிக்கை செய்தன.

முத்தையன் சிரித்துக் கொண்டே, ''ரொம்ப சரி! பேஷான யோசனை! அபிராமி, நான் சொல்வதைக் கேள். அந்தக் கார்வார் பிள்ளை அப்படியா பண்ணுகிறான்? பேசாமலிரு. அவனுக்கு உன்னைக் கட்டிக் கொடுத்துவிடுகிறேன். அதுதான் அவனுக்குச் சரியான தண்டனை!'' என்றான்.

இதைக் கேட்ட அபிராமி, அவன் சற்றும் எதிர்பாராத வண்ணம் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள். முத்தையனுக்கோ கோபம் அசாத்தியமாக வந்தது. ''சீச்சீ! வர வர நீ மகா அழுமூஞ்சியாய்ப் போய் விட்டாய். என்ன சொன்னாலும் அழுகைதானா? நான் தொலைந்து போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் பாதிச் சாப்பாடு அப்படியே இலையில் இருக்க, எழுந்து போனான்.

## அத்தியாயம் 10


## கார்வார் பிள்ளை

திருப்பரங்கோவில் மடம் மிகவும் புராதனமானது; மிக்கச் செல்வாக்குள்ளது. மடத்துக்குச் சொந்தமாக ஆயிரம் வேலி நிலமும், மடத்தின் ஆதீனத்தின் கீழ் உள்ள கோவில்களுக்கு ஏழாயிரம் எட்டாயிரம் வேலி நிலமும் இருந்தன.

12–10–82 செவ்வாய் அன்று தனுசு ராசிக்காரர்களுக்கு என்ன நடந்திருக்கும் தெரியுமா! ஆங்கிலத்தில் செய்தி ஏதாவது அவர்களுக்கு வந்திருக்கும்! காரணம், தினமணி நாளிதழில் 3ம் பக்கத்தில் போட்டிருந்த தினப்பலன் அப்படி! தனுசு ராசிக்காரர்களுக்கு 'ஆங்கிலத்தில் செய்தி' என்று பலன் போட்டிருந்தது! (அனுகூலச் செய்திதான் தவறுதலாக அப்படி ஆகிவிட்டது!) —இரா.வேங்கடசுப்பிரமணியன்



# நீங்கள் 1952க்கு முன்னால் பிறந்தவராயின், இந்த விளம்பரம் முழுவதையும் படியுங்கள்–



## 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 10–ல் 9 பேர்களின் கேசம் உதிர்கிறது ...அவர்களுக்கு அது தெரியாது!

**அந்த 9 பேர்களில் நீங்களும் ஒருவராக இருந்தால், இன்றே ப்யூர் ஸில்விக்ரின் உபயோகிக்கத் துவங்குங்கள்.**

உங்கள் தலைமுடியை, சீப்பினால் அழுந்தப் படிய வாரிவிடவும். உங்கள் சீப்பில், வாரிய கையோடு, தலைமுடியும் கூடவே வந்தால், உங்கள் தலைமுடி உதிரத் துவங்கிவிட்டது என்று சொல்லலாம். முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் உதிர்ந்த கேசம் தென்படத் துவங்குமுன்னர் இப்பொழுதே செயல்படவும். கேசத்துக்குத் தேவைப்படும், மிக முக்கியமான அமினோ-அமிலங்கள் இல்லாத காரணத்தினால், தலைமுடி உதிர்கிறது; ஆரோக்கியத்தை இழக்கிறது. இந்தக் குறைபாடு சரிசெய்யப் பட்டால் அன்றி, தலைமுடி உதிருவது தொடர்ந்து நீடிக்கவே செய்யும் அதனால்தான், இன்றே ப்யூர் ஸில்விக்ரினை, நீங்கள் உபயோகிக்க வேண்டியது அவசியமாகும்.




**ப்யூர் ஸில்விக்ரினில் அடங்கியுள்ளவை யாவை?**

① ப்யூர் ஸில்விக்ரினின் ஒரு சொட்டு பெரிதாக்கிக் காட்டப்பட்டுள்ளது. ப்யூர் ஸில்விக்ரின் இணையற்றது. 17 அமினோ-அமிலங்களின் இந்தக் கலவை, இயற்கையான கேச எண்ணெய் உடலுக்கு ஊட்டப்படுவதை ஈடு செய்கிறது.

**ப்யூர் ஸில்விக்ரின் செயல்படும் முறை:**

② நன்கு உள்ளே ஆழப் பாய்ந்து செயல்படுகிறது. கேசத்தின் வேர்களை எட்டும் வகையில், ப்யூர் ஸில்விக்ரினினால் தலையை நன்கு. அழுந்த நீவிவிடவும். விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளின் மூலம் தயாரிக்கப் பட்டுள்ள ப்யூர் ஸில்விக்ரின், இப்பொழுது செயல்படத் துவங்குகிறது; தலைமுடி வளர்ச்சியை, ஆரோக்கியமான விதத்தில், மறுபடியும் ஏற்படுத்த, இது உதவுகிறது. உங்கள் தலைமுடி வழக்கமான நிலைக்கு வரும்வரை, ப்யூர் ஸில்விக்ரினை ஒவ்வொரு நாளும், இருமுறை பயன்படுத்துங்கள்.

**ப்யூர் ஸில்விக்ரின்**




300 கிராம்
ரூ. 3·40

நீங்களே கணக்கிட்டு பாருங்கள்!

## ஒரு சாதாரண டிட்டர்ஜண்ட் சலவை கட்டியை விட
## எடையோ
## இரண்டு மடங்கு
## விலையோ
## சிலகாசுகள்தான் அதிகம்

# டோட்டல்

## நீல டிட்டர்ஜண்ட் சலவை பார்




உண்மையான முதல் டிட்டர்ஜண்ட் பார்!

டோட்டல், நீல டிட்டர்ஜண்ட் சலவைக் கட்டியின் அதிக வெண்மையையும், சலவை பார் சோப்பின் சௌகரியத்தையும் கொடுக்கிறது.

சிக்கனமாக சலவை செய்ய இதை 5 சிறிய பகுதிகளாக்கி உபயோகிக்கலாம்.

எடையோ இரண்டு மடங்கு விலையோ சில காசுகள்தான் அதிகம்!

சுலபமான சலவைக்கு
5 சிறிய பகுதிகள்

நீங்கள் 125 கிராம் எடையுள்ள சாதாரண டிட்டர்ஜண்ட் கட்டியை என்ன விலைக்கு வாங்குகிறீர்கள்?

300 கிராமின் விலை ரூ. 3.40 என்றால் 250 கிராம் டோட்டலின் விலை ரூ. 2.67 தான். அதாவது ஒரு சாதாரண சலவைக் கட்டியைவிட எடையோ இரண்டு மடங்கு. விலையோ சில காசுகள் தான் அதிகம்.

தமிழ் நாடு, பீஹார் மற்றும் ஆந்திரபிரதேஷ் மாநிலங்களில் மட்டும் கிடைக்கும்.

---

கர்நாடகா சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட் லிமிடெட் அளிக்கும் தரமான தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள் : மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

MCA-TDB-51-TAM R

இப்போதுள்ள பண்டார சந்நிதிக்கு முந்தி இருந்தவரைப் பற்றிப் பலவிதமான வதந்தி உண்டு. ஆனால் இப்போது அப்பதவியை வகித்தவர் ஒழுக்கத்திலும் கல்வியிலும் சிறந்து விளங்கினார். மடத்தின் நிர்வாகத்திலுள்ள ஊழல்களை யெல்லாம் போக்கவும் மடத்தின் சொத்துக்களைச் சமய வளர்ச்சி கல்வி வளர்ச்சிக்காகப் பயன்படுத்தவும் பெரு முயற்சி செய்து கொண்டிருந்தார்.

இந்த முயற்சிகளை யெல்லாம் அதிகம் பயன்படாதபடி செய்து கொண்டிருந்த புண்ணியவான் ஒருவர் அந்த மடத்தில் இருந்தார். அவர்தான் கார்வார் பிள்ளை. முன்னிருந்த சன்னிதானத்தின் காலத்திலே இந்த மனுஷர் வைத்ததே எல்லா விஷயங்களிலும் சட்டமாக இருந்தது. இப்போதுங்கூட அவருடைய அதிகாரம்தான் அதிகமாய்ச் சென்று கொண்டிருந்தது. மடத்தின் ஏராளமான சொத்துக்கள் ஒரு தாலுகா பூராவிலும் பரவியிருந்தபடியால் ஏதாவது கோர்ட்டு விவகாரங்கள் நடந்து கொண்டேயிருக்கும். கார்வார் பிள்ளைக்கு அந்த விவகாரங்களின் நுட்பங்கள் எல்லாம் தெரியும். அவர் இல்லையென்றால் மடத்தின் நிர்வாகம் உடனே பலவிதச் சிக்கல்களுக்கு உள்ளாக நேரிடும். ஆதலால் அவர் மேல் பல புகார்கள் அவ்வப்போது வந்தபோதிலும், பண்டார சந்நிதி அவரைப் போகச் சொல்ல முடியாத நிலைமையில் இருந்தார்.

அப்பேர்ப்பட்ட திருப்பரங்கோவில் மடத்தில் சர்வாதிகாரம் நடத்திய மகா ா ா-ஸ்ரீ கார்வார் பிள்ளையை இதோ பார்த்துக் கொள்ளுங்கள். காதில் வைரக் கடுக்கன், கன்னத்திலே புகையிலைக் குதப்பல், கழுத்திலே சரிகைத் துப்பட்டா, இடுப்பில் சொருகிய மணிபர்ஸ், நெற்றியில் சவ்வாதுப் பொட்டு, கை விரல்கள் எல்லாவற்றிலும் வைர மோதிரம், அப்புறம் தங்கச் சங்கிலி கோத்த ரிஸ்ட்வாட்ச். இத்தகைய அலங்காரத்துடன் இதோ இளந் தொந்தி விழுந்து தலையில் இளநரை கண்டு விளங்குகிறவர்தான் கார்வார் பிள்ளை. பார்த்தால் சாது மனுஷராய், அப்பாவியாய்த் தோன்றுகிறாரல்லவா? ஆனால், எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ, நமக்கென்ன தெரியும்? பார்த்துக்கொண்டேயிருங்கள்.

• • •




ஒருவன்: காரசாரமாக நடந்த ஒரு விவாதத்தில நான் 'மட்டைக்கு ரெண்டு கீத்து'ன்னு பேசிட்டேன்!

மற்றவன்: அப்படியா? என்ன விவாதம்?

ஒருவன்: மட்டைக்கு எத்தனை கீத்துன்னு!

-ஆர். ஸ்ரீவெங்கடேஷ்

"முத்தையா! இங்கே வா!'' என்று கார்வார்பிள்ளை கூப்பிட்டதும் கொஞ்ச தூரத்தில் கீழே மேஜைப் பெட்டியின் முன்னால் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த முத்தையன் எழுந்து வந்து பணிவுடன் நின்றான்.

''வேலம்பாடிக் கிராமத்திலிருந்து பகுதிப் பணம் வரவில்லை. நீ உடனே போய்க் காரியஸ்தனைப் பிடித்து எத்தனை நேரமானாலும் இருந்து வாங்கிக் கொண்டு வா! வெறுங் கையுடன் வரக் கூடாது. தெரியுமா?'' என்றார்.

முத்தையன் தயக்கத்துடன் ''பத்து நாள் கணக்கு எழுத வேண்டியது பாக்கி யிருக்கிறது. வேறு யாரையாவது..'' என்பதற்குள் ''எல்லாம் நாளைக்கு எழுதலாம். போ! சும்மா மேஜைப் பெட்டியின் முன்னால் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்தால் எப்படி எழுதியாகும்?'' என்று எரிந்து விழுந்தார் கார்வார் பிள்ளை.

முத்தையன் மேஜைப் பெட்டியின் கணக்குகளை எடுத்து வைத்துவிட்டுக் கிளம்பினான். ஊரின் ஒரு கோடிக்கு வந்ததும், மத்தியானம் சாப்பிடும் போது அபிராமி தேம்பித் தேம்பி அழுதுகொண்டு நின்ற தோற்றம் அவன் மனக் கண்ணின் முன்பு வந்து நின்றது. அவனுடைய நடையின் வேகம் வர வரக் குறைந்தது. கடைசியில் சற்றுத் தயங்கி நின்றான். பிறகு, வீட்டுக்குப் போய் அபிராமிக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி விட்டு, தான் அன்று மாலை திரும்பி வர நேரம் ஆகும் என்றும் தெரிவித்து விட்டுப் போவது தான் சரி என்று நினைத்தான். அவ்வாறே தீர்மானித்துத் தன்னுடைய

வீடு இருந்த வீதியை நோக்கிச் சென்றான்.

• • •

சற்று நேரத்துக்கெல்லாம் வீட்டின் வாசலை அடைந்தான். அச்சமயம், உள்ளே, ''ஐயோ! ஐயோ'' என்று அபிராமியின் ஈனமான குரல் கேட்கவே, அவனுடைய உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது! ஓடிப்போய்க் கதவைத் திறக்க முயன்றான். கதவு தாழிட்டிருந்தது. ஜன்னலண்டை சென்று பார்த்தான். உள்ளே, கூடத்தில் அவனுடைய கண் விழிகள் தெறித்து விழுமாறு செய்த பயங்கரக் காட்சி ஒன்று தென்பட்டது. கார்வார் பிள்ளை அபிராமியினுடைய மேலாடைப் பின் தலைப்பைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறார். அபிராமி ''ஐயோ ஐயோ'' என்று பரபரப்புடன் அவரிடமிருந்து ஓட முயல்கிறாள். அப்போது முத்தையனுக்கு உடம்பு நடுங்கிற்று. அவனுடைய தேகத்திலிருந்த இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் கொதித்தது. அடுத்த நிமிஷம் அவன் வீட்டு வாசலில் போட்டிருந்த பந்தல் காலைப்பிடித்துக் கொண்டு கூரையின் மேல் ஏறினான். இரண்டே பாய்ச்சலில் தாவிச்சென்று வீட்டின் முற்றத்தில் குதித்தான்.

அவனுடைய உடம்பில் அப்போது ஆயிரம் யானைகளின் பலம் உண்டானது போல் இருந்தது. ஒரே தாவலில் கார்வார் பிள்ளையண்டை சென்று அவர் கழுத்தைப் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளினான். பிள்ளை சுவரில் மோதிக் கொண்டு கீழே விழுந்தார். அவருடைய தலையைச் சுவரில் இன்னும் நாலு மோது மோதினான். பிறகு காலைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டு வந்து வாசற் படிக்கு வெளியில் தள்ளினான்.

• • •

அபிராமி கூடத்துத் தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு நின்றாள். அவளுடைய உடம்பு இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது.

முத்தையன் அவளை ஏறிட்டுப் பார்க்கவும் முடியாதவனாய், தாழ்வாரத்தில் முன்னும் பின்னுமாய் நடந்து கொண்டிருந்தான்.

அபிராமி தேம்பிக் கொண்டே ''அண்ணா! பூங்குளத்துக்கே நாம் திரும்பிப் போய்விடலாம். இங்கே இருக்க வேண்டாம்'' என்றாள்.

முத்தையன் ஒரு நிமிஷம் நின்று யோசித்துவிட்டு, ''கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு கொஞ்ச நேரம் ஜாக்கிரதையாய் இரு அபிராமி! அந்தப் பாவியை இப்படியே விட்டு விட்டுப் போகக் கூடாது. இன்னும் எத்தனை பேருடைய குடியைக் கெடுப்பானோ, யார் கண்டது? நான் போய் சந்நிதானத்தில் சொல்லி முறையிடப் போகிறேன். இந்த அநியாயத்துக்கு ஏதாவது பரிகாரம் உண்டா, இல்லையா என்று பார்த்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு வாசலை நோக்கி நடந்தான்.

அபிராமி ஓடிவந்து அவனைக் கட்டிக் கொண்டு ''அண்ணா! என்னைத் தனியாக விட்டு விட்டுப் போகாதே'' என்றாள்.

முத்தையன், ''இந்த ஒரு தடவை மட்டும் போய் வருகிறேன். தடை சொல்லாதே. அப்புறம் உன்னை விட்டுப் பிரிகிறதே யில்லை; நாளைக்கே பூங்குளத்துக்குப் போய் விடுவோம்'' என்றான்.

பிறகு, அவளிடமிருந்து விடுவித்துக் கொண்டு, அன்புடன் அவளுடைய முதுகில் தட்டிக் கொடுத்து, ''சற்று நேரம் பல்லைக் கடித்துக் கொண்டிரு அபிராமி. இதோ ஒரு நிமிஷத்தில் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான்.


அபிராமி! துர்ப்பாக்கிய அபிராமி! உன் அண்ணன் ஒரு நிமிஷத்தில் திரும்பி வருவான் என்று எண்ணிக் கொண்டு இராதே! அவன் திரும்பி வரவே மாட்டான்! இனிமேல் பகவான் தான் உனக்குத் துணை! (தொடரும்)




அவர்: ''மனைவியை மகிழ்விப்பது எப்படி?'' என்று புத்தகம் எழுதியிருக்கிறீர்களாமே; செக்ஸ் புத்தகமா?
எழுத்தாளர்: இல்லை. சமையல் புத்தகம்.

-ஜ. சந்தானம்

# பிரிட்டானியா பால் பிஸ்கட்



**வளரும் குழந்தைகளுக்கு**
**சுவையான துணை**




சத்துமிகுந்த, சுவையான

**பிரிட்டானியா**

**மில்க் பிக்கிஸ்**

LINTAS-BBC.MB.3.2012 TM

# பஸ்

## அசோகமித்திரன்



எல்லாப் படிகளையும் இறங்கித் தெருவில் காலடி எடுத்து வைத்த பிறகுதான் லதாவுக்கு பஸ் சீஸன் டிக்கட்டை வீட்டிலேயே மறந்துவிட்டு வந்தது தெரிந்தது. இது பஸ்ஸில் ஏறின பிறகு தெரிய வந்ததால் பேசாமல் டிக்கெட் வாங்கிக்கொண்டுவிட வேண்டியதுதான். ஆனால் வீடு இன்னும் தொடும் தூரத்தில் இருக்கும்போதே சீஸன் டிக்கெட்டை எடுத்துச் செல்ல முயற்சி செய்யாமல் போவது நியாயமாகப் படவில்லை. அதே நேரத்தில் எழுபத்தைந்து காசு கொடுத்து ஒழித்து விட்டால் என்ன என்றும் தோன்றியது.

தெருவில் நின்றபடி குரலையும் அதிகம் எழுப்பாமல் ஆனால் மூன்றாவது மாடியில் காது கேட்கும்படியாகவும் யாரையாவதுகூப்பிடவேண்டும். கூப்பிட்டாலும் கேட்காது.

லதா ஒவ்வொரு மாடிப் படியாக ஏறினாள். மூன்று மாடிப் படிக்கட்டுகள். ஒவ்வொன்றிலும் பதினான்கு படிகள். பதினான்கு மூன்று நாற்பத்திரண்டு. நாற்பத்திரண்டு! இரண்டு நாலு ஆறு. ஆறு....ஆறு...

லதாவுக்கு மூச்சிரைக்க ஆரம்பித்தது. சாப்பிட்டுக் கால் மணி நேரம் ஆவதற்குள் மூன்று முறை நாற்பத்திரண்டு படிகளை ஏறி இறங்க நேர்ந்திருக்கிறது. ரவிக்கை முதுகுப் பக்கம் முழுக்க நனைந்திருக்க வேண்டும்.

இப்படியாவது தன்னுடைய எடை குறைய வழியுண்டா? ஒவ்வொரு முறை பெண் பார்க்க வரும்போதும் லதாவுக்குச் செத்துப் பிழைத்த மாதிரிதான். வந்தவர்கள், பிற தகவல்களிலெல்லாம் திருப்தி அடைந்தவர்களாகக் காணப்படுபவர்கள், அவளைப் பார்த்தவுடன் திடீரென்று மாற்றம் அடைவார்கள். அவளும் புடவையை எப்படியெல்லாமோ தந்திரமாகக் கட்டிப் பார்த்துவிட்டாள். மெல்லிய கோடுகள், நீளக்கோடுகள், அகலவாட்டில் கோடுகள், பெரியகரை, சின்னக் கரை, இலேசான கலர், கருத்த வண்ணம் இப்போது இதெல்லாம் ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை. — பெண் கொஞ்சம் இரட்டைநாடி என்கிற பெயர் நிலைத்துப் போய்விட்டது. அவளுக்கு மிக நெருங்கினவர்களே அவளைப் பற்றி அடையாளம் கூற வேண்டியிருக்கும்போது வெகு இயல்பாகக் கொஞ்சம் குண்டாக இருப்பாங்களே, அந்த அம்மாதான் என்று சொல்கிறார்கள் என்பதை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடிந்தது.

தங்கள் போர்ஷனை அடைந்து பொத்தானை அழுத்தினாள். அம்மா கதவைத் திறக்க, லதா உள்ளே ஓடிப்போய் பஸ் சீஸன் டிக்கட்டை எடுத்துக் கொண்டாள். கதவைப் போட்டுக்கொள் என்றுகூட சொல்லாமல் கீழே இறங்க ஆரம்பித்தாள். இறங்குவதுதான் அவளுக்கு அதிகக் கவனம் தேவைப்படும் செயலாக இருந்தது. செருப்பு அறுந்து போவதும் இறங்கும்போதுதான் அதிகம் நேர்ந்திருக்கிறது. அவளைப்போன்ற உடல்வாகு பெற்றவர்கள் செருப்பு மட்டும் அடிக்கடி மாற்ற வேண்டும் என்றில்லை. புடவை, உள் பாவாடை இவையும்தான்! அடிக்கடி கால் தடுக்கிக் கரையில் கிழிந்து



விடுகின்றன. புடவை ஒல்லியாக இருப்பவர்களுக்காக ஏற்பட்ட உடை. அல்லது புடவை கட்டிக் கொண்டு துணிக் கடைப் பொம்மை போல நடமாட்டம் ஏதுமில்லாமல் ஒரே இடத்தில் இருக்க வேண்டும். வெவ்வேறு உருவமுடைய ஆண்களுக்கு ஏற்றபடி உடை தைப்பது ஒரு விஞ்ஞானமாக வளர்ந்திருக்கிறது. அவர்கள் பாண்ட், ஸ்லாக் ஷர்ட் போட்டுக் கொண்டு தொந்தி தொப்பையை ஒளித்துக் கொண்டு விடுகிறார்கள். இப்போதெல்லாம் பெரிய நடிகர்கள் தவறாமல் டபிள் பிரஸ்ட் கோட் அணிந்து கொண்டுதான் 'கைதி கந்தசாமி வேஷம் அணிகிறார்கள்.

நெரிசல் நேரத்தில் பஸ் பயணம் செய்வது மனம் குன்றிப்போகும் இன்னொரு அனுபவம். பஸ்ஸில் உட்கார இடம் கிடைத்தாலும் அவள் இன்னொருவர் இடத்திலும் சிறிது பரவ வேண்டும். இதற்கு எதிர்ப்பு இல்லாமல் போவதில்லை. இந்திய பஸ்களே பஞ்சத்தில் அடிபட்டுச் சாகப் போகிறவர்

களின் இறுதிப் பயணத்துக்காகத் தயார் செய்யப்பட்டவை போல உள்ளன.

லதாவுக்கு பஸ்களே குண்டுப் பெண்மணிகள் போலத்தான் தோற்றமளித்தன. ஒவ்வொரு பஸ்ஸும் ஒரு மாமியார். காலம் காலமாக மாமியார்கள் குண்டுக் கட்டையாக, கொடுமை மிகுந்தவர்களாக, உஸ் புஸ்ஸென்று பெருமூச்சு விட்டுக் கொண்டு இருப்பவர்களாகத்தான் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குண்டு மாமியாரான பஸ்ஸினுள் நூற்றியேழு பயணிகளில் ஒருத்தியாக லதா நின்று கொண்டு பயணம்செய்து கொண்டிருந்தாள். இவ்வளவு கும்பலில் அவளைவிட உருவத்தில் மெலிந்து இருப்பவர்கள் கூட நசுங்கத்தான் வேண்டும். பொருளுக்கு நீள அகல உயரம் உண்டு. பொருள் அழிக்கக் கூடியதல்ல என்ற இலக்கணங்களோடு பொருள் நசுக்கக்கூடியது என்ற இலக்கணத்தின் ஓர் உச்ச கட்ட நிலை மாமியார் பஸ்களில் பயணம். உடல் தோற்றம் கல்யாணத்துக்கு முன்னால் ஏன் இவ்வளவு முக்கியமாக இருக்கிறது? முக்கால்வாசிப் பெண்கள் கல்யாணத்துக்குப் பிறகு ஒழுங்காகத் தலைவாரிப் பின்னிக்




**பம்பாயில் தனியார் டி.வி. நிலையம்**

மேல் நாடுகளில் இயங்கி வரும் தனியார் டி. வி. நிலையங்களைப் போல், கேபிள் மூலம் டி. வி. நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் ''நெரூலா வீடியோ நெட்வொர்க்'' என்னும் தனியார் நிலையம் ஒன்று பம்பாயில் இயங்கி வருகிறது. இந்நிலையம் தங்களது வாடிக்கையாளர்களுக்குத் தினமும் மூன்று மணி நேரத்துக்கு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது.

இவர்கள் தங்கள் நிலையத்திலிருந்து வாடிக்கையாளரின் டி. வி. செட்டை கேபிள் மூலம் இணைக்கிறார்கள். இவர்கள் கேபிள் மூலம் ஒளிபரப்புவதால் ஒயர்லஸ் சட்டம் மூலம் இவர்களைத் தடுக்க முடியவில்லை.

இந்நிலையம் தங்களது நிகழ்ச்சிகளைக் காண்பதற்கான வாடகையாக மாதம் ரூ. 200 வசூலிக்கிறது. மேலும் முதல் இணைப்பிற்காக ரூ. 1500 வசூலிக்கிறது.


-ராஜ்குமார்

கொள்வதுகூட இல்லை. உருவம் பற்றிச் சொல்ல வேண்டாம். கணவன் வருமானம் கூடுகிறதோ இல்லையோ இவர்கள் உருவம் கூடிவிடுகிறது. அதுவும் எப்படி? இனிமேல் என்னை யார் என்ன கேட்க முடியும் என்கிற போன்ற அலட்சியம் பிரதிபலிக்கும் வகையில். இந்த கணவன்கள் இதே பெண்களை இப்போதிருக்கும் உருவத்தைக் கண்டு மணம் முடிக்கச் சம்மதிப்பார்களா? அதற்குப் பழி வாங்கத்தான் இப்படி ஊதிப் போய்விடுகிறார்கள் போலிருக்கிறது.

லதாவுக்கு உற்சாகமாக இருந்தது. தனிப்பட்ட முறையில் அவளாக அவளுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்குப் பழிவாங்க முடியாவிட்டாலும் அவள் இனம் ஆண் வர்க்கத்தை இழிவுபடுத்திக் கொண்டுதான் இருக்கிறது. 'நான் அழகாக இருந்தால்தான் கல்யாணம் பண்ணிக்கொள்வாயா? கல்யாணம் ஆன பிறகு உன் முகத்தில் எப்படிக் கரி பூசுகிறேன் பார்' என்று எக்காளம் பண்ணிக் கொண்டிருக்கிறது. ஆண் வர்க்கம் பெண் வர்க்கம் இரண்டும் ஒன்றையொன்று பழி தீர்த்துக் கொண்டும், இழிவுபடுத்திக் கொண்டும் இருக்கின்றன. மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்தே இப்படித்தானா? அல்லது மனைவி, குடும்பம், சமூகம் என்று ஏற்பட்ட பிறகா? நிச்சயமாகக் கல்யாணம் என்று ஒரு ஏற்பாடு ஏற்பட்ட பிறகுதான். ஆதலால் கல்யாணம் என்பதற்கு முக்கியத்துவமும் புனிதத் தன்மையும் இல்லை என்று செய்து விட்டால் இந்த ஆண் வர்க்கம்–பெண் வர்க்கம் போட்டா போட்டிக்கு அர்த்தமில்லாமல் போய்விடும்.

லதா பஸ்ஸில் தன்னைச்சுற்றி உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டுமிருப்பவர்களைப் பார்த்தாள். இவர்கள் எல்லாரையும் ஒரே மாதிரிக் கவனத்துடன் பார்க்க முடியவில்லை. இருந்தாலும் இவ்வளவு ஆண்கள் பெண்களிடையில் திருமணம் இல்லாமல் தம் பதியாக வாழ எவ்வளவு பேர் தயார் என்று கேள்வி கேட்டால் எத்தனை தயார்கள் கிடைக்கும்? அநேகமாக எல்லாரும் இது ஒரு ஹாஸ்யத் துணுக்கு என்பது போல் சிரிப்பார்கள். பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தால் சங்கடமும் எரிச்சலும் வாரி இறைபடும். கல்யாணமாகாத குண்டுப் பெண் யாராவது இருந்தால் அவள் மட்டும் ஒரு கணம் தயங்குவாள்.

லதாவுக்கு ஆச்சரியம் மேலிட்டது. இந்த அழகு என்பதுதான் என்ன? அவளும் பள்ளி–கல்லூரியில் படித்த பதினைந்து பதினாறு ஆண்டுகளில் எவ்வளவோ நூற்றுக் கணக்கான புத்தகங்களும் ஆயிரக் கணக்கான பாடங்களும் படித்திருப்பார்கள். அதில் இப்போது எவ்வளவு ஞாபகம் இருக்கிறது? ஆனால் அவற்றை ஞாபகம் வைத்திருப்பதை அளந்து தான் பரீட்சையில் மார்க் போட்டுப் பட்டம் தருகிறார்கள். பட்டத்துக்குப் பிறகு படித்ததெல்லாம் கரும்பலகையில் எழுதப்பட்ட எழுத்துப் போல அழிந்து போய்விடுகின்றன. அழகும் இந்தப் படிப்புப் போல ஏதோ ஒரு குறிக்கோளுக்காக — கல்யாணத்துக்காக—




ULKA-RFC-2-82-TM

மட்டும்தானா? அதன் பிறகு அழகைக் கழற்றித் தூரப் போட்டு விடலாம், அப்படித் தானே?

லதாவுக்கு அவளைச் சுற்றியிருந்தவர்களில் எவ்வளவு பேரை அழகுடையவர்கள் என்று தேர்ந்தெடுக்க முடியும் என்ற சந்தேகம் எழுந்தது. அந்த நெரிசலில் யாருமே அழகைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்களாகத்தான் தோன்றினார்கள். இதில் எவ்வளவு பேருக்குக் கல்யாணம் ஆகியிருக்கும்? சரி பாதி என்று கணக்கு வைத்துக்கொண்டால் இவர்கள் அழகின் உச்சகட்டப்பயனை அடைந்துவிட்டு அதை அனாதரவாகக்கைவிட்டவர்கள். இன்னொரு பாதிப்பேருக்கு எதிர்காலம் ஒழுங்காக அமைய அழகு தேவை.

எது எப்படியோ, குண்டுப் பெண்ணாக இருந்தாலும் இன்னும் பெண் பார்க்க வருகிறார்கள். அவர்கள் என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்வதற்குப் பதிலாக நான் அந்த ஆண்களைப் பிடிக்கவில்லை என்று சொன்னால் என்ன? வருபவன் எவ்வளவு கறுப்பாகவும் குட்டையாகவும் வழுக்கைத் தலையாகவும் ஒன்னரைக் கண்ணனாகவும் இருந்தால்கூட நான் ஏன் அவனைப் பிடிக்கவில்லை, வேண்டாம் என்று சொன்னது கிடையாது? ஒரு வேலை எனக்கு ஒருபாங்கிலோ, வெள்ளைக்காரக் கம்பெனியிலோ ஆயிரத்தியிருநூறு ரூபாய் சம்பளம் இருந்து'மாக்ஸ் ஃபாக்டர்' மேக்கப் போட்டுக் கொள்பவளாக இருந்தால் என் தடிமன் அவ்வளவு தடிமனாகத் தென்படாது.

அந்த மார்வாடிப் பெண் ராதா பொத்து போகரு என்று இருந்தவள் புனாவுக்குச் சென்று ஒரு அழகு ஆசிரமத்தில் ஒரு மாதம் இருந்து பாதியாகஇளைத்து வந்தாள். அடுத்த மாதம் கல்யாணம். வழக்கம்போல மாப்பிள்ளை குதிரை மீது வருதல், இரண்டு வாத்தியக் கோஷ்டி, ஒரு விருந்து, ஒரு கோகோ கோலா... அடுத்த மாதம் ராதா பழையபடி ஆகிவிட்டாள். எப்படியும் கணவன் மீது பழிவாங்கலாம். இப்படித்தான் பழிவாங்க வேண்டும்.

பஸ் நின்று அந்த இடத்தில் இறங்க வேண்டியவர்களுடன் லதாவும் இறங்கினாள். பல நூற்றுக் கணக்கானவர்களுடன்அவளும் அந்த மாநில அரசு அலுவலகக் கட்டிடத்தினுள் அடைக்கலம் புகுந்தாள். பகல் இடைவேளையில் அவள் கொண்டு வந்திருந்த உணவுடன் காண்டீனிலும் சென்று டிபன் சாப்பிட்டாள். இனி உடல் இளைக்க எந்த முயற்சியும் எடுப்பதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டாள். அவளை அடுத்த முறை பெண் பார்க்க வரப்போகிறவனை அவள் நேரடியாக 'உன்னைப் பிடிக்கவில்லை, போய் வா' என்று சொல்லி முடித்தவுடன் அவன் முகத்தில் எந்தப் பகுதி அதிகமாகக் கோணிக் கொள்ளும் என்று கற்பனை செய்து பார்ப்பதில் லயித்துப் போனாள்.



## சிந்தனைக்குச் சில

தொகுப்பு:
**ஹேமா ஆனந்ததீர்த்தன்**

உனக்குத் தேவையில்லாதவைகளை இன்று நீ வாங்கினால், நாளை உனக்குத் தேவையானவைகளையே நீ விற்க வேண்டி வரும்.
—பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

உண்மை நல்லது: மகிழ்ச்சி அதை விட நல்லது: ஆனால் உண்மையில்லாமல் மகிழ்ச்சி இல்லை.
—ஒரு ரஷ்யக் கவிஞர்

நான் ஒரு மனிதன்: எனவே மனிதனைப் பற்றி நான் அக்கறை எடுத்துக் கொள்ளாத விஷயம் எதுவுமே கிடையாது.
ரோமானிய நாடகாசிரியர் டெரன்ஸ்

பாம்பு சட்டையை உரிப்பது போல வந்த கோபத்தை எவன் நீக்கிவிடுகிறானோ அவன்தான் ஆண்மை படைத்தவன்.
—'வியாசர் விருந்'தில் ராஜாஜி

மனிதன் என்கிற ஒரு பிராணியால் மட்டுமே வெட்கப்பட முடியும்: அதன் தேவையும் அவனுக்கு மட்டுமே.
—மார்க் ட்வெய்ன்

உன் எதிரியின் முன்னேற்றத்தை உன்னால் தடுக்க முடியாது: வேண்டுமானால் உன் முன்னேற்றத்தை நீ தடுத்துக்கொள்ளலாம். —யாரோ




பினாகா ஃப்ளோரைட் மூலம் உங்கள் பற்களின்
ஆயுளை நீடியுங்கள்.

பினாகா ஃப்ளோரைட், மிகவும் சக்தி வாய்ந்த
ஃப்ளோரைட் கலவை கொண்டது. இது
உண்மையிலேயே பல்லின் எனாமலோடு கலந்து,
பற்களைப் பலப்படுத்துகிறது.

வாழ்நாள் முழுக்க, சொத்தை விழுவதைத்
தடுத்துப் போரிட, இதன் பராமரிப்பு
சேவை இன்றியமையாதது.

தவறாமல் பினாகா ஃப்ளோரைட்
கொண்டு பல் துலக்குங்கள். நீங்கள்
இதனை உபயோகிப்பதைப் பொறுத்து,
உங்கள் பற்களின் ஆயுள் நீடிக்கிறது.

பல்லுக்கு உறுதி

பற்சிதைவுக்கு எதிரி ...




# பினாகா ஃப்ளோரைட்

**இந்தியாவின் முதன் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை**

ULKA-BF-1-81-TAM




சிதம்பர கிருஷ்ணன்



✕ ஆதிமூலம்



✕ சந்தானம்



✕ தனபால்

# மாடர்ன் ஆர்ட் புரிகிறதா?

## ✕ அசைவுகள்

அசையாமல் அமரும்படி கூறிய பிறகே தன் தூரிகையால் உருவத்தை வரையும் ஓவியர்களின் வழக்கமான பாதையிலிருந்து விலகி, அசைவுகளையே ஓவியமாக்கியிருக்கிறார் ஆதிமூலம். ''நகர்ந்து செல்லும் மேகக் குவியலை முப்பரிமாணத்தோற்றத்தில் வரைந்திருக்கும் நான் ஒரு பொருளைப் பார்த்ததும் அது எனக்குப் பிடித்திருந்தால் வரையத் தொடங்குகிறேன். மேலும் கோடுகளைக் கிழிக்க என் தூரிகை மறுக்கின்றபோது அந்த ஓவியம் முற்றுப்பெற்று விட்டதாகக் கருதுகிறேன்'' என்கிறார் தேசிய விருது பெற்றுள்ள இந்த ஓவியர்.

## நாற்காலி

1981 ஆம் ஆண்டு மாநில விருதைப் பெற்றுள்ள சந்தானம் கொடைக்கானல் சென்றிருந்தபோது ஏற்பட்ட ஒரு வகை பாதிப்பின் விளைவே 'நாற்காலி' என்ற இந்த ஓவியம். பல் முதற்கொண்டு பல இடங்களில் இருக்கைகளுக்காக – அதாவது நாற்காலிகளுக்காக மனிதர்களிடையே எழும் போராட்டங்களின் உருவமே இந்த நாற்காலி. ''உற்றுப் பாருங்கள்... நாற்காலி அழுவதுபோல் தோன்றும்'' என்கிறார் இவர்.

## குதிரைகள்

''மிருகங்களிடையே அழகும் கம்பீரமும் மிக்கது குதிரை. அது ஓடும்போது அதனுடைய தசைகள் கால்கள் உயர்ந்து தாழ அதன் கழுத்து கேசம் காற்றில் பறக்க அதன் தலை ஏற்ற கோணத்தில் இருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம்.... அந்தக் காட்சியை... அதாவது ஓடுகின்ற குதிரைகளின் அசைவுகளை ஓவியமாக்கியுள்ளேன். ஆழ்ந்து இந்த ஓவியத்தைப் பார்த்தால் இரண்டு குதிரைகள் உங்கள் கண் முன்னே ஓடிக்கொண்டிருக்கும்'' என்கிறார் 1980ம் ஆண்டு மாநில விருதைப் பெற்றிருக்கும் சிதம்பர கிருஷ்ணன்.

## பசுவும் கன்றும்

''மரத்தில் சிற்பம் செதுக்குவது கரணம் தப்பினால் மரணம் என்ற கதைதான். ஏனெனில் ஒரு பகுதியைத் தேவைக்கு அதிகமாகச் செதுக்கிவிட்டால் சிற்பம் சிதைந்துவிடும். இந்தச் சிற்பத்தைக் கவனமாகப் பார்த்தால் பசுவின் மடியில் பால் குடித்துக் கொண்டிருக்கும் கன்றையும், கன்றை நாவால் வருடவரும் பசுவையும் காணலாம்'' என்கிறார் தனபால். 'பசுவும் கன்றும்' சிற்பத்தை மட்டுமின்றி இங்கே



✕ அசைவுகள்



* பாஸ்கரன்





* தட்சிணாமூர்த்தி



நீங்கள் காணும் அத்தனை கலைஞர்களையும் உருவாக்கியவர் இவரே. கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர்.

### பூனைகள்

''வீட்டில்வளர்க்கப்படும்பிராணிகளிலேயே அதிக அசைவுகளைத் தன்னிடத்தில் கொண்டது பூனையே.. அது சும்மா நிற்கும்போது கூட தன் விழிகளைச் சுழற்றிகொண்டிருக்கும். நாவால் தன் வாயைத் துடைத்துக்கொண்டிருக்கும். திடீரென்று அதன் வால் உடல் பகுதிகளை வருடும். அதன் தலை வாலை நோக்கித் திரும்பும். பூனையின் இத்தகைய விசித்திர அசைவுகளைப் பிரதிபலிக்கும் இந்த ஓவியத்தில் இரண்டு பூனைகள் இடம்பெற்றுள்ளது கலைக் கண்களுக்கே புலப்படும்'' என்கிறார் பலமுறை வெளி நாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ள பாஸ்கரன்.





### முடிவில்லாப் பயணம்


உருவத்தை முதலில் களிமண்ணால் செய்து அதைப் பஞ்ச உலோகக் கலவை வார்ப்பாக மாற்றும் பழைய உத்தியில் அமைத்த புதிய சிற்பமிது. ''வாழ்க்கை என்னும் முடிவில்லாப் பயணத்தின்முடிவைத்தேட நினைக்கும் ஆர்வத்தையும் அவலத்தையும் இங்கே நான் மூன்று பெண்களாக உருவாக்கிக் காட்டியுள்ளேன்''என்கிறார் இருமுறைமாநில விருதுகளைப் பெற்றிருக்கும் தட்சிணாமூர்த்தி.

பேட்டி: ஏ. வி. எம். கணேஷ்


விருப்பம் போல் உரைநடையை ஒடித்து எழுதுவதெல்லாம் எப்படி புதுக்கவிதை ஆகாதோ - அதுபோல், இஷ்டம்போல் இழுக்கப்படுகின்ற கோடுகள் எல்லாம் மார்டன் ஓவியமாகி விடாது.

"உங்கள் படைப்புகளைப் பற்றி கூறுங்களேன்" என சில மார்டன் ஆர்ட்டிஸ்டுகளையும், சிற்பிகளையும் கேட்ட போது....

* பூனைகள்



* குதிரைகள் -



# மண்ணில் தெரியுமோ வானம்?

## 11

சியாமளா காலை ஏழரை மணிக்கெல்லாம் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தாள். அவள் ஆபீஸ் கிண்டியில் இருந்தது. வீட்டிலிருந்து போக நேரடி பஸ் வசதி இருந்தது. எட்டரை மணி ஆபீசுக்கு எட்டு மணிக்குக் கிளம்பினால் போதுமானது. ஆனால் அவள் ஏழரைக்கெல்லாம் கிளம்பிக் கொண்டிருந்தாள். 'ஏன் ஏழரைக்குக் கிளம்புகிறாய்? எட்டு மணிக்குக் கிள்ம்பினால் போதுமே! அந்த அரை மணி நேரத்தில் வீட்டு வேலைகளில் எதையாவது பார்க்கலாமே?' என்று அவளிடம் சொல்கிற தைரியம் அம்மாவுக்கு இல்லை. சொல்லக்கூடிய மனிதனான மணி ஒன்றும் சொல்வதில்லை. மாறாக, அவள் ஆபீஸிலும் உழைத்துவிட்டு வந்து வீட்டிலும் உழைக்கிற பாவனையில் பேசினான்.

வீட்டில் பெரிதாய் வேலை என்று சியாமளா எதையும் செய்வதில்லை. ஆறு மணிக்கு எழுந்து வந்தாளானால் அதற்குள் அகிலா காப்பி போட்டு வைத்திருப்பாள். அதை எடுத்துத் தன் கணவனுக்குக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு, தானும் போர்ன்விட்டா கலந்துகொள்வாள். அதையும் சும்மா கலந்துகொண்டு போக மாட்டாள்.

''ஏன் அகிலா இன்னிக்குப் பால் தண்ணியா இருக்கு'' என்பாள்.

அந்தக் கேள்வியில் அகிலா பாலைக் குடித்துவிட்டுத் தண்ணீர் கலந்துவிட்ட பாவனை தொனிக்கும். அதை உணர்ந்தும் அகிலா கோபப்பட மாட்டாள்.

''இல்லையே மன்னி, தினமும் இருக்கிற மாதிரிதானே இருக்கு'' என்று நிதானமாகவே பதில் சொல்வாள்.

ஒரு நாள் தண்ணீர்ப் பால் என்றால் மறு நாள் ''போர்ன்விடா ரொம்பக் குறைஞ்ச மாதிரி தெரியறதே'' என்று தனக்குள் சொல்லிக் கொள்கிற மாதிரி அகிலா காதில் விழுகிறபடி சொல்வாள். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று அகிலா பேசாமல் இருப்பாள். ஆனால் பார்வை மட்டும் அவளின் முகத்துக்கு ஒரு முறை போய்வரும். 'அட அற்பமே' என்று கேட்கும். பின்னர் மெதுவாகத் தழையும்.

முதல் ஒரு வாரம்தான் அந்த போர்ன்விடா டின் சமையலறை அலமாரியில் இருந்தது. பின்னர் மெதுவாக அங்கிருந்து முன்



அறையின் அலமாரிக்குப் போய் விட்டது. தினமும் காலையில் சியாமளாவுடன் வெளியில் வந்து உடனே ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் அது அவளுடனே – அவளைப்போலவே மீண்டும் அந்த அறைக்குப் போய்விடுவதைப் பார்த்து அகிலா சிரித்துக் கொண்டாள். 'அவள் வளர்ந்த விதம் அப்படி' என்று சமாதானப்படுத்திக் கொண்டு பேசாமல் இருப்பாள்.

போர்ன்விடா டின்னை வைத்துவிட்டு வெளியில் வரும் சியாமளா பின் பக்கம் போய் பம்ப்பிலிருந்து தண்ணீர் அடித்துக் குளித்து விட்டுத் தன் கணவனுக்கும் ஒரு வாளி தண்ணீர் அடித்து வைத்து விட்டு வருவாள். அந்தத் தண்ணீரில் வேறு யாராவது குளித்து விடுவார்களோ என்று சற்று உரத்த குரலில்,

''உங்களுக்குத் தண்ணீர் அடிச்சு வச்சிருக்கேன். போய்க் குளிச்சுட்டு வந்துடுங்கோ ...'' என்பாள்.

அந்த வார்த்தைக்கு உடனடியாகக் கீழ்ப்படிபவனாக அவன் தன் டவலையும் சோப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு ஓடுவான். அப்படி அவன் போகிறபோது சியாமளா வளர்க்கிற நாய்க்குட்டி ஒன்று ஓடுவதாக அவளுக்கு ஒரு விநாடி அவனின் உருவம் மாறித் தெரியும்.

அவன் குளித்துவிட்டு வருவதற்குள் சியாமளா உடை மாற்றி, தலைவாரி, பளிச்சென்று பொட்டு வைத்துக் கொண்டு வெளியில் வருவாள். அதைப் பார்த்துவிட்டு அவன் கேட்பான்,

''நீ ரெடியாயிட்டியா சியாமளா? இதோ ஒரு நிமிஷத்தில நானும் டிரஸ் பண்ணிண்டு வந்துடறேன். ரெண்டு பேரும் ஒண்ணாவே டிபன் சாப்பிடலாம்....''

அடுத்த பத்து நிமிடத்துக்கெல்லாம் அவன் டிரஸ் பண்ணி முடித்துச் சமையலறை வாசலுக்கு வந்து,

''டிபன் ரெடியாயிடுத்தா அகிலா?'' என்பான்.

அவள் இயந்திரமாகத் தலையாட்டினதும் இரண்டு பேரும் சமையலறையில் சாப்பிட உட்காருவார்கள். அவர்கள் தட்டில் இட்லிகளை வைக்கிறபோது அகிலாவுக்குத் தான் பண்ணின கற்பனை மறக்காமல் ஞாபகத்துக்கு வரும்.

அவளும் மன்னியும் எதிர் எதிராகச் சாப்பிட உட்காருகிறார்கள். அவள், 'இன்னிக்கு மோர்க் குழம்பு ரொம்ப ஜோரா இருக்கு மன்னி!' என்கிறாள். 'அப்படின்னா இன்னும் ஒரு கரண்டி விட்டுக்கோ...' என்று இவள் மறுக்க மன்னி விடாமற் சாதம் போட்டு மோர்க் குழம்பை விடுகிறாள்! ''வயசுப்பொண் நன்றாகச் சாப்பிட வேணுமோ?'' என்கிறாள். கனவுகள்... கனவுகள்...! அப்படி எத்தனை கனவுகள் அவளுக்குள் நொறுங்கிக் குவியலாய்க் கிடக்கின்றன. அந்தக் குவியலுக்குள் மன்னியைப் பற்றிக் கண்ட இந்தக் கனவும் ஒன்று....



டிபன் முடிந்து கையலம்பி மீண்டும் ஒரு முறை கண்ணாடியில் தங்களின் முகத்தையும் உடையையும் சரிபார்த்துக் கிளம்புகிறபோது மணி ஏழரையாகியிருக்கும். போகிறபோது அவன் மட்டும் தினமும் மறக்காமல் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போவான்.

''மத்தியானம்சாப்பாடு அனுப்பிடு அகிலா...'' அதைக்கூட சியாமளா சொன்னதில்லை. அம்மாவிடமோ, அவளிடமோ போயிட்டு வரேன் என்றுகூடச் சொல்வதில்லை. அப்படி சொல்ல வேண்டியது அவசியமில்லை என்று தனக்குள் முடிவுசெய்து கொண்டிருக்கலாம். அது போலவே

ஆபீஸ் விட்டு வீடு திரும்பத் தினமும் ராத்திரி மணி எட்டுக்கு மேல் ஆகும். அப்போதும் இரண்டு பேரும் ஒன்ருகவே வருவார்கள். 'ஆபீஸ் முடிந்து இருவரும் எங்காவது வெளியில் போய் விட்டு வருவார்கள்' என்று அகிலாவாக நினைத்துக்கொள்வாள். அவர்கள் வர மணி பத்தாகிறபோது, சினிமாவுக்குப் போயிருப்பதைத் தெரிந்து கொள்வாள். சில நாட்கள் இரண்டு பேரும் வெளியில் தங்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து 'சாதம் வேண்டாம்' என்கிறபோது அவளுக்கு ராம்ஜியின் ஞாபகம் வரும். அவன் அப்படிச் சொன்ன நாட்களை நினைத்துக் கொள்வாள். அப்போது மட்டும் லேசாய்க் கண்களில் நீர் துளிர்க்கும். அதையும் மிகவும் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு விடுவாள்.

வாரத்தின் ஐந்து நாட்கள் இதேபோல் ஓடி ஆருவது நாளான சனிக் கிழமை மட்டும் ஒரு மாறுதல் தெரியும். அதாவது அன்று சியாமளாவுக்கு விடுமுறையானதால் வெள்ளிக் கிழமை ராத்திரியே வீடு திரும்ப மாட்டாள். வெள்ளிக் கிழமை காலையில் ஆபீசுக்குப் போகிறபோது ஒப்புக்கு அம்மாவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போவாள்.

''ஆபீஸ் விட்டதும் நான் அங்கிருந்து நேராக எங்கம்மாவாத்துக்குப் போறேன். சனி, ஞாயிறு இரண்டு நாளும் அங்கிருந்துவிட்டு திங்கட் கிழமைஅங்கிருந்தேஆபீசுக்குப் போய் சாயந்திரம் வரேன்...'' என்பாள். பின்னுலேயே மணியும் அம்மாவின் எதிரில் வந்து நிற்பான்.

''அம்மா, நேற்று ஆபீசுக்கு சியாமளாவின் அப்பா போன் பண்ணியிருந்தார். சியாமளாவோடு என்னையும் வரச்சொல்லிக் கூப்பிட்டார். நான் போகட்டுமா '' என்று கேட்பான்.

'இதற்கு மட்டும்என்னஎன்னைக் கேட்கிருய்?' என்று சொல்ல நினைத்தாலும் அவளின் வாயிலிருந்து வேறு வார்த்தைகள்தான் வரும்.

''போயிட்டு வாயேன். இதுக்கு என்னைக் கேட்கணுமா?''

கிட்டத்தட்ட ஆறு மாதமாய் இதே சூழலில் காலையில் டிபன் பண்ணி, பகல் சாப்பாட்டைத் தயாரித்தனுப்பி, ராத்திரி அவர்களின் வருகைக்காகக் காத்திருந்து அகிலா சலித்துப் போனுள். இப்படி அவர்களுக்காக உழைப்பதிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டுமானுல் அவளுக்கு ஒரு வழிதான் தோன்றியது.

'சியாமளா மாதிரி நாமும் வேலைக்குப் போனுல் என்ன?'

அம்மாவிடம் கேட்டபோது அம்மா உடனடியாகத் தலையாட்டினுள்.

''நல்ல வேலையா கிடைச்சா போயேன். எத்தனை நாள்தான் இப்படி வீட்டில் அடைஞ்சு கிடப்பே? வேலை செய்யறவள்னு தெரிஞ்சாவர்றவன்தோப்புக்கரணம்போடச் சொன்னுல்கூடப் போடுவான் போல இருக்கு உங்கண்ணு மாதிரி...'' என்ருள்.

அதற்கும் அகிலா பதில் சொல்லாமல் நிற்கவே அவளே மீண்டும் பேசினுள்.

''எல்லோரும் உங்கண்ணு மாதிரியா இருக்கா? அடுத்தாத்துக் கோபு இல்லையா, சம்பாதிச்ச அக்கா தங்கைக்கெல்லாம் செய்யலியா? கல்யாணம் கார்த்திகையெல்லாம் செஞ்சு வைக்கலியா? எனக்குன்னு எல்லாமே வக்கிரமா அமைஞ்சு போச்சு. முதல் கோணல், முற்றும் கோணல்ன்ற மாதிரி உங்கப்பாவில் ஆரம்பிச்சு எல்லாமே கோணலாகப் போயிடுத்து—''

''இன்னிக்கு மணி வந்ததும் சொல்லிட்டு நாளையிலிருந்து அப்ளிகேஷன் போட ஆரம்பிக்கிறேன்.''

அன்றிரவு மணியிடம் சொன்னதும் அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தான்.

''என்ன,நீ வேலைக்குப்போகப்போறியா?''

''ஆமாம், நல்ல வேலையாக் கிடைச்சாப் போகலாம்னுதான் இருக்கேன்...''

உடனே அவன் முகம் சிவக்க எழுந்து கொண்டான். ''நன்னுயிருக்கு. நீ வேலைக்குப் போறேன்னு சொல்லி என்னை அவமானப்படுத்தறது... அப்புறம் எல்லாரும் சொல்லுவா... அப்பா போனதுக்கப்புறம் இவன்தங்கையை வேலைக்கனுப்பிச் சம்பாதிக்கிறுன் பாரு, கையாலாகாதவன்னு என்னைத்தானே தூற்றுவா?''

''இதில் தூற்றுவதற்கு என்ன இருக்கு? மன்னி வேலைக்குப் போகலையா?''

''மன்னிக்குக் கல்யாணமாயிடுத்து...''

'' கல்யாணமாறதுக்கு முன்னுலேயும் தானே வேலைக்குப் போயிண்டிருந்தா?''

''அது வேறே விஷயம். அவளோட அப்பாவே அனுப்பி வச்சார். அந்த மாதிரி அப்பா உன்னை அனுப்பியிருந்தால் பரவாயில்லை. அவர் போனதுக்கப்புறம் நான் அனுப்பினுல் அது தப்பாகத்தான் படும்.''

''இப்போ நீ என்னதான்சொல்றேமணி?'' அவள் உடைந்து போன குரலில் கேட்டதும் அவன் திடமாகவும் தீர்க்கமாகவும் சொன்னுன். ''வேலைக்கும் போகவேணும் வேறெதுக்கும் போக வேணும். கூடிய சீக்கிரம் உனக்குக் கல்யாணம் பண்ணி அனுப்பிடறேன். அது வரை வீட்டில பேசாமல் இரு போறும்.''

''உங்களுக்குச் சமைச்சுப்போட்டுண்டா'' என்ற கேள்வி நாக்கு வரை வந்துவிட மிகவும் சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

(தொடரும்)

''ஐந்து வருடங்கள் கழித்து உன் மனைவிக்குக் குழந்தை பிறந்திருக்கே, ஆணு, பெண்ணு?''

''மூன்று ஆண்கள் இரண்டு பெண்கள்!'' —சீர்காழி ராதா




ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய் எண்ணெ
மூ. மூ. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன்: ஆபீஸ்: 2244 4494 மில்ஸ்: 2266 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR.Phone : 3107. 3745.

# குட்டி பூர்ஷ்வா

**விட்டல்ராவ்**

அன்றையத் தேதியில் குமாரசாமிக்கு அவசரமாய் நூறு ரூபாய் தேவைப்பட்டது. ராஜாபாதரிடம் கடன் கேட்டிருந்தான்.

நைட் டூட்டி. காலையில் ஏழு மணிவரை இருக்க வேண்டும். ஏழு மணிக்கு வேறு ஆள் வந்து டூட்டி முடிந்து விட்டதும் பல்லைத் தேய்க்காமலேயே சாலையைக் கடந்து எதிரேயுள்ள பெரிய நகராட்சிப் பூங்காவுக்குள் நுழைந்தான் குமாரசாமி. அந்த நேரத்திலேயே ஓரிருவர் சிமெண்ட் பெஞ்சியின்மேல் கண்ணைத் திறந்தவாறு தூங்குவதற்குப் படுத்திருந்தனர்.

—அப்போது ராஜாபாதர் நிச்சயம் வந்திருக்க மாட்டான் என்று நினைத்தபடியே மிருகங்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள பகுதியை அடைந்து பெஞ்சின் மீது உட்கார்ந்தான். காலையில் வேலைக்கு வந்திருக்கும் பூங்காத் தொழிலாளிகள் அங்கங்கே உட்கார்ந்திருந்தனர். இவனை ராஜாபாதருடன் நெருக்கமாய் அடிக்கடி பார்த்திருந்து அதேயளவு பணிவும் மரியாதையும் செலுத்தினர்.

''ஓவர்சீரு இன்னும் வர்லீங்க.''

''வரட்டும் வரட்டும்.''

கர்ப்பகாம்பாள் நகரைச் சேர்ந்த பெரிய மனிதர் ஒருவர் பூங்காவைச் சுற்றி வாக்கிங் போய்க் கொண்டிருந்தார். இரண்டு பேர் தம் தொப்பை கரைவதற்காக ஓடிக் கொண்டிருந்தனர். மரத்திலிருந்து என்னமோ பின் கழுத்தில் சரமாக உதிர்ந்தாற் போல... குமாரசாமி மரத்தை அண்ணாந்து பார்த்தான்.

கௌன்சிலர் வளர்க்கும் குரங்கு மரக்கிளையோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது. இவனைப் பார்த்து வேகமாகப் பல்லைக் காட்டியது.

''சார், ஓவர்சீரு வர்ராரு.''

இவன் திரும்பிப் பார்த்தான். பூங்கா ஓவர்சியர் ராஜாபாதர் சிமெண்டுபெஞ்சியில் படுத்திருப்பவர்களை எழுப்பிவெளியேற்று வந்திருந்தான்.

''காலங்காட்டியும் வல்...வல்...வல்... வந்து படுத்துத் தூங்கிறீங்களேய்யா. எய்...எய்...எய்... எந்திரிச்சிப்போங்கய்யாய்...ய்...ய்...இஞ்சினீரு வரப்போறாரு...'' என்று சொல்லிவிட்டு ராஜாபாதர், மற்றபடி கம்பீரமாகவே நடந்து மிருகக் கூண்டுகளுள்ள மர நிழலுக்கு வந்தான்.

''வல்...வல்...வல்...வா தொரை, இப்பத்தான் வர்ரியா?'' என்று குமாரசாமியை விசாரித்தான்.

குமாரசாமி ஜேபியிலிருந்து வெற்றிலை சீவல் பொட்டலத்தை எடுத்து அவிழ்த்து வைத்தான். உடனே ஒருவித கூடுதலான



நெருக்கம் அவர்களிடையே ஏற்பட்டாற் போலிருந்தது. வெற்றிலை போடுவதற்குப் பல்லைத் துலக்கியிருக்க வேண்டும் என்றெல்லாம் அவர்களுக்கு ஒரு கணக்கில்லை. காலையில் ஒரு முறை போட்டுத் துப்பினதும் பல் துலக்கல், குளியல் எல்லாமே முடிந்தாற் போலக் கூட இருக்கும். ஒருவனை அழைத்து இரண்டு ரூபாயைத்தந்து காப்பி வாங்கிவர அனுப்பினான் ராஜாபாதர்.

''கவுன்சிலர் வீட்டாண்டே யிருந்து வரேம்பா, கொக்...கொக்...கொக்...கொரங்குக்கு பிஸ்கட் வாங்கிப் போடுன்னு ர்ர்... ர்ரண்டு ரூவாகுடுத்தாரு. அத்தை காப்பிக்குக் குடுத்து வுட்டேன்...''

அங்கு கவுன்சிலர் குரங்கை வாங்கி விட்டிருப்பதிலிருந்து தனக்குக் கைச்செலவுக்குத் தட்டுப்பாடில்லை என்று நாசூக்காகச் சொல்லிக்கொண்டான் ராஜாபாதர். கூண்டுகளில் மான்கள், சீமைப் பெருச்சாளிகள், முயல்கள் பறவைகள் எல்லாம் இருந்தன.

குமாரசாமிக்கு மிக மிகக் கொஞ்சமே பொறுமை இழந்தாற்போல் வந்தது. கனைத்துக்கொண்டு கேட்டான், ''நம்ம விசயம்.. ஏற்பாடு பண்ணிட்டியாப்பா, ராஜா?''

''அதுக்குத்தானே ய்ய்... இதெல்லாம்'' என்று கூறிவிட்டு ''என் சாமர்த்தியத்தைப் பார்த்துக்கொண்டே இரு'' என்ற பொருளில் புன்சிரிப்புத் தவழ்ந்தான் ராஜாபாதர். பிறகு பையைத் திறந்து நிறைய காகிதங்களை வெளியில் எடுத்து வைத்தான். இரண்



டொருவரிடம் எதிலெதிலோ கையெழுத்து போடுமிடத்தில் பெருவிரல் ரேகை புரட்டிக் கொண்டான். ஒரு ரிஜிஸ்டரைப் பிரித்து வைத்துக் கொண்டான்.

''மஸ்டர்ரோல் எடுக்கறேன்.''

எல்லோரும் எழுந்து அவனுக்கு எதிரில் வந்து கைகட்டி நின்றனர்.

''ஸ்ஸ்... செங்குட்டுவன்?''

''ஆஜருங்க.''

''மொம்மது ''

''சார்...''

''ர்ர்ர்...ராக்கியப்பன் ''

''இருக்கேங்க.''

''ராஜி காப்பி வாங்கியாறப் போயிருக்கான். ஸ்ஸ்... செங்குட்டு, எங்கய்யா நேத்து ஆளைக் காணலே?''

ராஜி காப்பியுடன் வந்து விட்டான். இரு கண்ணாடிக் குவளைகளில் காப்பியைப் பகிர்ந்து இருவருக்கும் கொடுத்துவிட்டுப் பவ்வியமாய்த் தள்ளி நின்று கொண்டான்.

காப்பியைக் குடித்த தெம்பில் கம்பீரமாக உட்கார்ந்து கொண்ட ராஜாபாதர், ''நாளைக்குச் சம்பளம் தெரியுமில்லே '' என்றான்.




பெண்: என் அழகு திடீர்னு குறைஞ்சு போயிட்ட மாதிரி ஒரு உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதே. டாக்டர்!
டாக்டர்: ஏம்மா அப்படிச் சொல்றே?
பெண்: கொஞ்ச நாளா என் கடைக்கு வர கஸ்டமருங்க எல்லாரும் நான் குடுக்கிற பாக்கிச் சில்லறையை எண்ணிப் பாக்கறாங்களே!

—அமுதன் மைந்தன்

உடனே அந்தப் பூங்காத் தொழிலாளர்கள் திடுதிப்பென்று ஜீவகளை பெற்றுப் புது ரத்த ஓட்டமும், மூச்சுப் பரிமாற்றமும் பெற்றாற்போல் தோன்றினார்கள்.

''போன மாசம், ர்ர்.. ராஜி ரண்டு நாளு ஆப்செண்டு. ஸ்ஸ்....ஸ்ஸ் செங்குட்டுவன் ஒரு நாள் ஆப்செண்டு. கக்...கக்.. கந்தசாமி ரண்டு நாளு...'' என்று கூறிவிட்டு, அவர்களையே ஊடுருவினாற்போல் பார்த்தான்.

அவன் வழக்கமாய் வெளியிடும் தகவல் தான் இது. அவர்களும் வழக்கமாய்ச் செய்யும் காரியம்தான் இது — என்று அவர்கள் அடுத்துத் தங்கள் ஓவர்சியர் சொல்லப் போவதை — அதுவும் வழக்கமாய்ச் சொல்லும் ஒன்றுதான் என்றாலும் அதற்காக— எதிர்பார்த்து அவனையே பார்த்தார்கள்.

''எய்...எய்...எய்... எப்பவும் மாதிரிஎல்லாருக்கும்ப்...ப்...பிரெசெண்டு போட்டிருக்கேன். போதுமா?'' என்றான் ராஜாபாதர்.

அவர்கள் முகத்தில் வழக்கமாய்த் தோன்றும் மலர்ச்சி.

''ந்நா.... ந்நா.... நாளைக்குச் சம்பளம் வாங்கறப்ப ஆபிஸிலே நானு இருக்க மாட்டேன். சம்பளம் வாங்கிக்கினு உவ்... வுவ்... ஆட்டாண்டயே வந்திருங்க.''

பிறகு எதையோ பால் பாயிண்டால் தன் உள்ளங்கையில் எழுதிப் பார்த்துக் கொண்டு அவர்களிடம் சொன்னான்.

''இந்த மாசம் ஒரு ந்நு....ந்நு... நூறு ரூவா வரணும்.''

அவர்களின் முகம் காற்று இறங்கிச் சுருங்கித் தொங்கிற்று. ராஜி என்னவோ சொல்ல விரும்புவது தெரிந்தது.

''எங்கிட்டே இந்த மாசம் ஓர் ரூவாகூட மீதி இருக்காது சார். போன மாசமே ஆட்டாண்டே சீட்டுக்குக் கட்டல்லே. இந்த மாசம் என்னை வுட்டிருங்க. வர்ர மாசம் பத்து ரூவாயா தர்ரேன்...''என்றான் அவன்.

ராஜாபாதர் கண்டிப்பாகப் பணம் வந்தாக வேண்டும் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து இளம்பி மரத்தடியை அடைந்தான்.

''என்னாச்சி?'' என்றான் குமாரசாமி.

''நாளைக்குச் சம்பளம். க்...க்.. கலெக்‌ஷனாவட்டும். தர்ரேன். அஞ்சு வட்டிக்குத் தான் கெடைக்கும்.''

பிறகு எல்லாரும் பூங்காவை விட்டு வெளியில் வந்து நின்றனர்.

''எங்கூட்டுக்குக் கூட உயிர் வேலி போடணும்பா ராஜாபாதர்'' என்றான் குமாரசாமி.

''நை...நை...நைட் குவீன் போட்டுத் தரச் சொல்லிரவா? நாத்திக் கௌமை ரண்டாளுங்களை வுடறேன். ஒங்கூட்லே...'' என்று சொல்லிவிட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டுக் கத்தினான்.

''அர்ஜெண்டா ஒரு கால் போடணுமே.''

''வா பண்ணிக்குவியாம்'' என்று கூறி ராஜாபாதரை அழைத்துக் கொண்டு தன் அலுவலகத்தில் நுழைந்து டெலிபோன் இருக்கும் அறையை அடைந்தான் குமாரசாமி. அங்கே அவனுடைய ஏ. இ. உட்கார்ந்திருந்தார்.

''சார், இவரு நம்ம பிரண்டு. எதிரிலே பார்க் ஓவர் சியராயிருக்காரு. அர்ஜண்டா பீப்பிள்ஸ் பார்க் ஆபீசுக்கு கால் ஒண்ணு பண்ணிக்கணுமாம்'' என்று தன் ஏ. இ. யிடம் சொன்னான். குமாரசாமி.

ஏ. இ. அனுமதியளித்து விட்டார்.

பேசி முடித்ததும் ராஜாபாதரைக் கேட்டார் ஏ. இ.

''நம்ம ஆபீசைப் பார்த்தீங்களா, காஞ்சி கெடக்கு. செடி கொடி எதாச்சும் கொணாந்து வச்சுக் கண்ணுக்குக் குளிர்ச்சியா பண்ணிக்

காட்டுங்களேன். ஜி. எம். இன்ஸ்பெக்ஷன் வருது. எங்க ஆபீசுக்குக் கொஞ்சம் பேரு கிடைக்கட்டுமே. ஒங்க தயவிலே...''

''மொதல்ல ரண்டாளுங்களைக் கொக்... கொக்... கொணந்து வுட்டு எடத்தைக் கொத்திக் கிந்திரீர்... ரடிப் பண்ணச் சொல் றேன்'' என்று கூறிவிட்டு அங்கு உடனடியாகத் தனக்குக் கிடைத்த பிடிப்பை நழுவ விடாமல் ரிப்பன் பில்டிங்குக்கும் ஒரு டெலிபோன்கால் போட்டுப் பேசிவிட்டே அங்கிருந்து புறப்பட்டான் ராஜாபாதர்.

அவ்வளவு சீக்கிரத்தில் அந்தக் காய்ந்த இடத்தை அவன் கண்ணுக்குக் குளிர்ச்சியாகச் செய்து காட்டிவிட மாட்டான் என்பது குமாரசாமிக்குத் தெரிந்த விஷயம்.

மறுநாளைக்கடுத்த நாள் பூங்கா ஓவர்சீயர் வரவில்லை. அதற்கப்புறம் குமாரசாமிக்குப் பகல் டூட்டி ஆரம்பமாகி விடும். காலையில் பத்து மணியிலிருந்து மாலை ஐந்தரை மணி வரை. காலை ஏழு மணிக்கெல்லாம் வந்து பூங்காத் தொழிலாளிகளுக்கு வேலையைப் பகிர்ந்தளித்துவிட்டு ஒன்பது மணிக்குள் போய்விடும் ஓவர்சீயர் ராஜாபாதரைச் சந்திக்க முடியாது. அதற்குப் பிறகு தலைமைச் செயலகமான பீப்பிள்ஸ் பார்க்கில்தான் பார்க்கலாம்.

மறுநாள் பகல் டூட்டிக்கு முன்னதாகவே வந்துவிட்ட குமாரசாமி ராஜாபாதரைப் பார்த்து விட்டான். வழக்கம் போல் வெற்றிலைச் சீவல் பொட்டலத்தைப் பிரித்து வைத்து உறவு கொண்டாடினான்.

''இன்னும் கலெக்ஷன் ஆவலே... ஆவட்டும் தர்ரேன்'' என்றான் ராஜாபாதர்.

''கலெக்ஷனு. எப்படி?'' என்று கேட்டான் குமாரசாமி.

''அவங்களுக்கு ல்..ல்...லீவு லீவு எதுவும் கிடையாது. கூலிக்காரங்க. அப்பப்ப ஆப்சென்டாவாங்க. ஆனா நா ஆப்சென்டு போடாம, வேலைக்கி வந்தாப்பலே பீ.... பீ ...பீ... பிரசென்டு போட்டிருவேன். சம்பளம் கக்...கக்....கக்....கட்டாவாது. சம்பளம் வாங்கினதும் எனக்கு ரண்டு மூணுனு எல்லோருமே மொய்யெழுதிடுவானுங்க...'' என்றான் கண்ணைச் சிமிட்டியபடியே ராஜாபாதர்.

டெலிபோன்செய்யவேண்டுமெனத்தொலைபேசி நிலையத்துக்குள் நுழைந்தான். புதிய குரோட்டன்ஸ்களை வெட்டி வந்து வைப்பதாக எதிர்ப்பட்ட ஏ. இ. யிடம் சொல்லிவிட்டுத் தாராளமாக டெலிபோனை எடுத்து உபயோகித்தான். நாற்காலியில் படுத்தாற்போல் சாய்ந்து சரிந்து உட்கார்ந்து இரண்டு மூன்று டெலிபோன் கால்களைப் போட்டுச் சௌகரியமாகப் பேசிவிட்டுப் போனான்.

ராஜாபாதர் ஏறக் குறைய அந்த அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியன் ஒருவனாகவே தோன்றினான். ஏ. இ. யின் நண்பன் என்ற முத்திரையோடு அங்கு தாராளமாக நுழைந்து திரிந்து, ஐஸ் வாட்டர் குடிக்க டாய்லெட்டை உபயோகித்துக் கொள்ள, டெலிபோன் செய்து கொள்ள என்றெல்லாம் வசதிகளைத் தேடிக் கொள்ள முடிந்தது அவனால். ஆனால் அந்த அலுவலகத்தின் சுற்றுப்புறம் இன்னும் காய்ந்தே கிடந்தது.

அன்று குமாரசாமியிடம் நூறு ரூபாயைக் கொடுத்த கையோடு சற்று வருத்தத்தோடு கூறினான் ராஜாபாதர்.

''தொரை, என்னை பீப்...பீப்...பீப்ள்ஸ் பார்க்குக்கு டிரான்ஸ்பர் பண்ணிட்டாங்க''

''அடடா....'' என்றான் குமாரசாமி.

''பரவால்லே... வா, ஜம்முன்னு டிபன் பப்.. பப்... பண்ணுவோம்.''

ஒன்பதரை ரூபாய்க்கு சிற்றுண்டி சாப்பிட்டதற்கான பில்லை ராஜாபாதர் தொடவில்லை. அவன் சற்று முன் ஐந்து வட்டிக்குக் கடன் கொடுத்த பத்து ரூபாய்த் தாள்கள் குமாரசாமியின் பையில் இருந்தன. அதிலிருந்து ஒன்றை எடுத்து சிகரெட்டும் வாங்கினான்.

நடைபாதையில் யோசனையோடு நடந்த ராஜாபாதர் மெதுவாகவும் கனிவாகவும் சொன்னான்.

''அசலை நீ மெதுவாக் கொடு. ஒண்ணும் அவசரமில்லே.'' சொல்லிவிட்டுத் தயங்கினான். பிறகு தைரியத்தோடு கூறினான்.

''அதிலேருந்து ஒரு பத்து ரூவா கைமாத்தாக் குடு... க...க...கையிலே செலவுக்கு ஒண்ணுமே இல்லே....''

குமாரசாமி நிமிர்ந்தான். திடீரெனத் தெம்புஏற்பட்டாற்போலிருந்தது அவனுக்கு. சட்டெனப் போலீசுக்காரனுக்கு விலங்கு மாட்டின கைதி போல யிருந்தது. ராஜாபாதரின் காலரை இறுகப் பற்றியிருப்பது மாதிரி இருந்தது.

''நாளைக்குத் தரட்டுமா?'' என்றான்.

''ஐய்யய்யோ, நாளைக்கு நா பீப்...பீப்..''

''சரி, இந்தா.''

இப்போது ஏனோ ராஜாபாதரின் மிடுக்கு கருகி இறங்கி இருப்பதாகக் குமாரசாமிக்குத் தோன்றியது. அவன் அதை நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

---

அண்டை மாநிலமான கர்நாடகாவிலிருந்துஏதாவது பொருளை லாரியில் குமரி மாவட்டம் கொண்டு வந்தால் சந்திக்க வேண்டிய செக் போஸ்ட்கள்:

| | |
|---|---|
| விற்பனை வரி செக்போஸ்ட்கள் | 18 |
| வன இலாகா செக் போஸ்ட்கள் | 5 |
| தேங்காய், முந்திரி செ.போ. | 2 |

இவ்வளவு அதிகமாக செக் போஸ்டுகள் உள்ளதால் விரயம் ஆகும் நேரம் சுமார் 5 மணி! இதைக் குறைக்கக் கூடாதா?

-கருங்கல் ஆர். ஜார்ஜ்



# ஆண்மை

'சுபா'



மலைக் கோட்டையில் அக்கடாவென்று உட்கார்ந்திருக்கிற உச்சிப் பிள்ளையாரின் தலையில் விபீஷணன் குட்டின குட்டு வடுவாய் மாறியிருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்துவிட்டு இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் பன்மை விகுதியில் ரகுராமன் ஒரு மூலையில் ஒதுங்கிப் போயிருந்தான். கூட, இருபது வயது மீனாட்சி கண்ணில் மையுடனும், காதில் ஜிமிக்கியுடனும் காலில் கொலுசுடனும், ஊரையே திரும்பிப் பார்க்கச் சொல்கிற அநாவசியச் சிரிப்புடனும் அந்தக் குட்டி ஊர்வலத்தின் முன்னணியில் இருந்தாள். அவளுக்குப் பேச்சுத் துணைக்குத் தங்கை காமாட்சி — இன்னும் அப்பா இரண்டு நாள் முன்பு திருப்பதியில் காணிக்கை கொடுத்து மொட்டைத் தலையுடன். பின்னும் அம்மா, மேற்சொன்ன ஊர்வலத்துக்குக் கடைசி வரிசையாய். தெப்பக்குளம் வந்தது. மீனாட்சி சட்டென்று நின்றாள்.

''என்ன?'' என்றான் ரகுராமன்.

''பூ வாங்கிக்கட்டா?''

''ம்...''

பூ விற்றுக் கொண்டிருந்தவளை நெருங்கினாள்.

''இருவாட்சி என்ன விலேம்மா ''

''நூறு பூ காருவா...''

''முந்நூறு கொடு.''

வாங்கினாள். எண்ணிப் பார்த்தாள்.

''என்னம்மாஏமாத்தப் பாக்கறே... முந்நூறு பூன்னு சொன்னே... இருநூறுதான் இருக்குது....'' குரல் பிளிறிற்று.

''கெடக்கு விடு'' என்றான் ரகுராமன் இடையில் புகுந்து. ''அவளண்டை சண்டைக்கு நின்னு நம்ம கௌரவம்தான் போகும்...'' என்று தன்னாத குறையாய் அவளை நகர்த்தினான்.

வரிசையாய்க் கடைகள். இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்ப் பாட்டில்கள், சோப்புகள், சென்ட் ஜாடிகள், பிளேடுகள் என்று சுற்றிப் பரப்பிக் கொண்டு நடுவில் கடைக்காரர்கள். இரண்டு கைகளிலும் துணியைத் தளர்வாய்ப் பிடித்து பின் பட்டென்று இழுத்து அடித்து அறுபடாமல் இருப்பதைக் காட்டி குரல்வளை நோகக் கத்திக் கொண்டிருந்தார்கள்.

''சும்மா கதைக்க வேண்டாம்... ஒண்டு கொடுத்தா அந்த ரெய்ட்டுக்குக் கட்டுப்படியாகிறதில்லை... ரெண்டு பீஸ் அப்படியே எடுக்கட்டும்...சகாயமாய்ப்போட்டுத்தரும்'' என்று வியந்து நிற்பவர்களிடம் மாறி மாறிப் புலம்பினார்கள்.

கூட்டத்தைப் பார்த்து மீனாட்சி நின்றாள்.

''அங்கே என்ன வேடிக்கை? வந்திட்டே மீரு...நீ என்ன புடவை வாங்கப் போறியா? சட்டை டிராயர் வாங்கப் போறியா?'' என்று ரகுராமன் மெலிதாய் அதட்டினான். மெயின் காடு கேட்டிற்கு இன்னும் இருநூறு அடியாவது நடக்க வேண்டும் போலிருந்தது.

சாலையோரத்தில் இருவர் மூவராக ஆண் பிள்ளைகள் கை கோத்தும் கோக்காமலும் வழி விடாமல் நின்று கொண்டிருக்க, ரகுராமன் அவர்களுக்கிடையில் புகுந்து 'எக்ஸ்க்யூஸ் மீ' என்று சொல்லிவிட்டு நாசூக்காய்த் தாண்டிச் சென்றான்.

வழி விட்ட மூவரும் நின்று திரும்பிப் பார்த்தார்கள். கண்களில் பாதரசம் மின்னிற்று.

''அத பார்ரா வனிதா'' என்றான்.

''அவ்வளவு அழகா இருக்குன்னு சொல்றே?''

''ரெண்டுமிருக்கே ''

''குள்ளம், அழகு ரெண்டும்...''

மீனாட்சி சட்டென்று வாயை மூடிக்கொண்டாள். காமாட்சியைச் சற்று இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டு கொஞ்சம் குனிந்த தலையுடனும், கொஞ்சம் பாதையில் கண்ணுமாய் நடக்க, அப்பாவும், அம்மாவும் பின்தங்கிப் போனார்கள்.


ரகுராமன் கொஞ்சம் கோபமாய் உணர்ந்தான். இவர்களுக்கெல்லாம் அக்காவோ, தங்கையோ கிடையாதோ என்று மரபுப்படி எண்ணமிட்டான். பின் சற்று அசிரத்தையாய் நடக்கத் தொடங்கினான். மீனாட்சி ஒட்டி நடந்தாள்.

''நடை கூட அதே மாதிரியில்லை... துள்ளித் துள்ளி....''

''அட ஆமாம்...''

மீனாட்சிக்குக் கால் சிக்கிற்று. ரகுராமனை நிமிர்ந்து பார்த்தாள். ரகுராமன் சட்டென்று திரும்பி அவர்களை முறைத்தான். அவர்கள் மூன்று பேரானதில் சற்றும் அதிராமல் இவனது முறைப்பை அலட்சியப்படுத்தி இடைவெளியைக் குறைத்தார்கள்.

''பாக்யராஜ் பார்த்தான்னு கப்புன்னு அமுக்கிடுவான் அடுத்த படத்துக்கு... சின்னதுக்குக்கூட பிரைட் ஃப்யூச்சர்...''



ரகுராமனுக்கு உடன் எகிறி அவர்களைப் பந்தாட வேண்டும் போல் துடிப்பாய் இருந்தது.

அவர்கள் மூன்று பேர் திடகாத்திரமாய் இருந்தார்கள். சட்டையைப் பாண்ட்டுக்குள் செருகி விட்டிருந்ததில் இடுப்புப் பெல்ட் பளபளப்பாய்த் தெரிந்தது. கைகள் கரணை கரணையாத் தொங்கிக் கொண்டிருந்தன. மார் அயராமல் நிமிர்ந்திருந்தது. ஒரே அடியில் ரகுராமன் சுருண்டு விழும் சாத்தியங்கள் இருந்தன. மறுமுறை அவர்களை முறைத்துப் பார்த்தபோது நேராய் இவன் கண்களுக்குள் அவர்கள் திரும்ப முறைத்தார்கள்.

''கண்ணைப் பாருடா...''

ரகுராமன் சட்டென்று குனிந்து தன்னை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டான். எலும்போடியக் கைகள் இடுப்புக்குக் கொஞ்சம் கீழே தெரிந்தன.

''வனிதாவுக்கு பிரதரா செக்ரட்டரியா?'' என்றான் நடுவிலிருந்தவன்.

பொங்கி வருகிற ஆத்திரத்தை வெளிக்காட்டச் சற்றுத் தயக்கமாய் இருந்தது. அவர்களின் ஆகிருதி ஏற்படுத்தின தயக்கம். சதை ஒட்டின இந்த எலும்புக் கூட்டை அவர்கள் ஒற்றை விரலில் பந்தாடினால் பஜார்

முழுக்கக் கெக்கலிக்கும் என்று தோன்றிற்று. பின்னால் தூரத்தில் அப்பாவும், அம்மாவும் வந்து கொண்டிருக்க, அந்த நேரத்தில் அவர்களைக் கோயில் மாடுகளாய் உணர்ந்தான்.

''மீனாட்சி கொஞ்சம் நில்லு....''

நின்றாள். அம்மாவும், அப்பாவும் அருகில் வரக் காத்திருந்தான். அந்த மூன்று பேரும் இவர்களை நெருக்கமாய்க் கடந்து போய்ப் பக்கத்துக் கடையில் சிகரெட் கொளுத்தினார்கள். கொஞ்சம் தயங்கித் திரும்பி முறைத்தார்கள். ஒருவன் மகா தைரியம் பெற்று விசிலூதி ஸன்னமான குரலில் 'நான் போறேன் முன்னால. நீ வாடி பின்னால நாயக்கர் தோட்டத்துக்கு' என்றான்.

''என்னடா நின்னுட்டே '' என்று அம்மா கேட்டுக் கொண்டே வந்து சேர்ந்துகொண்டாள்.

''ஆமா நீ திருவாரூர் தேர் மாதிரி அசைஞ்சு அசைஞ்சு வா'' என்று கத்தினான். அப்பாவும் வந்து இணைய மீண்டும் சின்ன ஊர்வலமாய் நகரத் தொடங்கினார்கள்.

''ஒரே தாகமாய் இருக்கு.. ஒரு காப்பி சாப்பிடலாமே'' என்றார் அப்பா.




பெற்றோர் தினம், ஆசிரியர் தினம் என்றெல்லாம் கேள்விப் பட்டிருக்கலாம். ஆனால் சென்னை சர்ச் பார்க் கான்வென்டில் முதன் முறையாக பாட்டன்-பாட்டி தினம் கொண்டாடப்பட்டது. அந்தப் பள்ளி மாணவிகளின் தாத்தா – பாட்டிமார்கள் அழைப்பு ஏற்று வந்தனர். பாட்டு நடனம், நாடகம் முதலியன முடிந்ததும் சிற்றுண்டி அளிக்கப்பட்டது. தேவைப்பட்டவர்களுக்கு சர்க்கரை இல்லாத காப்பி தயாராக இருந்தது. பிறகு பாட்டிகளுக்கு அழகிப் போட்டி வைக்கப்பட்டது. இவர்களில் ராணியாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தங்களை நினைவு வைத்துக் கொண்டதற்குத் தாத்தா பாட்டிகள் எல்லோரும் பள்ளி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தனர்.

ஆதாரம்: எக்ஸ்பிரஸ்

தகவல்: கலாமூர்த்தி

ரகுராமன் எதிர் சாரியிலிருந்த சுமாரான ஹோட்டலைப் பார்த்தான். கூட்டம்நெரிந்து கொண்டிருந்தது.

''அங்கே போலாமா?'' என்று கேட்டான்.

அம்மா 'ம்' என்றாள்.

சாலையைக் கடந்தார்கள். ரகுராமன் மாத்திரம் ரகசியமாய்த் திரும்பிப் பார்க்க அவர்கள் இல்லை. கொஞ்ச தூரத்தில் வேறொரு பெண்ணின் பின்னால் தளர்வாய் நடந்து கொண்டிருந்தார்கள். 'பாஸ்ட்ரல்' என்று மனத்துக்குள் இரைந்து திட்டினான்.

ஹோட்டலுக்குள் நுழைந்து கூட்டத்துக் கிடையில் ஒரு டேபிளையும் பிடித்து விட்டார்கள். அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்த சர்வர்களை வார்த்தைச் சவுக்கடியால் மேலும் விரட்டிக் கொண்டிருந்தார் முதலாளி. கூட்டத்தில்தானே அவருக்கு வியாபாரம்.

வியர்வை வழிய வந்து நின்ற சர்வரைப் பார்த்து'' அஞ்சு காபி'' என்றான். மிடுக்காகப் பக்கத்து டேபிள், அதற்கடுத்த டேபிள் என்று விசாரித்துக் கொண்டு கூட்டத்துக்குள் நுழைந்து மறைந்தான் சர்வர்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. 'என்ன பண்றான் இவன், உள்ளே போய்த்தூங்கறானா' என்று முணு முணுத்தான் ரகுராமன். கால் மணி நேரத்துக்கப்புறம் இரண்டு கைகளிலும் டிரேயில் பலவித டிபன்கள் பல போனில் உட்கார்ந்து கொண்டிருக்க, லாகவமாக யாரும் இடித்து விடாதபடி வந்து சேர்ந்தான் சர்வர்.

முதலில் மற்ற டேபிள்களில் டிபன்களை வைத்துவிட்டு, இவர்கள் டேபிளில் ஐந்து காப்பியையும் 'டக்டக்'கென்று வைக்கும் போதுதான் அது நடந்தது.

ரகுராமனைத் தாண்டி அமர்ந்திருந்த மீனாட்சிக்கு எதிரே காப்பியை வைக்க சர்வர் முற்படவும், ரகுராமன் டபராவை இழுக்கக் கையை இழுக்கவும் 'தடக்'கென்று டம்ளரோடு காப்பி கவிழ்ந்து–

அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் குபீரென்று பாய எழுந்தான் ரகுராமன்.

''என்னடா நினைச்சுக்கிட்டு இருக்கே ராஸ்கல்? நானும் அப்போலேந்து பார்க்கறேன். ஒரு காப்பி கொண்டுவர நாலு மணி நேரம். வந்தவனும் உடனே கொடுக்காம கடைசியா கொடுக்கிறே. இழுர் பிடிச்சுப் போய் மேலேயும் கொட்டி....''

ஹோட்டலில் இருந்த அத்தனை தலைகளும் திரும்பிப் பார்த்தன.

''சார், சார்... தெரியாம...'' முதலாளிக்கு இவன் குரல் கேட்டு விடப் போகிறதே என்ற பயத்தில் சர்வர் கெஞ்சியும் முதலாளிக்குக் கேட்டு விட்டது. ஓடி வந்தவர் சர்வரின் பிடரியைப் பிடித்து உலுக்கி ஓங்கி அறைந்தார்.

''கஸ்டமருங்க கிட்ட நடந்துக்கற லட்சணமா இது. அடி செருப்பால. உள்ளே போடா உன்னைக் கவனிச்சுக்கிறேன். சார்... நீங்க வாங்க. சட்டையை வாஷ் பண்ணிக்குங்க. ரொம்ப ஸாரி ஸார்...யார்டா அது.. ஸாருக்கு வேற காப்பி கொண்டு வா...''

ரகுராமனுக்குத் திருப்தியாக இருந்தது!

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு

# லலிதா பார்மஸி

ஸ்தாபிதம் : 1942

தலைமை ஆபீஸ் : கும்பகோணம்–612 001 (தமிழ்நாடு) (போன் : 123)

டிரக் லைசென்ஸ் நீர். 40/31-8-78

சட்டுத் தொகைக்கு மத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

**உங்களுக்குத் தேவையான ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்**

எமது விசேஷ தயாரிப்புகள் :

**மிகச் சிறந்த டானிக்**

1. யௌவநீ
2. பூர்ண சந்த்ரோதயம்
3. பனஜா
4. அச்வகந்தி தைலம்

எமது பிராஞ்சுகள் :


1. லலிதா பார்மஸி, 52-A, மஹாதானத் தெரு, மாயூரம்-609 001 போன் : 379
2. லலிதா பார்மஸி, 81, வடக்கு வீதி, சிதம்பரம்-608 001
3. லலிதா பார்மஸி, 39, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-600 017 போன் : 441454
4. லலிதா பார்மஸி, 105, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004 போன் : 73007

உங்கள் உபாதைகளுக்கு டாக்டர் V.R.L. சர்மா அவர்களிடம் நேரிலோ அல்லது பதிலுக்கு (50Np தபால் தலை அனுப்பி) கடிதம் மூலமோ தலைமை ஆபீசுடன் தொடர்பு கொள்ளவும். கடிதங்களை தமிழில் அல்லது இங்லீஷில் Type செய்தோ அல்லது மிகத் தெளிவாகவோ எழுதக் கோருகிறோம். கடிதங்களிலும் முக்கியமாய் கார்டிலும் ரொம்பவும் நுணுக்கமாய் எழுத வேண்டாம் எனக் கூறுகிறோம். "தெளிவில்லாமலும், பதிலுக்கு 50Np ஸ்டாம்ப் அனுப்பாமலும் வரும் கடிதங்களுக்கு பதில் எழுதப்பட மாட்டாது".



# சென்னை-பம்பாய்-பழனியில் சிகிச்சை

பெறுங்கள். உலக புகழ் பெற்ற பழனி சித்த வைத்தியபதி



**Dr. S. காளிமுத்து,** R.M.P. (IND) V.V.C., A.M.I.H., R.A.M.P., R.H.M.P.,

அவர்களின் சுற்றுப்பயணத்தில் அல்லது பழனியில் நேரில் சந்தித்து ஆலோசனை பெற்று இதுவரை கஷ்டத்துடன் அனுபவித்த வியாதிகள் நீங்கி சுகவாழ்வு பெறலாம்! உங்கள் பிரச்சினையான—தாம்பத்திய வாழ்வில் மாறுபாடு—ஆண்மை குறைவு சோர்வு—அணுக்கள் குறை—வீரியமின்மை-குடும்ப உறவில் முன்மாதிரி செயல்படுத்த முடியாமை நரம்பு துவளல்-தேக உறுப்புகள் மெலிவு-கெட்ட கனவுகள்-தூக்கம் இல்லாமை-குழந்தை செல்வம் இல்லாமை-வெட்கம்-நடுக்கம்-தோல்வி-ஆஸ்துமா இருமல்-வாதநோய்—சருமநோய் — குடல்புண்—வயிற்று கோளாறுகள்—நவமூல வியாதிகள் மற்றும் இதர வியாதிகளும் 85 வருட அனுபவ மருந்துகள் பெற்று சுக வாழ்வும் - மறுமலர்ச்சியும் பெறலாம்.

---

சென்னை விஜயம் : *தேதிகள் 10-11 & 17-18-19*

**நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல்,** எட்வேர்ட்ஸ் எலியட்ஸ் ரோடு, சென்னை-4 போன்: 83111

---

பம்பாய் செம்பூர் விஜயம் : *தேதி 20*

**பிரகாஷ் லாட்ஜ்,** ரயிலடி சமீபம், செம்பூர், பம்பாய்-19 போன் : 521049

---

பழனியில் : 23ந் தேதி முதல் 31ந் தேதி வரை தலைமை ஆபீஸ்—

**பழனி சித்தர் வைத்தியசாலை,** (Regd) பழைய தாராபுரம் ரோடு, பழனி-1

போன் : 316 — 316 வீடு : 420 தந்தி : 'சித்தர்'

---

சென்னை — பம்பாய் — பழனி ஆலோசனை நேரம் : காலை 10 to 12 மணி மாலை 3 to 5 மணி வரை மேலும் நேரில் ஆலோசனை பெற: 13-ந் தேதி: சேலம்-லக்ஷ்மி ராஜ்பவன், மாலை 2 to 4 மணி, 15-ந் தேதி: ஈரோடு-நவபவனம், காலை 10 to 12 மணி, திருப்பூர்-ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜ் பகல் 2 to 3½ மணி, பொள்ளாச்சி-கோபால் பில்டிங், மாலை 5 to 6 மணி, 16-ந் தேதி: கோவை விஜயா லாட்ஜ், காலை 10 to 12 மணி 24-ந்தேதி: மதுரை-சந்தானம் லாட்ஜ், காலை 10 to 12 மணி.

---

எமது மருந்துகள் கிடைக்குமிடம் : **கவிதா எண்டர்பிரைசஸ்,**

26, வாலர்ஸ் ரோடு, (மவுண்ட்ரோடு, பி.ஆர். & ஸன்ஸ் அருகில்) சென்னை-2

# தெய்வாம்சம்

பொன்னித்துறைவன்

**போட்டிக் கதை: 10**



ரிஸப்ஷன் கவுண்டரில் அதிர்ச்சி காத்திருந்தது. இவள் எப்படி இங்கு வந்தாள்?

என்னைப் பார்த்ததும் இனிதே முகமன் கூறி இமைகள் படபடக்க எழுந்து நின்றாள். வெயிட்டரைக் கூப்பிட்டுச் சாவியை அவனிடம் கொடுத்து லிஃப்ட் வரையில் அவள் கூடவே வந்தாள். முகத்தை நிமிர்ந்து பார்க்காமலேயே, ''முதல்லே அடையாளமே புரியலே. இரண்டு மூணு சுத்து பருத்திருக்காப்ல இருக்கு'' என்று ஒரு அபிப்பிராயம் தெரிவித்தாள். ''ரெண்டு மூணு இல்லே, நாலஞ்சு இருக்கும்'' என்று அவளைத் திருத்திச் சிரித்தேன். ''பதினைஞ்சு வருஷம் ஆகப் போறது இல்லியா, பார்த்து?'' என்றாள். ''இட்டத்தட்ட'' என்றேன். கூடவே, சௌக்கியமெல்லாம் எப்படி?'' என்று கேட்டேன். ''சந்தோஷமா இருக்கேன்'' என்றாள். ''இன்னும் 'இருக்கேன்'தானா, 'இருக்கோம்'னு சொல்லுவேன்னு நெனச்சேன்.''

அவள் புரிந்து கொண்டாள். பதில் சொல்லாமல் சிரித்தாள். பிறகு எதிர்க் கணை தொடுத்தாள்.

''உங்க சமாசாரமெல்லாம் எப்படி? பிரதிக்ஞை எல்லாம் உடையாமப் பத்திரமா இருக்கா, இல்லே, சபலப்பட்டு உடைச்சுட்டேளா?''

''உங்கிட்டச் சொல்லாம உடைக்க மாட்டேன்னுதான் வாக்குக் கொடுத்திருக்கேனே, மறந்துட்டியா?''

லிஃப்ட் வந்தது. செமினார் விஷயங்களைப் பற்றி விவரம் கொடுத்தாள். பத்தரைக்குத் துவக்க உரை. பதினொன்றுக்கு டிஸ்கஷன். மதியமும் டிஸ்கஷன். மாலை யோகா டெமான்ஸ்ட்ரேஷன். இத்யாதி....

'ஸீஜூ, ஸீஜூ' என்ற சம்பிரதாய ஒலிகளை யடுத்து லிப்ட் உயர்ந்தது.

அறையில் ஏ. ஸி. மணக்கிறது. மந்தர ஸ்தாயியில் இதமான ரீங்காரம் அதன் சௌக்கியமான தேக ஸ்திதியைப் பறைசாற்றுகிறது.

---

முல்லாவுக்கு அவசரப் பண முடை. நண்பரிடம் கூறினார்: நகையை அடகு வைத்தால் பணம் தருகிறார்களாம். ஆனால் கவலையாக இருக்கிறது.

நண்பர்: அதற்கு எதற்குக் கவலை?

முல்லா: நகைக்கு எங்கே போவது என்கிற கவலைதான்.

—மஞ்சுதேவன்

---



டேப் ரிகார்டர் கண்ணில் படுகிறது. கூடவே ஒரு குறிப்பு: 'இதைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.'

பட்டனை அழுத்துகிறேன். சல நாட்டையில் ''ஏதய்யா கதி?'' என்று ஆரம்பிக்கும் போதே சொடுக்குப் போட்டு இழுத்தாற் போல் நிமிர்கிறேன். அவள்தான். குரல் அமிர்த வர்ஷம். பதினைந்து வருடங்களுக்கு முன்பு இருந்ததை விடப் பல மடங்கு மெருகு ஏறியிருக்கிறது. அந்தக் குழைவும் குளுமையும், பாவமும் கமகமும் — சே!

'ஏ பெண்ணே! ஹோட்டல் ரிஸப்ஷனில் பல்லை இளித்துக் கொண்டு நிற்க வேண்டிய சாதாரண ஜன்மமா நீ? எந்த வேலைக்கு யார்என்றறியாயமே கிடையாதா?'

மனம் சஞ்சலப் படுகிறது. டேப்பை நிறுத்துகிறேன். படுக்கையில் சாய்ந்து இமைகளை மூடுகையில் அவளது இனிய முகம் தெரிகிறது.

இருபத்திரண்டில் எனது காரியதரிசியாகச் சேரும்பொழுது, 'பொழுது போக்கு — கர்நாடக சங்கீதம்' என்று அப்ளிகேஷனில் சொல்லி யிருந்தாள். இண்டர்வியூவில்—

கேள்வி: சங்கீதம் பற்றி ரெண்டுவார்த்தை சொல்லேன்.


பதில்: தியாகராஜர் காலத்து முத்திரை போட்ட கல்யாண பாஸ்போர்ட். அது இப்பொழுது செல்லுபடியாகாதுன்னு அம்மாவுக்குத் தெரிய மாட்டேங்கறது. பெண் பார்க்க வந்தா பாடத் தெரியணுமேன்னு தான் சொல்லி வச்சா. ஆனா நான் கொஞ்சம் ஆழமாய்ப் போயிட்டேன். பெண் பார்க்கவும் யாரும் வரலே. அம்மாவுக்கு நான் வேலை பார்க்கிறதுலே இஷ்டமில்லை. எவன் கையிலாவது ஒப்படைச்சுடணும்னு நினைக்கிறா.''

கேள்வி: செய்ய வேண்டியதுதானே?''

பதில்: செஞ்சுடலாம். ஒரு இருபதாயிரம் ரூபா கொடுங்கோ. மூணு வருஷம் கழிச்சு என் தங்கைக்கும் செஞ்சு வையுங்கோ. ரொம்பப் புண்ணியம்னு சொல்லுவா.''

கேள்வி: ''ஓஹோ! சம்பாதிச்சுப் பணம் சேர்த்துண்டுதான் கல்யாணம் பண்ணிக்கப் போறியா?''

பதில்: ''அவ்வளவு பணம் சேர்க்கறதுக்கு ஒரு ஜன்மம் போறுதே! கம்மா எவ




''ஜனதாசேம் வாழ்வில் அழகு சேர்க்கிறது.
அதற்காக இப்படியா?''
EP-J-104-81-Tam
ஜனதாசேம்
குறைந்த அளவு நிறைந்த பரப்பிற்கு
பிரத்யேக விற்பனைப் பிரதிநிதிகள் :
சென்னை நகரம் : M/s ஜோதி பெயிண்ட்ஸ்,
புரசைவாக்கம் போன்: 664131

ஞுவது இளிச்சவாயன் கெடைக்கறவரையில் சம்பாதிக்கலாமேன்னுதான்.''

நான் குபுக்கென்று சிரித்து விட்டேன்.

**போ**ன் ஒலிக்கிறது.

''பாட்டுக் கேட்டேளா?''

''அற்புதம். முழுக்க இன்னும் கேக்கலே. கேட்டவரைக்குமே ரொம்ப சுகம் போயேன்.''

''பூராக் கேளுங்கோ. சங்கீதம் ஒண்ணைத் தான் இப்போ நம்பி யிருக்கேன். ஆமா, நான் ரொம்ப மாறிட்டேன் தெரியுமோ? புரு மாதிரி ரொம்ப சாதுவாயிட்டேன். அதிகமாப் பேசறதே கிடையாது. தியானம் பண்றேன். பாடறேன். ஆமா, நீங்க ஏன் இவ்வளவு குண்டாயிட்டேள்?''

மாறினவளா இவள்? சிரித்துக் கொண்டேன்.

''இருக்கிற வியாதிகளுக்கெல்லாம் தகுந்தாப்ல விஸ்தாரமா உடம்பு வேண்டாமா?''

''வியாதியா?'' — குரலில் பதற்றம்.

''எஸ். சர்க்கரை, பிரஷர், வயிற்றுப் புண்!''

''பிடிவாதம்! வேறென்ன? காலா காலத்துல ஒரு கலியாணம் பண்ணிண்டிருந்தா?''

''அப்போ மட்டும் வியாதி வராதோ?''

''எஸ். வரும்.... வரலாம்.... ஏன், கல்யாணமே ஒரு வியாதிதானே?'' போட்டாள் ஒரு போடு.

''உனக்கு அந்த வியாதி வந்ததா இல்லியா? எப்ப வந்தது? எவ்வளவு உப வியாதிகள்?''

''உப வியாதிகள்னு?''

''குழந்தைகள்....'' — இருவருமே சேர்ந்தாற்போல் சிரிப்பு.

**''ஸா**ர், விஷயம் ரொம்ப அர்ஜண்ட். உங்களால் என்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியுமா?'' என்று பொசுக்கென்று ஒரு நாள் கேட்டாள். ரொம்ப சாதாரணமாக — ஏதோ கைமாற்றுகப் பத்து ரூபாய் கடன் கேட்பது போல் பொசுக்கென்று கேட்டு விட்டாள்.

''வெல் இதோ. என்னை விட்டுடு. கல்யாணம்கிறது ரொம்ப குழப்பமான, சிக்கலான விஷயம். நான் அதுக்குத் தயார் இல்லே. இதுவரையில் மனித ஜாதியிலே நடந்த எல்லாக் கல்யாணங்களுமே மகத்தான தோல்வி என்பது என் அபிப்பிராயம்!''

மௌனம். தீவிர சிந்தனை. கைவிரல் நகக் கடிப்பு. நிமிர்ந்து ஒரு வெற்றுப் பார்வை. பிறகு, ''நமக்குள்ளே பொதுவான சில அம்சங்கள் ஒத்துமையா இருக்காப்ல படறது. உதாரணமா, சங்கீதம்....'' என்றாள்.

''ஓ. அதைச் சொல்றயா? கல்யாணம் ஆனதுக்கப்பறம் அதுவே ஒரு இடைஞ்சலா யிருக்கலாம். கணவன் என்கிற கோணத்திலேந்து உலகமே வேறே திணுசாத்தான் தெரியும். நீ பாடவே கூடாதுன்னு சொன்னாலும் சொல்லுவேன். சங்கீதத்தை அப்படி முழுக்க முழுக்க நம்ப முடியாது இதோ. லாகிரி அம்சம் அதில அதிகம்.''

''ஐம்பது வயசுலே!''

''ஐம்பது வயசானாலும்...''

''அதுவரையில் நானும் இப்படியே இருக்கணும்....''

''ஓ! நோ, நோ... நீ வெயிட் பண்ண வேண்டாம். இப்போ ரெடின்னு சொல்லு. ஏற்பாடு பண்றேன்.''

'' பணத்தைக் கொட்டி...''

''வெல்—வேறே என்ன பண்றது? கொட்டத்தான் வேண்டியிருக்கு.''

''எல்லோராலேயும் கொட்ட முடியுமா?''

''முடியாது.''

''அவாளுக்கெல்லாம் வழி?''

''உலகத்துலே எப்படியோ கல்யாணங்களெல்லாம் நடந்துண்டுதானே இருக்கு?''

''எப்படியோ நடக்கறதுக்கும் நடக்க வேண்டியபடி நடக்கறதுக்கும் எவ்வளவு வித்தியாசம் தெரியுமா? நான் இப்ப என் கல்யாணத்துக்கு எப்படியோ பணம் சேர்த்தா எப்படி இருக்கும்? ஒரு வருஷம் போறும். பெரட்டிடலாம். கொஞ்சம் ஆண்டிபயாடிக் செலவாகும்...''

அவளது விழி வீச்சில் அனல் கொப்புளித்துச் சீறுகிறது. இது அழுகிற ஜாதியில்லே. எரிக்கிற ஜாதி. உலகம் பிரளயத்தில் முடியப் போவதில்லே. இதோ போன்றோரின் விழிகளிலிருந்து தெறிக்கும் பொறிகளில் கருகிச் சாம்பலாகப் போகிறது. அப்பா! அவளது கண்கள்! தட்சிணேஸ்வரத்தில் ராமகிருஷ்ணர் உபாசனை செய்த கண்கள்....

''இதோ, ப்ளீஸ்! ரிலாக்ஸ்....''

''உறவுக்கு உரம் பணம்தான்னு. விபச்சாரம்தான் உயர்ந்த கற்பு. எப்படியோ வாழறதுதான் மகத்தான தர்மம்.''

'எப்படியோ'வில் 'ஓ'வை அப்படியொரு நீட்டு நீட்டி, பல்லைக் கடித்து, தாளவென்று அவள் துப்பிய விதம் அடிவயிற்றை ஒரு கலக்குக் கலக்கியது.

**ப**கல் முழுவதும் லைமினார்டிஸ்கஷனில் போய் விட்டது. மாலை போன் செய்தேன். இடத்தில் இல்லை. இரவு சிரித்துக் கொண்டே வந்து ஒரு புதிரைப் போட்டாள்.

''நீங்களெல்லாம் ஆம்பிளையே இல்லை, தெரியுமோ?''

''ரொம்ப நல்லதாப் போச்சு. எப்படியோ?''

''சனாதன கோஸ்வாமின்னு ஒரு சன்யாசி. பக்த மீரா அவரைப் பார்க்கப் போனா. பொம்பிளைகளைப் பார்க்க முடியாதுன்னு சன்யாசி சொல்லிவிட்டார். மீரா கேட்டா: 'எனக்குத் தெரிஞ்சவரை பரமாத்மா ஒருத்தர்தான் ஆம்பிள்ளை. அவரை அண்டி நிக்கிற எல்லா ஜீவராசிகளும் பொம்பிள்ளைதான். இந்த சன்யாசி எப்படி ஆம்பிளையாக முடியும்?' அப்படீன்னாளாம் மீரா. எனக்கு மீரா மாதிரி வேதாந்தமா பேசத் தெரியாது. லௌகிகமாகவே சொல்றேன். முதுகெலும்புள்ள ஓர் ஆண்பிள்ளையை நான் இதுவரை பார்க்கலே.''

''இன்ஸல்ட்டிங்.''

''ஏன்? எதுக்காக? உங்களால அழகா ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்க முடிகுகிறதா? பயம்... இல் இல்லே. அன்னிக்கு சுத்தி வளைச்சு என்னவெல்லாமோ வியாக்யானம் பண்ணினேன். இப்போ பேசுங்களேன்? சர்க்கரையாம், பிளட் பிரஷராம்....''

''மீரா. உங்க அம்மா தங்கையெல்லாம் எப்படி இருக்கா?''

''ஹூம் பேச்சை மாத்துங்கோ! சொல்றேன்.... அம்மா போய் பத்து வருஷமாச்சு. என்னை நெனைச்சுப் பொலம்பிண்டே செத்தா. பெண்டாட்டியா ஓடிப்போன தங்கைக்கு இரண்டு வருஷத்திலே வேலைக்காரி பதவி கிடைச்சுது. என்னு அவ புருஷன் இன்னொருத்தியைப் பெண்டாட்டி பதவியிலே கொண்டு வச்சுட்டான். இப்போ அவ எங்கே இருக்காளோ தெரியாது. பெண் குழந்தை ஒண்ணு இருந்தது. அது தெரியும்.''

''உன் விஷயம் என்ன? கல்யாணம் ஆச்சா?''

''கல்யாணமாகலே. ஒருத்தரோட இருக்கேன்.''

''அப்படீன்னு?''

''அப்படீன்னு, அப்படித்தான். அது ஒரு உறவு. அதுல கல்யாணம் கெடயாது. செக்ஸ் கெடயாது. பிரஜா உற்பத்தி கெடையாது. அது இந்தச் சமூகத்துக்கு உட்பட்ட விஷயமில்லே. அங்கீகரிக்கப்படப் போவதுமில்லே. அதன் அங்கீகாரம் சம்பந்தப்பட்ட இருவரின் நல்லெண்ணத்திலேயே அடங்கியிருக்கு.''

''மீரா, எனக்கு ரொம்ப சந்தோஷம். ஆனா உன் குரல் நடுக்கத்தைப் பார்த்தா எனக்குப் பயமா இருக்கு. ஆத்திரத்திலே உன்னையே நீ பலி கொடுத்திண்ட மாதிரி இருக்கு. விரக்தியின் உச்ச கட்டத்திலிருந்து பேசற மாதிரி இருக்கு.''

''நாத்துக்கு நூறு உண்மைதான். ஆனா நான் பயந்து தற்கொலை பண்ணிக்கலேயே! என்னை விடுங்கோ. என்னை மாதிரி எத்தனை லட்சம் பேர் சைலண்டா கண்ணீர் உகுத்துண்டிருக்கா? அவாளைப் பத்தி யார் கவலைப் பட்றா? பணம் கொடுத்துத்தான் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் நடக்கணுமா? ஏதோ ஒரு விதத்திலே இந்தப் பச்சையான விபசாரத்துக்கு ஒவ்வொருத்தரும் அங்கீகாரம் கொடுத்துண்டு வரதுனாலதானே விடியவே மாட்டேங்கறது? எல்லாரையும் ஒட்டுமொத்தமாச் சுட்டுப் பொசுக்கினாக்கூட இந்தக் கேவலத்துக்குப் பரிகாரம் உண்டா? என்னால பொசுக்க முடியாது. ஆனா, நான் வலுவுலே ஏத்துண்டிருக்கிற உறவு மூலம் இன்னொரு மனித ஜென்மம் துளிர் விடாது. ஒரு வம்சா வழி சந்தோஷமா இங்கு முடிவடைகிறதுன்னு போர்டு போட்டுக்கலாம். பெண் கல்யாணத்துக்குப் பணம் சேர்க்க வேண்டாம். இப்படியே எல்லாம் பட்டுப் போகட்டுமே! பொசுக்கத்தான் முடியாது. பட்டு நாசமாப் போகட்டுமே!''

பேச்சு சுப்பென்று ஒரு கணம் நின்றது. அவள் உதிர்த்த வார்த்தைகளின் வீரியம், கசப்பு, வைராக்கியம் எல்லாம் சேர்ந்து அறைச் சூழலை கனத்துக் கனன்றது. தழுதழுக்கும் குரலில் மீண்டும் தொடர்ந்தாள்.


''ஒரு விதத்திலே மீராவும் நானும் ஒண்ணுதான். பரமாத்மாவைத் தவிர ஆம்பிள்ளையே கிடையாதுன்னு அவ ஆன்மீகமாகச் சொன்னா. நான் வேறே கோணத்துலேந்து அதையே சொல்றேன். அவ பகவானோட ஜோதில ஐக்கியமாயிட்டா. நான் தீயா எரிஞ்சேன். முத்தின கலியிலே பகவானை எங்கே தேடறது? தெய்வாம்சம் நெறஞ்ச ஒருத்தரைப் பிடிச்சேன். ஏழைக்கேத்த எள்ளுருண்டை! அவர் ராணுவ மேஜர். யுத்தத்துலே குண்டு வெடிச்சு முதுகெலும்பை என்னவோ பண்ணிடுத்து. உட்காரக்கூட முடியாது. என்னை விட அஞ்சு வயசு சின்னவர். வயசுலேயோ, உடம்புலேயோ என்ன இருக்கு? எல்லாம் மனசேதான். ரைட்டுதானே?''

நான் வாயிழந்து நின்றேன். அவளை நிமிர்ந்து பார்க்கக் கூடத் திராணியின்றி ஏதோ உளறினேன்:

''போறும் மீரா. உன் குழந்தை மனசுக்குத் தெய்வம் உன்னை இப்படியே விட்டுடாது. உன் சங்கீத விசேஷத்துலேயே அவருக்கு' உடம்பு குணமானாலும் ஆச்சரியப்படறதுக்கில்லே. சங்கீதத்தைக் கெட்டியா பிடிச்சுக்கோ. நிறையப் பாடு... பாடிக் காண்பி....

''ரியலி?'' என்று அவள் சிரித்தாள். சாதாரணமாக ஆரம்பித்த சிரிப்பு அட்டகாசமாக மாறி அறை முழுவதும் அதிர்ந்தது. விழியோரங்களில் ஈரக் கசிவு பளபளத்தது. ''ரியலி? ரியலி? ரியலி?'' என்று உரக்கக் கத்தினாள். பிறகு குரலைத் தாழ்த்தி, ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தம் திருத்தமாக உச்சரித்து—

''தெய்வாம்சம் நெறஞ்ச மனுஷர்னு சொன்னேனே புரியலியா? என் பாட்டு அவர் காதில் விழாது. அவர் டமாரச் செவிடு'' என்றாள்,





'மஹதாப்' என்ற இந்தி வார்த்தைக்கு ஒளி என்று பெயர். இந்த 'மஹதாப்'தான் காலப் போக்கில் தீபாவளிப் பண்டிகையின் போது கொளுத்தப்படும் மத்தாப்பு ஆகி விட்டது.

—எஸ். ஏ. முகமது யூசுப்

# கமலை 'டா' போட்டு அழைப்பவர்





**டைரக்டர் ஜி. என். ரங்கராஜன்:**

கோபிச்செட்டிப்பாளையம் டைமண்ட் ஜூபிலி ஹைஸ்கூலில் நான்காவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அந்த வயதில் எனக்குத் திராவிடர் கழகத்தில் தீவிர ஈடுபாடு. பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகளிலும், நாடகங்களிலும் ஆர்வத்துடன் கலந்து கொள்வேன். ஸ்போர்ட்ஸில் பரிசு வாங்கும்போது வேண்டுமென்றே கறுப்புச் சட்டையுடன் போவேன்.

அந்தச் சமயத்தில் திராவிடர் கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியது. எங்கள் பள்ளி ஹெட்மாஸ்டர் கே. எம். ராமசாமிக் கவுண்டர் கண்டிப்புக்குப் பெயர் போனவர். பள்ளி மாணவர்களில் அறுபது பேர்கள் (என்னையும் சேர்த்து) இந்திப் புத்தகத்தை எரிக்கப் போகும் விஷயமறிந்ததும் ''யாராவது இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டால் பள்ளியை விட்டே டிஸ்மிஸ்'' என்று சர்க்குலர் அனுப்பினார். ஐம்பத்தொன்பது மாணவர்கள் போராட்டத்திலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டனர். எஞ்சி நின்றது நான் ஒருவனே!

தலைமை ஆசிரியர் பள்ளிக்கு மாட்டு வண்டியில் வரும் சமயம் பார்த்து வேண்டுமென்றே இந்திப் புத்தகத்தைக் கொளுத்தினேன். அடுத்த நிமிடமே பள்ளியிலிருந்து டிஸ்மிஸ் செய்யப் பட்டேன்!

'இளம் கன்று பயமறியாது' என்று சொல்வது போல் பள்ளிப் பருவத்தில் தைரியமாக இருந்தேனே ஒழிய, பிற்பாடு அரசியல், நாத்திகக் கொள்கைகள் எல்லாம் விடைபெற்றன என்னிடமிருந்து.

எனது உறவினர்களில் பலர் விமானப் படையில் இருக்கிறார்கள். அரை குறைப்படிப்புடனிருந்த என்னையும் விமானப் படையில் போலீஸாகச் சேர்த்து விட உறவினர்கள் விரும்பியதால் பெங்களூருக்குச் சென்றேன். எனக்கு விளையாட்டில் தகுதி இருப்பதால் அந்த வேலை சுலபமாகக் கிடைத்துவிடும் என்று நினைத்தனர். முப்பதாம் தேதி ஐ. ஏ. எஃப்பில் எனக்கு இண்டர்வியூ. ஆனால் திடுதிப்பென்று முதல் நாளிரவே நான் கோபிக்குக் கம்பி நீட்டிவிட்டேன்.

கோபிச்செட்டிப் பாளையத்தில் என் வீட்டுக்கு நேர் எதிர்த்த வீடு ஜி. என். வேலுமணியினுடையது. அவர் தீவிர காங்கிரஸ்காரர். காமராஜ் பக்தர்.

தேர்தல் சமயத்தில் திராவிடர் கழகம் ஆதரிக்கும்சுயேச்சை வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்வேன். இரவில் வேலுமணி சார் வீட்டுக்குப் போய் வேலை கேட்பேன்.

வேலுமணி விவேகமுள்ளவர்.

தேர்தல் சமயத்தில் நான் ஊரிலிருந்தால் அவர் கட்சிக்கு இடைஞ்சல். அதனால் தந்திர

மாக டைரக்டர் பீம்சிங்கிடம் என்னைச் சிபாரிசு செய்து எடிட்டிங் அஸிஸ்டெண்டாக்கி விட்டார்!

பீம்சிங் அவர்களிடம் ஏழு வருட காலம் இருபத்திரண்டு படங்களுக்கு எடிட்டிங் வேலையில் உதவியாளனாக இருந்தது எனது திரையுலக வாழ்க்கையின் அஸ்திவாரமாக அமைந்தது.

'ஞாயிறும் திங்களும்' என்ற படத்தின் மூலம் நான் உதவி டைரக்டராக அறிமுகமாக வேண்டியவன். அந்தப் படமே பாதியில் நின்று விட்டது.

பட்டு, மற்றும் எஸ். பி. முத்துராமனுடன் உதவி டைரக்டராகப் பணிபுரிந்தேன். எஸ். பி. எம். கால்ஷீட்டிலிருந்து லொகேஷன் எல்லாவற்றிலும் எனது முயற்சிகளுக்கு முழு சுதந்திரம் கொடுத்திருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில்கூட அவர் யாரையும் திட்டியோ கோபித்தோ நான் பார்த்ததில்லை. அபூர்வமான மனிதர்.

எஸ். பி. முத்துராமன் யூனிட்டிலிருந்த போது ஒரு சமயம் கமல், ரஜினி, ஸ்ரீதேவியிடம் விளையாட்டாக அடுத்த வருஷத்துக்கு கால்ஷீட் வாங்கிவைத்தேன். அட்வான்ஸ் ஒரு நயா பைசாக்கூட யாருக்கும் கொடுக்கவில்லை! நாள் நெருங்கிக் கொண்டே வந்தது.

இரண்டு பிரபல நடிகர்களின் கால்ஷீட்டை வீணடிக்க விரும்பாமல் இரண்டு கிளாப் வைத்து ஒரே பூஜை போட்டோம்.

ரஜினியை வைத்து பஞ்சு அருணாசலம் 'ஆறிலிருந்து அறுபது வரை' படத்தைத் துவக்கினார். நான் கமல் ஸ்ரீதேவியை வைத்து கல்யாணராமனைத் துவக்கினேன்.

இது ஆவி பேசுவது போன்ற கதை. ஏற்கனவே இதே போல 'இது நிஜமா?' என்றொரு படத்தை எஸ். பாலசந்தர் எடுத்திருந்தார். ஆனது ஆகட்டும். வால்பாறையில் பதினேழு நாள் அவுட்டோருக்குப் போய்விட்டோம். அங்கோ பேய் மழை. ஒன்பது நாட்கள் ரூமில் அடைந்து கிடந்தோம். மீதி எட்டு நாட்களில் முடிந்ததைப் படமாக்கினோம். மிச்சத்தைக் குன்னூரில் எடுக்க மீண்டுமொரு முறை போனோம். அதற்கு கால்ஷீட் இல்லை. காலஞ்சென்ற டைரக்டர் டி. என். பாலு கமல், ஸ்ரீதேவி இருவரையும் தமது படப்பிடிப்பிலிருந்து இரண்டு நாட்கள் விடுவித்து என் படத்தில் நடிக்க உதவினார். 'கல்யாணராமன்' மூலம் நான் டைரக்டரானேன். வெள்ளி விழாப் படமாக அது அமைந்தது. தொடர்ந்து பல படங்களை இயக்கியிருக்கிறேன். எந்தப் படமும் வியாபார ரீதியில் தோல்வியில்லை.

பீம்சிங் படங்களில் பணியாற்றியபோது அவர் படத்துக்குப் படம் செண்டிமெண்ட்டாக 'பால் பாயசம்' சாப்பிடும் வசனத்தைச் சேர்ப்பார். அதே போல எனது படங்களில் நிச்சயம் யாராவது 'சிக்கன்' சாப்பிடுவார்கள்! என் ராசி இப்படி!

கமலஹாஸனை சிறு வயதிலிருந்தே எனக்குத் தெரியும். படிப்படியாகப் பாடுபட்டு வந்த பையன். அன்றும் இன்றும் நான் கமலை வாடா போடா போட்டுத்தான் பேசுவேன். ஞாபக மறதியாக நான் அவனுக்கு மரியாதை கொடுத்துப் பேசினாலும் அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். பம்பாயில் பம்பரமாகநடிக்கப் பல படங்களுக்கு கால்ஷீட் கொடுத்திருந்தும் அவன் ராணித் தேனியில் சிறப்புக் கௌரவ வேடமேற்றது எனது அதிர்ஷ்டமே. மூன்றே நாள் கால்ஷீட்டில் கமல் வெளுத்து வாங்கிவிட்டான்!

'கல்யாணராமன்' படப்பிடிப்பு சமயத்தில் கமல் காலை ஒடித்துக் கொண்டிருந்தான். அதையே கேரக்டராக்கி பாண்டேஜுடன் நடிக்க வைத்தேன். அடுத்து ஒரு கண்டம்.

ஸ்ரீதேவிக்கும் கால் எலும்பு முறிவு. பாவம் அந்தப் பெண் கால் வலியுடன் நடிச்சது. அதையும் கேரக்டராக்கிப் படத்தில் காட்டிவிட்டேன்!

'கடல் மீன்கள்' படப் பிடிப்புக்காக மங்களூரில் எண்பது மைல் தூரம் நடுக்கடலுக்குச் சென்று படமெடுத்தது மாறுபட்ட அனுபவம். நடிகை சுஜாதாவுக்கோ கடல் என்றால் பயம். என்னையும் கமலையும் தவிர யூனிட்டிலிருந்த அத்தனை பேருக்கும் ''கடல் வியாதி'' — ஒரே வாந்தி மயம்.

'மீண்டும் கோகிலா' படத்தை சென்ஸாருக்குப் போட்டுக் காட்டினோம். சென்ஸார் ஆபீஸர் படம் முடிந்ததும் 'ஏ' சர்ட்டிபிகேட்' என்றார். எனக்கு ஒரே அதிர்ச்சி. ''பயப்படாதீங்க. ஒரு அடி கூட கட் பண்ணாமல் 'யூ' சர்ட்டிபிகேட் கொடுக்கிறோம். படம் பிரமாதம்'' என்றார். அப்புறம்தான் விளையாடியிருக்கிறார் என்று புரிந்தது!

இளமையில் நாத்திக வாதம் பேசிய நான் இப்போ ஒவ்வொரு புதுப் படமும் முடிந்ததும் கருமாரியம்மன் கோவிலுக்குப் போய் வருகிறேன். அத்துடன் பச்சமலை பாலமுருகனுக்கு என் படத்தைக் காணிக்கையாக்குவேன். எல்லாம் அவன் அருள்!


பேட்டி: மன்னை சௌரிராஜன்

| | |
|---|---|
| மக்கள் குரல் | 200 |
| எதிரொலி | 1000 |
| அண்ணா | 300 |
| தினமணி | 200 |
| தினத்தந்தி | 600 |
| மாலை முரசு | 1000 |
| இந்து | 200 |

இதெல்லாம் என்ன?

16–10–82 அன்று சேத்துப்பட்டு ரயில் நிலையம் அருகே ஏற்பட்ட தீ விபத்தில் எரிந்துபோன குடிசைகளின் எண்ணிக்கை. இதில் எது சரியானது?

-வி. ச. கிருஷ்ணரத்னம்





# பரீட்சைக்கு நேரமாச்சு

## வினா - விடைத்தாள்

● கே: 'பரீட்சைக்கு நேரமாச்சு' கதையைச் சுருக்கமாகக் கூறுக:

மக்குப்பிள்ளை மீது பாசம் சொரியும் நரசிம்மாச்சாரி, பரீட்சைக்கு மகனைத் தயார் செய்தல். அவன் மரணம். மனைவியை ஏமாற்றி மகனைப்போலவே வேறொருவனை மகனாய் ஏற்பது: மனைவிக்கு உண்மை தெரிய வருவது. பரீட்சைக்கு அனுப்பும் போது இந்த மகனையும் விபத்தில் பறி கொடுப்பது.

கே: நரசிம்மாச்சாரி நடிப்பை விளக்குக:

ப: அதை எழுத்தில் வடித்து விளக்குவதென்பது இயலாத காரியம். பிள்ளைப் பாசத்திற்குக் கைகால் முளைக்கச் செய்து உயிர் கொடுத்துள்ளார் சிவாஜி என்றால் அது மிகையாகாது. பார்க்கப் பரவசமடையச் செய்யும் பாசம்.

கே: அசட்டுப் பிள்ளை வரதுக்குட்டி—பொருள் கூறுக:

ப: சுருக்கமாகச் சொன்னால் மகேந்திரனின் நடிப்பாற்றலுக்குச் சவால் விட்ட ஒரு கதாபாத்திரம் இது. முகத்தைத் தொங்கப்போட்டவாறே அசட்டுத்தனத்தை ஒழுக விட்டுக் கொண்டு நடித்து சவாலில் வெற்றி பெற்றுள்ளார். மகேந்திரனின் திரைப்பட வரலாற்றில் திருப்புமுனை.

கே: வாக்கியத்தில் அமை: சுஜாதா

ப: நரசிம்மாச்சாரியின் மனைவி. சாப்பிட வீட்டுக்கு வந்த விருந்தாளி மானேஜரிடம் அன்றைய 'மெனு'வை ஒப்பித்தவாறே 'அஹ்ஹ ஹஹ்ஹா' என இடை இடையே சிரிக்கிறாரே சுஜாதா. அந்த ஒரு இடமே போதும். அசல் அய்யங்கார் மாமி.

கே: ஒரு வரியில் பதில் சொல்: பூர்ணிமா ஜெயராமன் எப்படி?

ப: அழகாக வந்து அமைதியாகத் தோன்றி நடித்துள்ளார்.

கே: கோடிட்ட இடத்தை நிரப்புக:

ப: குள்ள நடிகர் சுப்புணியின் நடிப்பு <u>நாடகபாணி</u>. சில்க் ஸ்மிதாவின் ஆட்டத்தை விடக் கவர்ச்சியானது <u>வாலி அமைத்த பாட்டு</u>. வெண்ணிற ஆடை மூர்த்தியின் தமாஷ் <u>ரசிக்கத் தக்கது</u>. மனோரமாவுக்கு மற்றொரு பெயர் <u>நான்ஸ்டாப் மாமி.</u>

கே: சேர்த்து எழுதுக: சிவாஜி கணேசன் + வியட்நாம் வீடு சுந்தரம் =?

ப: உணர்ச்சி பூர்வமான வசனங்கள்.

கே: படம் பார்த்துக் கேள்விக்குப் பதில் கூறு: பரீட்சைக்கு நேரம் கழித்து வரலாமா?

ப: முக்தா சீனிவாசன் போல நிறைய மார்க் வாங்கும் திறமை உள்ளவர்கள் சற்று நேரம் கழித்து வந்தாலும் பரவாயில்லை. ஆனால் ரசிகர்கள் நேரத்தோடு போய்விட வேண்டும்!

-திரைஞானி



## ஆசியப் போட்டிகள் வளர்ந்த கதை

● முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆசியா கண்டத்துக் கெனத் தனியாக ஒரு ஒலிம் பிக் போட்டி இருக்க வேண் டும் என்ற எண்ணத்தை உண்டாக்கியவரே ஒரு இந் தியர்தான். பேராசிரியர் ஜி. டி. சோந்தியின் முயற்சியின் அடிப்படையில் இந்த ஆசியப் போட்டிகள் 1951ல் ஆரம் பிக்கப்பட்டது.

● இந்தியாவில் தோன்றிய எண்ணமாதலால் இந்தியாவி லேயே முதல் ஆசியப் போட்டி நடந்தது. தொடங்கி வைத்தவர் அப்போதைய பிர தமர் நேரு. முப்பதாண்டு களுக்குப் பின் அவருடைய மகள் பிரதமராக இருக்கும் போது, திருமதி காந்தியின் பிறந்த நாளான நவம்பர் 19ந் தேதி இந்த ஒன்பதா வது ஆசியப் போட்டி ஆரம் பமாகிறது.


● முதல் ஆசிய ஒலிம் பிக் பந்தயத்தில் ஐந்தே ஐந்து ஆட்டங்கள்தான் (கூடைப் பந்து, சைக்கிள், கால்பந்து, நீச்சல், ஆத லெடிக் (தடகளம்) நடை பெற்றன. 1982ம் ஆண்டு டெல்லியில் நடைபெறப் போகும் போட்டியில் 21 ஆட் டங்கள். முப்பதுக்கும் மேற் பட்ட நாடுகள் கலந்து கொள்ளப் போகின்றன.

## ஆசிய விளையாட்டின் சின்னம்

● எல்லோரும் 'அப்பு' யானைக்குத்தான் முக்கியத்து வம் தருகிறார்கள். உண்மை யில் ஆசியாட்-82ன் சின்னம் ஜந்தர்-மந்தர் கட்டிடத்தின் வரைபடமே. இந்தக் கட்டி டம் 16ம் நூற்றாண்டில் வான வியல் ஆராய்ச்சிக்காகக் கட் டப்பட்டது. சூரியனின் உய ரக் கோணத்தை அளக்கும் கருவியை (Azimuth) கட்டட மாகக் கட்டியுள்ளார் இதன் சிற்பி.

● அறிவு, நேர்மை, விடா முயற்சி ஆகியவற்றின் சின் னமாக இக்கட்டிடம் அமைந் துள்ளது.

● 'அப்பு'என்னும் குட்டி யானை ஆசியப் போட்டியின்



✖ இந்திரப்ரஸ்த ஸ்டேடியம்



✖ சுவாமி ஜகந்நாத்



✖ பியூலாமோசஸ்

✖ அறிவு நேர்மை, விடாமுயற்சி




⌘ தேசிய மகளிர் விளையாட்டு விழா தொடக்க தினத்தில் மகாராஷ்டிர அணி




⌘ முதல் ஆசிய விளையாட்டின் போது நேருஜியும் நிர்வாகிகளும்

அதிர்ஷ்டச் சின்னம். அதன் நெற்றியில் உள்ள செந்தூரப் பொட்டுதான் வெற்றித் திலகம். வாலறிவு (wisdom) வலிமை (Strength), விசுவாசம் (Loyalty) ஆகிய வற்றுக்காக யானை இந்திய நாட்டில் காலம் காலமாக இந்திய மக்களால் தொழப்பட்டு வருகிறது.

### விளையாட்டு அரங்கங்கள்

● நேரு விளையாட்டு அரங்கம் பிரதான அங்கம் வகிக்கிறது. உலகிலுள்ள இரண் டடுக்கு அரங்கங்களில்நான்காவது இடத்தை இது பெறுகிறது. கீழ்ப் பகுதியில் 18 ஆயிரம் பேரும், மேல் பகுதியில் 57 ஆயிரம் பேரு மாக, 75 ஆயிரம் பேர் ஒரே சமயத்தில்



⌘ டால்கடோரா நீச்சல் குளம்

அமர்ந்து விளையாட்டைக் காணும் அளவு மிகப் பெரியது.

● ஏற இறங்க எட்டு நகரும் படிகளும் (Escalators) வண்ணத் தொலைக் காட்சி எடுக்கும் அளவுக்குச் சுடர் விடும் ஒளிவெள்ள விளக்குகளும் (Flood lights) அமைக்கப்படும்.

● 100 ஏக்கர் பரப்பில், 17 கோடி ரூபாய் செலவில் உருவாகியுள்ள இவ்வரங்கத்தில் உடனுக்குடன் போட்டி முடிவுகளை அறிய கம்ப்யூட்டர் வசதி கொண்ட ஸ்கோர் போர்டும் உள்ளது.

● இந்த ஸ்கோர் போர்டு 9 மீட்டர் உயரம், 23 மீட்டர் நீளம் கொண்டது. ஆங்கிலத்திலும், இந்தியிலும் அறிவிக்கும்.

● தலைமைச் செய்தியாளர் மையம், இந்திய வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு, கம்ப்யூட்டர், கம்பியில்லாத் தந்தி, தொலைபேசி ஆகியவற்றின் வழியாகச் செய்திகளைத் தந்துகொண்டே இருக்கும்.

● நேரு அரங்கம் தவிர, புதிதாக உருவாக்கப்பட்ட ஐந்து விளையாட்டு அரங்குகள் புதுப்பிக்கப்பட்ட பதினொன்று ஆக பதினேழு அரங்குகளில் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. பம்பாயிலும் புனாவிலும் படகோட்டுதல் போட்டிகள் நடைபெறும்.

● ஜெ. கே. போஸ் கிரிக்கெட் போட்டி அண்மையில் டில்லியில் நடைபெற்றது. அப்போது வந்த செய்தியாளர்கள் இந்த அரங்குகளைப் பார்வையிட்டு ஆறு ஆண்டுகளில் நடைபெற்றிருக்க வேண்டிய கட்டுமானப்பணி இது. இவ்வளவு குறுகிய காலத்தில் செய்தது ஆச்சரியம் என்றார்களாம்.

● இதற்கு முன் நடந்த எட்டு ஆசியப் போட்டிகளின் முடிவுகளும் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. ஒப்பு நோக்க விரும்புபவர்களின் ஆர்வத்துக்காக.

## தமிழக பெண்ணிற்குச் சிறப்பு

● சுமார் 3000 விளையாட்டு நுட்ப அறுவலர்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து போட்டிகளை நடத்துவதற்கென அழைக்கப்பட்டுள்ளனர். இவற்றுள் ஏழு மகளிர் போட்டிகளுக்கு நடுவராக, தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்றத்தின் பொதுச் செயலாளர் ஸ்ரீமதி பியூலா மோசஸ் அமர்த்தப்பட்டுள்ளார்.

● இதுவரை பெண் நடுவர்கள் ஆசியப் போட்டிக்காக அமர்த்தப்பட்டதே இல்லை. இவர்தான் முதல் பெண் நடுவர். அவரும் நம் தமிழ் நாட்டுப் பெண் என்றால்பெருமையில்லையா?

## உணவு வசதி

● ஆசியப் போட்டிக் கிராமத்தில் பெரிய அளவில் நான்கு உணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில்ஒரேசமயத்தில் 2,000 பேர் உட்கார்ந்து சாப்பிடலாம்.

● 7000 சமையற்காரர்கள். 48 லட்சம் ரூபாய்க்குச் சமையல் பாத்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. முள் கரண்டி, பீங்கான் தட்டுக்கள் முதலியவற்றை விமானப் போக்குவரத்துக் கழகம் கடனாகத் தருகிறதாம்.

● பதினேழு அரங்குகளிலும் சிறு சிறு ஸ்டால்களும், 'பங்கு'க் கடைகளும் உண்டு.

## மற்ற வசதிகள்

● 300 தொலைபேசிகள் புதிதாகப் பொருத்தப்படுகின்றன. மூன்று தேசிய, மூன்று இன்டர் நேஷனல் தந்தி அலுவலகங்கள் அமைக்கப்படுகின்றன.

● நவம்பர் 19ந் தேதி முதல் டிசம்பர் 4ந் தேதி முடிய நடைபெறப் போகும் இவ்விளையாட்டுக்களைத் தினமும் ஒன்பது மணி நேரம் டீ.வி.யில் பார்க்கலாம். கலர் டீ. வி. வைத்திருப்பவர்கள் கலரிலேயே பார்க்கலாம்.

● காலை 10 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை; பிற்பகல் 2 முதல் இரவு 8 மணி வரை.

● 29ந் தேதி ஓய்வு நாள்.

## டிசம்பர் 19ந்தேதி...

பிரதமர் பிறந்த நாளான 19ந் தேதியன்று நேரு விளையாட்டு அரங்கில் ஆசியாட்-82 ஆரம்பமாகிறது.

● யானை குதிரைப் படைகள் குடியரசு நாள் கொண்டாட்டம் போல் அணிவகுத்து வரும். சர்க்கஸ் வித்தைகள் பலவும் நடைபெறும். மோட்டார் சைக்கிள்களின் அணிவகுப்பும், பாண்டு வாத்தியங்களின் முழக்கமும் இருக்கும்.

● இந்த அணிவகுப்பு கால் பந்தாட்ட மைதானத்தின் நடுவில் வந்து பலவித வித்தைகள் காட்டும். நிறைவு விழாவும் நேரு விளையாட்டு அரங்கத்திலேயே.

**மாதிரிக்குச் சில போட்டிகளை 'நாடி' பிடித்துப் பார்ப்போம்!**

---

**"என்ன... பொண்ணைப் புடிச்சிருக்கா?.."**

**"கலர் டீ.வி. பார்க்க வந்த இடத்திலே ப்ளாக்கண்ட் ஒயிட் பாத்த மாதிரி இருக்குது!"**



**1. 5000 மீட்டர் ஓட்டம்**

| | |
|---|---|
| கோபால் சைனி | (இந்தியா) |
| கிட்டா | (ஜப்பான்) |
| இடோ | (ஜப்பான்) |

கிட்டாவுக்கும், கோபாலுக்கும் பலத்த போட்டி இருக்கும் என்கிறார்கள்.

**2. நீளந் தாண்டுதல்**

| | |
|---|---|
| லி யூ-ஹூவாஸ் | (8.11 மீ. சைனா) |
| டான் ஹாங் ஷை | (7.79 மீ. சைனா) |
| பாலசுப்பிரமணி | (தமிழ்நாடு) |

எட்டு மீட்டர் தாண்டி ரிகார்டை ஏற்படுத்திய பாலசுப்பிரமணி கொஞ்சம் முயன்றால் தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டு வரலாம்.

**3. 3000 மீட்டர் பெண்கள் ஓட்டப் பந்தயம்**

அகெமிமரூதா (ஜப்பான்) ஒரு புரட்சியை உண்டுபண்ணுவார்என்கிறார்கள். 3000 மீட்டர் என்றால் நம் பெண்களுக்குக் கொஞ்சம் கஷ்டம்தான்.

**4. பெண்கள் 800 மீட்டர், 1500 மீட்டர்**

| | |
|---|---|
| கீதா சுட்ஷி | (இந்தியா) |
| குவா குயீமெய் | (சைனா) |
| வாங் க்ஸியூ நுன் | (சைனா) |

இந்தப் போட்டியில் கீதாதான் தற்போதைய அரசி. நடைபெறப்போகும் போட்டியில்....?

**நீச்சல் போட்டி**

ஜனாதிபதி மாளிகையின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள தல்கதோரா நீச்சல் ஸ்டேடியத்தில்தான் நடைபெறப்போகிறது. நவம்பர் மாத டில்லி குளிர் தெரியாதபடி வெந்நீரும், 6000 பேர் பார்க்கக்கூடிய வசதியும் கொண்டது. எல்லாம் அழகுதான். நம் வீரர்கள்?

நீச்சல் போட்டியில் ஆசியா கொஞ்சம் பின்தங்கியே உள்ளது. சென்ற காமன் வெல்த் போட்டியில் ஆறுவது இடத்தைப் பெற்றவர்கள் செய்த சாதனையைக் கூட நம் வீரர்கள் செய்யவில்லை.

மூன்றாவது இடத்தை இந்தியா பெறலாம் என்கிறார்கள். அப்படிப் பெற்றால் சோமசேகரன், அனிதா சூட் போன்ற சிலர் வழியாகத்தான் வரும். நீச்சல் பந்துப் போட்டியில் நமது நம்பிக்கை நட்சத்திரம் தமிழ் நாட்டைச் சேர்ந்த ராம்கோபால் நாராயணன்.

**"குறைகளும் பூதாகாரம்தான்!"**

● 'கள்ள மார்க்கெட்டில் டிக்கெட் விற்கிறார்கள். நாடு இருக்கும் நிலையில் சுமார் 1000 கோடி ரூபாயை இப்படிச் செலவு பண்ணுவதா?' என்றெல்லாம் பல கட்சிக் காரர்களும், பல பத்திரிகைக்காரர்களும் பேசியது போக—

● இந்திரா காங்கிரஸ் எம். பி. ராமனந்த் யாதவ்வே ராஜ்ய சபையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது குறைகள் பலவற்றைக் கூறியிருக்கிறார். பூடாசிங் மற்றும் கமிட்டி அங்கத்தினர்கள் மீது முப்பத்தியாறு குற்றச்சாட்டுக்களை அடுக்கினார்.

● அரசாங்கப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஏஷியாட்டைச் சாக்காக வைத்துக்கொண்டு அயல் நாடு போய் வந்தவர்கள் பலர் என்கிறார் இவர். மூன்று அதிகாரிகள் கமிட்டி எந்த விதத் திட்டமும் இல்லாமல், எதையும் சாதிக்காமல் அயல் நாடு போய்த் திரும்பியிருக்கிறதாம்.

● அந்நியச் செலாவணி விஷயத்தில் மூன்று பெரிய ஹோட்டல்கள் அரசாங்கத்தை மோசம் செய்திருக்கிறதாம்.

**இந்தச் சிறுவன் முகத்திலே ஏன் இத்தனை மகிழ்ச்சி?**

கடைசிப் பக்கம் பார்க்க



● தல்கதோரா நீச்சல் குளம் இட்ட மிட்டபடி அல்லாமல் மேற் கூரை இல்லாமல் கட்டப்பட்டது. அதே போல டிக்கட்டுகளை விற்பதிலும் ஏராளமான மோசடி என்கிறார்.

● துபாய் நிறுவனம் ஒன்று, விளம்பர நிறுவனத்தின் மூலம் இந்தியாவுக்கு ஆகஸ்டிலேயே வந்து சேர்ந்திருக்க வேண்டிய ஒரு மில்லியன் டாலரை இன்னும் தரவில்லையாம். அதற்கான எந்தவித நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லையாம்.

● பாரதீய ஜனதா கட்சி எம்.பி. ஜகதீஷ் பிரசாத் பேசும்போது துபாய் நிறுவனம்நடத்திய பெரும் மோசடியில் மத்தியப் பிரதேச முதல் மந்திரியின் மகனும் சம்பந்தப் பட்டிருக்கிறார் என்றார்.



● ஸ்டேட் பாங்க் மூலமாக விற்கச் சொன்ன பெரும்பாலான டிக்கெட்டுகளை பாங்க்காரர்கள் தங்களுக்குள்ளாகவே பங்கு போட்டுக் கொண்டு விட்டனராம்.

● இப்படி அடுக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் போது திருபூடாசிங் நாடாளுமன்ற உறுப்பினர்களை, பத்திரிகையாளர்களையும் கேட்டுக் கொண்டது

''ஏஷியாட்-82 என்னும் இந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் நாட்டின் கௌரவமே அடங்கியுள்ளது. எனவே இதை நல்ல முறையில் நடத்தித் தந்து வெற்றி பெறச் செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.''

## முன்னுதாரண அனுபவம்

டெல்லியில் சமீபத்தில் நடந்த தேசிய மகளிர் விளையாட்டு விழா, ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு ஒரு முன்னுதாரணம் என்றார்கள். அதைக்காண நேரில் சென்ற **சலன்** அனுபவங்கள்:

● புதுடில்லி நவநாகரிக தலைநகராக இருந்தாலும் ஆங்கிலம் பேசுவதை அறவே வெறுக்கும் மனிதர்கள் இங்கே அதிகம். கரோல்பாக் சென்றால்தான் தமிழும் ஆங்கிலமும் காதில் விழும். இந்த நிலையில் இந்தி தெரியாத நம் நாட்டவரும் வெளி நாட்டவர்களும் என்ன பாடுபடப் போகிறார்களோ! அதுவும் குறிப்பாக எல்லா ஸ்டேடியங்களிலும் ராணுவத்தினரே அதிகம் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னை பூதாகாரமாக வடிவெடுக்காது என்பது என்ன நிச்சயம்?

● தல்கட்டோரா கூடைப் பந்தாட்ட அரங்கத்தை விட்டு வெளியே வந்து பிரகதி மைதானம் செல்ல யாரை வழி கேட்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபொழுது டிராபிக் கைட் என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சிறு 'பூத்'தினுள் மூன்று சிறுமிகள் நின்றிருந்தார்கள். அவர்களிடம் சென்று ஆங்கிலத்தில் 'பிரகதி மைதானத்துக்கு இங்கிருந்து எந்த பஸ் போகு'மென்று கேட்டேன். 'கியா?' என்றார்கள். எனக்குத் தெரிந்த தோடா தோடா ஹிந்தியில் திரும்பவும் கஷ்டப்பட்டு என் கேள்வியை அவர்களுக்குப் புரிய வைத்தேன். 'நை' என்றார்கள். தெரியாது என்று சொல்வதற்கா இவர்களை இங்கு நிறுத்தியிருக்கிறார்கள்? இவர்களுக்கு ஒரு நாளைக்கு இவ்வளவு என்று பணம் வேறு உண்டாம்!

● ஆசிய விளையாட்டுப் போட்டியின் போது புதுதில்லிக்கு வந்து சேரும் கூட்டம் கணக்கிலடங்காத அளவுக்கு இருக்கும். என்ன தான் மேம்பாலங்களையும், ரோடுகளையும் அமைத்தாலும் ஒரு ஸ்டேடியத்திலிருந்து மற்றொரு ஸ்டேடியத்துக்குச் செல்லப் போக்குவரத்து வசதிகள் சரியில்லை எனில் திண்டாடிப் போய்விடுவோம்.

● டில்லியில் நடைபெற்ற முதல் ஆசிய விளையாட்டுப் போட்டியைக் கண்டவர் 87 வயதான ஸ்வாமி ஜகன்னாத். ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரில் 1936ம் வருடம் நடைபெற்ற பதினோராவது ஒலிம்பிக் போட்டியில் இந்தியக் குழுவுக்குத் தலைவராகவும், இந்திய ஒலிம்பிக் ஹாக்கி குழுவிற்கு மானேஜராகவும் சென்றார். இவர்தான் இன்று ஹாக்கி நடுவர்களிலேயே அனுபவம் வாய்ந்த உலக ஹாக்கி நடுவராக இந்தியாவில் இப்பொழுது வாழ்பவர். இந்த ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தொழில் நுட்பச் சிறப்புக் குழுவில் ஓர் உறுப்பினராக உள்ளார்.

● ஆசிய கிராமம் எனப்படும் குடியிருப்புக்களை விளையாட்டுப் போட்டிகளுக்குப்பிறகு யார் அனுபவிக்கப் போகிறார்கள் என்ற போட்டி இப்பொழுதே தொடங்கிவிட்டது. ஒவ்வொருவரும் அந்தக் கிராமத்தில் தனக்கு ஒரு வீடு என்னுமளவுக்குப் பிரச்னை வளர்ந்து கொண்டு வருகிறது.

தொகுப்பு: **டி. ஆர். ரமேஷ்**

உதவி : **யு. எஸ். நடராஜன் ஐ.ஏ.எஸ்.**
**விளையாட்டுத் துறை இயக்குநர்**


மங்கையர் மலர்
நவம்பர் '82
தீபாவளிச் சிறப்பிதழ்
படித்துவிட்டீர்களா?




● ''கள்வனின் காதலி''யை மறுபடியும் படிக்க மிகவும் இன்பமடைகிறேன். பூங்குளம் கிராமம், புஷ்பங்கள் வர்ணனையில் ''மங்களகரமான மஞ்சள் நிற''ப் பூக்கள் என்பதில் ஒலிக்குறி (quotation mark) போட்டதன் அர்த்தம் இன்றைய தலைமுறைக்குத் தெரியாது இருக்கலாம். கல்கி அவர்கள் இக்கதையை விகடனில் எழுதிய காலத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நிற ஓட்டுப் பெட்டி கொடுக்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் மஞ்சள் பெட்டியைத் தேர்ந்தெடுத்தது. தேசியவாதியான கல்கி தமது வர்ணனையில் 'மங்களகரமான மஞ்சள் நிற'த்துக்கு முக்கியத்துவம் தந்து குறிப்பிட்டிருக்கிறார்!

சென்னை-40 ரா. கிருஷ்ணமூர்த்தி

● டி. வி.யை வைத்து சாருகேசியும், மாட்டை வைத்து ஜே. எஸ். ராகவனும் கோவில் 'கைடை' வைத்து பட்டுக்கோட்டைப் பிரபாகரும் எட்டு அஷ்டபுஜத்தை வைத்து அகத்தியனும் அட்டகாசமாய் ஆளுக்கொரு பக்கமாகப் பிய்த்து உதறிவிட்டார்கள்.

சென்னை-5 எஸ். வி. ராஜசேகர்

● சௌகார் ஜானகியிடம் கேட்கப்பட்ட கேள்விகள் ஆறும் அதற்கு அவர் அளித்துள்ள பதில்களும் சிம்பிளாகவும், சுவையாகவும், சிந்திக்க வைப்பதாகவும் இருந்தன.

சிவகாசி கே. ராகவன்

● ஸ்ரீகாந்த் — சிவராம கிருஷ்ணனால் கிடைத்த இரட்டிப்பு மகிழ்ச்சியை கடைசிப் பக்கத்தில்தானா வெளிப்படுத்துவது? அட்டையில் — அழகு வண்ணத்தில் வெளிப்படுத்தியிருக்கலாமே!

மதுரை-16 ஆர். சாயிராம்

● பிள்ளையாரப்பனின் பல்வேறு திருநாம அருமைகளைப் பற்றியும் பெருமைகளைப் பற்றியும் தெளிவாக வர்ணித்த படக் கதையான ''சரணம் கணேசா'' பதினைந்து வாரங்களாக எங்களை பக்தி மழையில் நனைய வைத்தது. ரா. கணபதி — வாண்டு மாமாவின் கை வண்ணமும் 'வினு'வின் தூரிகை வண்ணமும் வெகு நேர்த்தி போங்கள்!

புதுவை கேசவ சேகர்

● இன்றைய கல்கி தலையங்கம் கண்டேன். அதர்மக் கொள்கையும் அநியாய வரி விதிப்பும் ஒருபுறம் இருக்க, நெஞ்சை நெருடுகிற வேறொரு செய்தியையும் தந்திருக்கிறீர்கள். மொலாஸஸ்—வண்டல் தேங்குவதால் நீர் நிலைகளே பாழாகும் எனில் அதன் இணைப் பொருளான சாராயத்தைப் பருகுவதால் எத்தனை வயிறுகள் பாழாகும்? இந்த அவலத்தை யார் போக்கப் போகிறார்கள்?

சென்னை-78 சுப்ர. பாலன்

● ஆளுநரின் அனுபவங்கள் சுவையானவை. அவர் தைரியமாக எடுத்த முடிவுகள் பாராட்டுக்குரியவை. அவரது திறமையை நன்கறிந்து அவரைத் தமது மந்திரி சபையில் முதன் முதலாக 1952ல் சேர்த்துப் பயிற்றுவித்த ராஜாஜி அவர்களை எவ்வளவு போற்றினாலும் தகும். அவரால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் ஒரு நாளும் சோடை போனதில்லை.

சென்னை-4 வெ. முத்துகிருஷ்ணன்


● யதார்த்தமான சுஜாதாவின் குமரி மாவட்டத் தமிழும் நாவலுக்கு ஏற்றாற் போன்று அட்டகாசமாக ஜெ ஓவியங்களும் போட்டி போடுகின்றன.

மேலகிருஷ்ணன்புதூர் பிரபா லிங்கேஷ்

● பதினைந்து வாரங்களில் ''சரணம் கணேசா'' மூலம் விநாயகரின் பெருமைகளை நன்கு அறிந்தோம். பல பயனுள்ள கருத்துக்களை வழங்கிய ரா. கணபதி அவர்களுக்கும் ஓவியர் வினு அவர்களுக்கும் பாராட்டுக்கள்.

ஊத்தூர் வெளிக்கடை ராஜன்

## தலையங்கம் தொடர்பாக



கல்கி 7–11–82 இதழ் வெளியான அன்றே ஃபோன் செய்து தலையங்கம் தொடர்பாக இரு விஷயங்களைத் தெளிவுபடுத்தினார் பொள்ளாச்சி திரு நா. மகாலிங்கம்.

(1) ஆல்கஹால் மீது இருந்த லிட்டருக்கு ரூ. 14.28 உற்பத்தி வரியை அண்மையில் தமிழக அரசு கணிசமாகக் குறைத்து விட்டிருக்கிறது.

2) மேற்படி அதீத வரி தொழில் துறைக்குப் பயன்படும் ஆல்கஹாலுக்கு மட்டுமே விதிக்கப்பட்டு வந்தது. சாராய உற்பத்திக்கான ஆல்கஹாலுக்கு லிட்டருக்கு ரூ. 3தான் உற்பத்தி வரி. ஆனால் சாராயக் கடை ஏலம் விடும் முறை காரணமாக லிட்டர் ரூ. 20க்குச் சாராயம் விற்கப்படுகிறது. இந்த விலை தந்து பலர் வாங்க முடியாததால்தான் கள்ளச் சாராயம் பெருக்கெடுக்கிறது.

# ரூபாய்க்கு மூணு கொலை!

**வியட்நாம் வீடு சுந்தரம்**

(அப்பாவி அப்பு ஆபீஸில் உள்ள மற்றவர் வேலைகளையும் தானே செய்ய ஃபைல்களை வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறான். மனைவி சாவித்திரியின் கோபத்துக்கும் ஏளனத்துக்கும் ஆளாகிறான். ரஞ்சித் அப்புவைக் காணவருகிறான்.)

ரஞ்சித்: என் வேலையைச் சரியாச்செஞ்சிருக்கல்ல?

அப்பு: என்னப்பா அப்பிடிக் கேக்கற? ராத்திரி ரெண்டு மணி வரைக்கும் கண்ணு முழிச்சு செஞ்சேம்பா.

ரஞ்: சரி! ஆபீஸ்ல பாக்கறேன் வரேன்.

சாவித்திரி: (பொறுமையிழந்து): நல்லாயிருக்குங்க. ராத்திரிப் பூராக் கண்ணு முழிச்சு நீங்க ஃபைல் பாத்திருக்கிங்க. கஷ்டம் உங்களுக்கு. பிரமோஷன் அவருக்கா? மரியாதைக்கு ஒரு தாங்க்ஸ் கூட சொல்லாமப் போறார் பாத்தீங்களா?

ரஞ் (திரும்பி): சாரி மிஸஸ் அப்பு. அப்பு ரொம்ப தாங்க்ஸ்ப்பா. அ... சொல்ல மறந்திட்டேனே. நாளைக்கு நம்ம பாங்க் சேர்மன் வராரு. ரிக்ரியேஷன் கிளப் சார்பில பாஞ்சாலி சபதம் நாடகம் போடப் போறோம். நம்ம லேடி மானேஜர் நெல்லூர் அருந்ததிதான் பாஞ்சாலி.

அப்பு: ரொம்ப வயசான பாஞ்சாலியா இருப்பாங்களே!

ரஞ்: துச்சாதனன் வேஷம் போடற மூக்குறுஞ்சி சீனு வரலே. அவனுக்குப் பதிலா நீதான்....

அப்பு: மூக்குறுஞ்சணுமா?

ரஞ்: துச்சாதனன் வேஷம் போடணும்.

அப்பு (அதிர்ந்து): எனக்குத் தெரியும். நீ வர்ரப்பவே. ஏதோ வம்புல மாட்டப் போறேன்னு. இத பாரு. எனக்கு நாடகமெல்லாம் வேணாம். அதோட உனக்கே தெரியும். சாயந்திரத்தில நான் முக்கியமான பார்ட் டைம் வேலைக்குப் போகணும்னுட்டு.

ரஞ்: அந்தக் கதையே வேணாம். நம்ம லேடி மானேஜரைப் பத்தி உனக்கே நல்லாத் தெரியும். ஏற்கனவே உன்னே மட்டந் தட்டுவாங்க. இப்ப நீ நடிக்கலேன்னு... உன் பார்ட் டைம் வேலையையேஇனிமே ஃபுல் டைம்மாச் செய்ய வேண்டி வரும்.

அப்பு: நான் அதுக்குச் சொல்லலே. மகாகவி பாரதி எழுதிய ஜீவனுள்ள பாஞ்சாலி சபதம். அதை நான் நடிச்சுச் சாகடிக்கணுமா?

ரஞ்: பாரதியாரோட பாஞ்சாலி சபதத்துக்கும் இதுக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது. நம்ம லேடி மானேஜரே வசன நடையிலே எழுதினது. அவங்க பெருமைக்குச் செய்யறாங்க.

அப்பு: நீ என்ன வேஷம்?

ரஞ்: நான்தான் சகுனி. நம்ம பியூன் பரந்தாமன்தான் துரியோதனன்.

அப்பு: போச்சு. இங்கதான் நீங்க தப்பு பண்றீங்க. பரந்தாமன் யூனியன்ல தீவிரமானவன். நாடகம் பத்து நிமிஷம் லேட்டா முடிஞ்சாக் கூட ஓவர்டைம் கேப்பான்.

ரஞ்: வேற வழியே கிடையாது. நம்ம ''கொக்கிப் பல்'' வசந்த் தான் பீமன். நீ எதைப் பத்தியும் கவலைப்படாதே. மேடையில என்னைக் கவனி. நான் கண்ணடிச்சதும் நீ பாட்டுக்குத்துகிலுரிஞ்சுக் கிட்டே போ...

அப்பு: எனக்கென்னவோ பயமா இருக்குப்பா. முன்னொரு தடவை ஒரு நாடகத்திலே நான் நடிக்கப் போயி என் பேரிலே கேஸ் போட்டுட்டாங்க! நல்ல வேளை நம்ம ஹவுஸ் ஓனர் வக்கீல் வராக சாமி திறமையிலே தப்பிச்சேன்.

ரஞ்: அட, உன் சார்பில் வாதாடிக் காப்பாத்தினரா?

''மேடம்! என்னை விட்டுடுங்க எனக்குப் பயமாயிருக்கு...''





⌘ ''உன்னிகிருஷ்ணன்! டயலாக்கெல்லாம் சரியா ஞாபகமிருக்கா?''
''எனிக்கோ? ஞாபக மறதியோ? எந்துவேஷம்?''

அப்பு: இல்லே இல்லே..., என் மேலே வழக்குப் போட்டவங்க சார்பா வாதாடிணு. நான் தப்பிச்சிட்டேன்!

(ரஞ்சித்தும் சாவித்திரியும் திகைத்து நிற்க அப்புவின் அறிமுகப்படலக்காட்சி முடிகிறது.)

**காட்சி 2**

[நாடக மேடையில் ஒப்பனை அறை. காட்சியில் பங்கேற்பவர்கள் பாங்க் மானேஜர் நெல்லூர் அருந்ததி, அப்பு, ரஞ்சித், சகஊழியர் உன்னிகிருஷ்ணன்]

அப்பு: (மானேஜரிடம் கைகளைப் பிசைந்தபடி) மேடம்... தயவு செஞ்சு நான் சொல்றதைக் கேளுங்க. இப்பக்கூட ஒண்ணும் குடிமுழுகிப் போயிடலே. என்னை விட்டுடுங்க. எனக்குப் பயமாயிருக்கு. எனக்குப்பதில் வேற யாரையாவது டிராமாவிலே நடிக்கச் சொல்லுங்க.

அருந்ததி: ஷட் அப். நீ நடிக்கலேன்னு உன்னை லேசிலே விடமாட்டேன். நீதான் துச்சாதனன்.

[அப்போது கிருஷ்ணர் வேஷத்தில் சக ஊழியர் உன்னி கிருஷ்ணன் அங்கு வருகிறார்.]

உன்னி கிருஷ்ணன்: எடோ அப்பு. வேகம் வாடா. டிராமைக்கு நேரமாச்சு.

அப்பு (வியப்புடன்): அட.... உன்னிகிருஷ்ணு! நீயா கிருஷ்ணன் வேஷம் போட்டிருக்கே?

உன்னி: அதே...

அரு: மிஸ்டர் உன்னிகிருஷ்ணன்! டயலாக்கெல்லாம் கரெக்டா ஞாபகமிருக்கா?

உன்னி: எனிக்கோ? ஞாபக மறதியோ? எந்து வேஷம்?

ரஞ்: கிழிஞ்சது போ...



⌘ ''இடியட்! உன்னால என் மானமே போச்சு! கேவலம் ஒரு டிராமாவிலே கூட தப்புப் பண்ணாம நடிக்க முடியலை...சே!''

உன்னி: எவ்வட.... எவ்வட (ஆடையைப் பார்க்கிறார்.)

ரஞ்: உன்னி கிருஷ்ணு! பரமாத்மா! மர மாட்டமா நிக்காதடா!

உன்னி: எடோ! டிராமையில் நோக்கடா? ஞான் எத்தனை ஸ்டைலாயிட்டு வெண்ணெய் தின்னும்!

ரஞ்: நீ வெண்ணெய் திங்கற கிருஷ்ணன் இல்லேடா. துணி குடுக்கற கிருஷ்ணன்.

அரு: மிஸ்டர் ரஞ்சித்! எனக்கென்னவோ இவங்க பேர்ல நம்பிக்கையில்லே. நீங்க தான் எப்படியாவது நாடகத்தை நல்ல படி நடத்தித் தரணும். அப்பத்தான் இந்த வருஷம் உங்களுக்கு பிரமோஷன்.

(அருந்ததி போகிறாள்.)

ரஞ்: (அப்பு மற்றும் நண்பர்களிடம் கெஞ்சலாக): டேய்... கேட்டீங்களாடா?கொஞ்சம் சிரமப்பட்டு ஒத்துழையுங்கடா.

(மணி அடிக்கும் சத்தம். பயப்படும் அப்புவை இழுத்தபடி மேடைக்கு ஓடுகிறான் சகுனி ரஞ்சித்.)


### காட்சி 3

[நாடக மேடையின்பின்புறம்.கோபமாக அருந்ததி. எதிரே அப்பு, ரஞ்சித், மற்றவர்கள்]

அரு: இடியட். உன்னால என் மானமே போச்சு. கேவலம் ஒரு டிராமாவிலேகூட தப்புப் பண்ணாம நடிக்க முடியலே. சே...

ரஞ்: மேடம்... டிராமாவிலே அப்பு மட்டுமா தப்புப் பண்ணினார். எல்லாரும் குழப்பமா இருந்தோம். நீங்களே சொல்லுங்க. இன்னி வரைக்கும் ஆபீஸ் வேலையில அப்பு எந்தத் தப்பாவது செஞ்சிருக்காரா?

அப்பு: மேடம் என்னை மன்னிச்சுடுங்க. ஆபீஸ்ல எனக்குத் தேவையில்லாத வேலையெல்லாம் என் தலை மேலே சுமத்திக்கிட்டு செய்யறேன். அதுக்காக ஒரு பிரமோஷனோ, இன்கிரிமெண்டோ எதையாவது எதிர்பார்த்திருக்கேனா?




''இப்போ நடிக்க வருகிறவர்களிடம் 'ஸ்டாண்டர்டே' இல்லே.''

''ஆமாம். 'அம்பாசிடர்' தான்இருக்கிறது.'' —பிரியா பாலு

அரு: உன்னால வாழ்க்கையில் உயரவே முடியாது உன்னைப் பத்தி உனக்கே நல்லாத் தெரியும்.

அப்பு: என்னைப் பத்தி நானே தெரிஞ்சுக்கறப்ப பெரிய மகாத்மாவாயிடுவேன் மேடம்.

அரு: உனக்குத் தாழ்வு மனப்பான்மை!

ரஞ்: என்ன மேடம் சொல்றீங்க? தழைஞ்சு போனா அதுக்குப் பேர் தாழ்வு மனப்பான்மையா?

அரு: மிஸ்டர் ரஞ்சித். நீங்க அப்புவுக்காக பரிஞ்சு பேசறது வேஸ்ட். அப்பு ஒரு கோழை. தன்னம்பிக்கை இல்லாத ஜந்து.

அரு (மற்றவர்கள் நகர்வதைப் பார்த்து) எங்க போறீங்க? உங்களுக்கெல்லாம் தெரியாததைப் புதுசா நான் என்ன சொல்லிட்டேன். (அப்புவிடம்) உன் கூட வேலை செய்யறவங்கள்ளாம் நல்ல நிலைமையில இருக்கறப்ப, நீ மட்டும்முன்னேறாததற்குக் காரணம்...

அப்பு: என் நேர்மை.

அரு: இல்லே. உன் கையாலாகாத கோழைத்தனம்.

அப்பு: மேடம் வர வர நீங்க ரொம்ப மட்டம் தட்டிப் பேசறீங்க. எனக்கும் உணர்ச்சிகள் இருக்கு மேடம். நானே வந்து டிராமாவில நடிக்கறேனு சொன்னேனா? நீங்கதானே கேட்டீங்க. என்னால முடியாத காரியத்தைச் செய்யச் சொல்லிட்டு அப்பறமா மட்டந்தட்டறதிலே என்ன லாபம்?

அரு: முடியாதுங்கற வார்த்தையே கிடையாது. தன்னால எதுவும் முடியும்னு சொல்றதுக்குப் பேர்தான் தன்னம்பிக்கை.

அப்பு: தன்னாலே முடியும்னு சொன்னா அதுக்குப் பேரு தன்னம்பிக்கை. தன்னால தான் முடியும்னு சொன்னா அதுக்கு பேர் தலைக் கனம்.

அரு: இதில ஒண்ணும் குறைச்சல் இல்லே. ஆபீஸ்ல எந்த வேலைய நீ ஒழுங்காச் செஞ்சிருக்கே?

அப்பு: மனச்சாட்சி இல்லாமப் பேசறீங்களே? நேத்திக்கு நம்ம பாங்க்ல ஆக்டிங் கா.ஷியர் யாருக்கோ இரண்டாயிரம் ரூபா அதிகமாக் குடுத்திட்டாரு. என்ன செய்யறதுன்னு தெரியாம குழம்பிப் போய் என்னை நீங்க கூப்பிட்டப்ப... நான்தான மேடம்....

(பாங்க் சேர்மன்உள்ளேவர பேச்சை மாற்றிப் பழியை அப்பு தலையில் போட்டுப் பேசுகிறாள் அருந்ததி.)

அரு: அ....அ.... சமயத்தில நான் மட்டும் உன்னைக் கூப்பிட்டுத் தவறைக் கண்டு பிடிக்கலேன்னா பணம் மட்டுமா போயிருக்கும்? பாங்க்கோட மானமே போயிருக்குமே..... வாங்க மிஸ்டர் சேர்மன் (அப்புவைக் காட்டி) இவர்தான் நேத்து ஆக்டிங் காஷியரா இருந்து பணத்தைக் கோட்டை விடப் பார்த்தவர். அதத் தான் கூப்பிட்டுக் கண்டிச்சுட்டிருக்கேன்!

(தொடரும்)



# "பதினைந்து வருடங்கள் ஆனாலும் எங்கள் மெத்தை புத்தம் புதிது போல் இருக்கிறது."

"எங்களுக்கு திருமணம் ஆகி 15 இனிய வருடங்கள் ஆகிவிட்டன. எல்லா இன்ப துன்பங்களிலும் இணைந்தே சென்றோம். ஆனாலும் வெற்றியுடன் மீண்டு வந்திருக்கிறோம். உளம் கவர் பரிசுகளும் உண்டு—இரண்டு இரட்டைவால் குழந்தைகள். அவர்கள் அடிக்கும் லூட்டியோ! மெத்தை மீது எந்நேரமும் விளையாடிக் கொண்டிருப்பார்கள்—குதித்தல், தள்ளி விடுதல், குத்துச்சண்டையிடு தல். நல்ல காலம்! இந்த மெத்தை நன்றாக உழைக்கிறது."

"ட்யூரோப்ளெக்ஸ்"

- ஆஸ்டிரியாவின் தொழில் நுட்பத்தின் புரட்சிகரமான படைப்பு.
- இம்மெத்தையில் ரப்பரால் மூடப்பட்ட கோடிக்கணக்கான தென்னை நார் ஸ்பிரிங்குகள் இருப்பதால் உங்கள் முதுகுக்கு நேரான பக்க பலம் கிடைக்கிறது.
- இதில் அமைந்துள்ள பல்லாயிரக் கணக்கான துவாரங்கள் உண்மையிலேயே சுவாசிப்பதால், நீங்கள் உறங்கும் போது உஷ்ண காற்று உள்ளேயே இருப்பதற்கு வாய்ப்பில்லை.
- இது ஈரம் உறிஞ்சாது; சுத்தம் செய்யலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக விலையும் மலிவானது. ஆடம்பரம் உண்டு ஆயின் டாம்பீகமில்லை.

ASP/DCI-8213

1967லிருந்து உழைக்கின்ற ரப்பர் கொண்ட தென்னை நார் மெத்தைகள் தயாரிப்பவர்கள் அளிக்கும்.

## duroflex
mattresses

ட்யூரோப்ளெக்ஸ் காயர் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்.

ரெஜிஸ்டர்ட் ஆபீஸ்: கஸ்காம் அல்லேப்பி 688001 கேரளா போன்: 2187/3213

சேல்ஸ ஆபீஸ: 21 காமதேனு அன்னெக்ஸ எம். ஜி. ரோடு, பெங்களூர்-560 008. போன்: 52172

ட்யூரோப்ளெக்ஸ ஷோரூம்கள்

- சென்னை 235ஏ, அண்ணாசாலை, (மௌண்ட் ரோடு) அண்ணா ப்ளை ஓவர் அருகில் தேனாம்பேட்டை சென்னை-600 006. போன்: 444981
- கோயம்புத்தூர் 195E, க்ராஸகட் ரோடு, கோயம்பத்தூர் 640012
- பெங்களூர் 1/17, கே. எச். ரோடு (டபுள் ரோடு) பெங்களூர்-560 027

தமிழ்நாடு முழுவதும் ஸ்டாக்கிஸ்டுகள் உண்டு.



''படம் போட்டுப் பரிசு வாங்கியிருக்கிறேன்''



''மௌத் ஆர்கன் கூட வாசிப்பேன்!''

# அது ஊனத்தை வென்ற மகிழ்ச்சி

சென்னை அண்ணா நகர் எஃப் பிளாக் பகுதியில் இருக்கும் அந்த வீட்டின் மாடி ஏறிச் சென்றபோது அந்தச் சிறுவன் வெகு சுவாரஸ்யமாய்க் கேரம் போர்டு ஆடிக்கொண்டிருந்தான், தன் அண்ணனுடன்.

நிறைய காயின்களைப் பாக்கெட்களில் தள்ளினான்.

இடது காலால்தான்.

காரணம்—

அந்தச் சிறுவனுக்குக் கைகள் இரண்டும் கிடையாது.

அவனுக்குப் பிறந்தது முதலே கைகள் இரண்டும் வளரவில்லை.

ஸ்ரீராம் — இது அவன் பெயர்.

வயது பதினொன்று.

அண்ணாநகர் விவேகானந்தா வித்யாலயாவில் மூன்றாம் வகுப்புப் படிக்கிறான்.

எதையும் ஒரு முறை சொன்னால் போதும் சட்டெனப் பிடித்துக் கொள்கிறான்.

தரையில் நோட்டுப் புத்தகத்தை வைத்து இடது காலில் பென்சிலைப் பிடித்து மிக இலகுவாக எழுதுகிறான்; படம் போடுகிறான்.

படிப்பிலும் சுட்டி; வகுப்பின் புத்திசாலி மாணவர்கள் லிஸ்டில் இடம் பிடிக்கிறான். இவன் வரைந்த சித்திரத்துக்கு விஸ்வ ஹிந்து பரிஷத் நடத்திய பள்ளிகளுக்கிடையேயான ஓவியப் போட்டியில் முதல் பரிசு!

பிறந்தது கோயம்புத்தூரில்.

இவனுக்கு இதயம் கொஞ்சம் பலவீனமானது. இந்தத் தொந்தரவு இன்னமும் இருக்கிறது. எனவே, பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என இவன் பெற்றோர் முடிவு செய்தனராம். அப்படியே பள்ளிக்கு அனுப்பினாலும், 'மற்ற மாணவர்கள்இவனிடம் எப்படி நடந்து கொள்வார்களோ' இவனுக்கு ஒருவிததாழ்வு மனப்பான்மை வந்துவிடுமோ, என்ற தயக்கம் வேறு.

எனவே வாய்மொழியாக நிறையச் சொல்லிக் கொடுத்தார்களாம்.

சின்னஞ் சிறு கையால் எழுத முயன்று, அது முடியாமல் விட்டு விட்டானாம்.

ஒரு பத்திரிகையில் ஊனமுற்றோர்பாதுகாப்பகமான 'மித்ரா' பற்றி வெளியான கட்டுரையைப் படித்துவிட்டு, 'மித்ரா'வை இவன் பெற்றோர் அணுக, அங்கே மூன்று மாதம் இருந்தான். மித்ராவை' நிர்வகித்து வரும் ஆஸ்திரேலியப் பெண்மணி சிஸ்டர் மேரி தியோடர் 'ஸ்ரீராமின் ஊனம் உடலளவில்தான்; மூளை வளர்ச்சியில் எவ்விதக் குறையும் இல்லை; சொல்லப் போனால், சராசரிக்கு அதிகமான புத்திசாலிப் பையன். எனவே, இவனை மற்ற மாணவர்களுடன் சேர்ந்து ரெகுலர் ஸ்கூலிலேயே படிக்க வையுங்கள்' என அறிவுரை சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீராமின் பெற்றோர் தம் வீட்டுக்கு அருகில் உள்ள விவேகானந்த வித்யாலயாவை அணுகினர்.

அதன் தலைமை ஆசிரியர், ''ஒரு வாரம் ஸ்ரீராம் பள்ளிக்கு வரட்டும். அவன் மற்றவர்களுடன் பழகும் விதம், மற்ற மாணவர்கள் இவனிடம் பழகும் விதம் இவற்றைக் கவனித்து முடிவு செய்யலாம்'' என்றார்.

ஒரு வாரத்துக்குப் பின் திருப்திப்பட்டுச் சேர்த்துக் கொண்டு விட்டார்.

கூடுமானவரை ஸ்ரீராம் தன் வேலைகளைத் தானே கவனித்துக் கொள்கிறான்.

தன் பையில் தானே புத்தகங்களை அடுக்கிக் கொள்கிறான். பையிலிருந்து புத்தகங்களை எடுத்துப் பக்கம் புரட்டி, படிக்கிறான். எல்லாம் கால்களால்.

ஸ்கூலில் உணவை எடுத்துச் சாப்பிடுகிறான் சிறிய கையின் உதவியால்.


கிரிக்கெட் பிடித்த விளையாட்டாம்; கிரிக்கெட் சீசனில் ரேடியோ, டி.வி.யை விட்டு நகர மாட்டானாம்.

இவை மட்டுமில்லை—

குட்டிக் கையில் 'மௌத் ஆர்கனை'ப் பிடித்து நன்றாய் வாசிக்கிறான்.

**எஸ். சந்திரமௌலி**
போட்டோ: **ரமணி**

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy. Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran



# அமிர்தாஞ்சன் அறியும் ஜலதோஷத் தொல்லைகளை

ஜலதோஷம் என்றாலே தாங்க முடியாத தொல்லைதான். அதைப்போக்க சுலபமான வழி, அமிர்தாஞ்சன். சிறிதளவு அமிர்தாஞ்சன் எடுத்து மூக்கிலும், தொல்லைதரும் இடங்களிலும் தேயுங்கள். ஜலதோஷத்திலிருந்து இதமான உடனடி நிவாரணம் கிடைக்கும்.

அமிர்தாஞ்சன் மற்ற மருந்துகளைப் போலல்ல. அமிர்தாஞ்சனில் உள்ள சக்திமிக்க 10 மருந்துப் பொருட்கள் உடனடியாக செயல்புரிந்து ஜலதோஷத்திலிருந்து உங்களுக்கு துரிதமாக நிவாரணம் அளிக்கின்றன. தீங்கு செய்யும் பின் விளைவுகள் எதுவுமில்லை.

85 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்வாய்ந்த அமிர்தாஞ்சன் சுளுக்கு, உடல்வலி மற்றும் தலைவலி இவற்றிலிருந்தும் சிறந்த நிவாரணம் அளிக்கிறது.

எப்போதும் அமிர்தாஞ்சன் உங்கள் கைவசம் இருக்கட்டும். ஏனெனில் அது எப்போது தேவைப்படுமென்று சொல்ல முடியாது.



**அமிர்தாஞ்சன்**

துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது. தீய பின்விளைவுகள் இல்லாதது.

OBM 7654 TM

REGISTERED NO. M. 4362
Registered as a Newspaper in Sri Lanka

# இப்போது! இந்தியாவிலே!
# சிகப்பழகு தரும் உலகுபுகழ்க் கண்டுபிடிப்பு!
# கிளியர்·டோன்

சருமத் தெளிவுடன் சிகப்பழகு தரும் ஒரு சிறப்புப் பொருள் அடங்கியது.

கதிரொளி பட்டுக் கறுக்காமல் தடுக்கும் வெப்பில் மதிப்பு சாதனம் உள்ளடக்கம்.



மாசுமறு நீக்கும் விஞ்ஞான அமைப்பிலக்கணம் (ஃபார்முலா)

சரும செழிப்புக்கான ஈரவளப்பச் சத்து இதில் மிகுதி

## பரிபூரண சிகப்பழகு சாதன க்ரீம்

கனவு பலித்தது! பொன்வண்ணம் மேனியீது பூக்க— செவ்வழகு செழிக்க, இதோ **கிளியர்-டோன்** — பாரெங்கும் பல கோடி அழகு மாந்தர் பல நாட்டினர் வேளாவேளை பயன்படுத்தும் சிகப்பழகு க்ரீம்.

**கிளியர்-டோன்** — பன்னாட்டுலக மருத்தாராய்ச்சிப் பயனும்—விஞ்ஞான ஆக்கமுறைச் சிகப்பழகு க்ரீம்— இதனை இப்போது உங்களிடம் கொணருவோர் நிகோலஸ் லெபாரட்டரீஸ் இந்தியா லிமிடெட்.

சருமத் தெளிவுடன் சிகப்பழகு மலர்வைக்க கிளியர்டோன் க்ரீமில் இருப்பதென்ன— இந்தியாவில் கிடைக்கின்ற வேறெந்த க்ரீமிலும் இல்லாத ஒரு சிறப்புப் பொருள்; பலநாட்டுலகிலும் ஏற்புப் பெற்ற ஃபார்முலா.

இயற்கையோடு இயற்கையாய்ச் செயல்படும் **கிளியர்-டோன்** அழகு 'செப்பாக்குது' உங்கள் மேனியை, நீக்குது மாசுமறுக்களை. க்ரீம் இதன் விஞ்ஞான அமைப்பிலக்கணமே.

சூரிய ஒளியிலுள்ள கேடான அல்ட்ரா — வயலெட் கதிர்களை உடம்பின் மேல் பட விடாமல் தடுத்துக் காத்திடுகிறது மேனி கறுக்கா வண்ணம். அதோடல்ல, உங்கள் சருமத்திற்குத் தேவைப்படும் மழமழ ஈரத் தாதனப்பை வரவழைக்குது **கிளியர்-டோன்**. பாசிர் வண்ணமாறுதல்— வேளை தவறாமல் 6 வாரம் **கிளியர்-டோன்** உபயோகிக்கும் பலன்கள் ஒகோ பார்த்துப் பூரித்தே போவீர்கள்!




**சிகப்பழகு ரகசியம்— இயற்கையாய் உமக்கே. கிளியர்·டோன்**

**லண்டன்·பாரிஸ்·நியூயார்க்.**

daCunha/NICL/3/81-TM